# ஆரோக்கிய
# உணவு ஊழியம்!

## எலன் உவைட்

தமிழாக்கம்

கீதா தேவராஜ்

# பொருளடக்கம்

## பகுதி 1

**சாட்சியாகமம் 7–ம் பாகத்திலிருந்து —ஆரோக்கிய உணவுகள் 5**

1. பட்டணங்களில் மருத்துவ மிஷனரி வேலை 5
2. உணவக ஊழியம் 9
3. ஆரோக்கியமான உணவுகள் 18
4. ஆரோக்கிய உணவுகளின் உற்பத்தி 21
5. மக்களுக்குக் கற்பியுங்கள். 26

## பகுதி 2

**ஆரோக்கிய உணவுப் பணி! 32**

6. 1934 தொகுப்பிற்கான அறிமுகம் 32
7. கல்விக்கூடக் கைத்தொழிலாக 32
8. தொழிலாளர்களின் குணம் 37
9. விஸ்தாரமான தளம் 38
10. சுகாதாரமற்ற உணவுகளுக்கு தேவனுடைய மாற்றீடு 38
11. மனித கூட்டமைப்புகள் 40
12. சுகாதார உணவு வேலையில் தனியுரிமை இல்லை 40
13. தேவனுடைய சேவையின் ஒரு பகுதி 43
14. தேவன் நியமித்த வேலை 43
15. பகுத்தறிவுள்ள சீர்திருத்தம் 44
16. உரிமைகளைக்குறித்த ஒரு கேள்வி 45
17. எளிமையும் விலைகுறைவுமான உணவுகள் 46
18. அதிகரிக்கும் வெளிச்சம் 48
19. ஒரு முறையான கூட்டுமுயற்சி 49

20. விலை அதிகமில்லாத உணவுகள் 51
21. மன்னாவைப்போல 52
22. சுவிசேஷ ஊழியக்காரர்களுக்கான வேலை அல்ல 54
23. கொட்டை உணவுகளின் உபயோகம் 54
24. ஆரோக்கிய உணவு மேலாளர் 54
25. சுகாதார மையத்துடன் இணைந்ததாக 54
26. ஆரோக்கிய தொழிலில் இருக்கும் ஆபத்துகள் 55
27. நிச்சயமான தொடர்புகளை ஏற்படுத்துதல் 60
28. ஆரோக்கிய உணவு வேலையை
ஒரு ஆசீர்வாதமாக்குங்கள் 62
29. தீர்மானமான எச்சரிக்கை 64
30. மற்ற வேலைகளிலிருந்து ஊழியர்கள் எடுக்கப்படக்கூடாது 65
31. செயல்விளக்கத்தால் கற்பித்தல் 66
32. ஆரோக்கிய உணவு வேலைகுறித்த ஆலோசனைகள் 67
33. ஒரு சீர்திருத்தம் அவசியம் 70
34. லோமா லிண்டா பேக்கரி 71
35. ஒரு பொய்த்தோற்றமான சலுகை 77
36. உணவு உற்பத்தியில்
37. பெரிய முதலீடு செய்வதற்கெதிரான எச்சரிப்பு 79
38. ஆரோக்கிய உணவு வேலையின் இலக்கு 83
39. ஆரோக்கிய வேலையின் இறுதி நோக்கம் 86

## பகுதி 3

## இதர காரியங்கள்

40. பஞ்சம் அதிகரிக்கும்போது
41. உணவுகள் எளிமையாக்கப்படும் 87
42. வெவ்வேறு நாடுகளில்
அங்கங்கு விளைகிறவைகளிலிருந்து உணவுகள் 87
43. நம்முடைய உணவகங்கள் கொள்கைக்காக நிற்கவேண்டும் 89
44. ஆரோக்கிய உணவு வேலையின்
இறுதி நோக்கம் 89

# பகுதி 1

## சாட்சியாகமம் 7–ம் பாகத்திலிருந்து —ஆரோக்கிய உணவுகள்

"...வெறிக்க உண்ணாமல் பெலன்கொள்ள ஏற்றவேளையில் உண்..." பிரசங்கி 10:17.

## பட்டணங்களில் மருத்துவ மிஷனரி வேலை

**சான் பிரான்சிஸ்கோ, கலிபோர்னியா, டிசம்பர் 12, 1900.**

கலிபோர்னியாவில் ஒரு வேலை—விசித்திரமாக நெகிழப்பட்டுக் கொண்டிருக்கிற ஒரு வேலை செய்யப்படவேண்டியதிருக்கிறது. இந்த வேலை இதற்குமேல் தாமதப்படுத்தப்படவேண்டாம். சத்தியத்தை அறிவிக்க கதவுகள் திறக்கப்பட்டிருக்கும்போதே, நுழைவதற்கு நாம் ஆயத்தமாக இருக்கக்கடவோம். மிகப்பெரிய பட்டணமான சான் பிரான்சிஸ்கோவில் சில வேலை செய்யப்பட்டிருக்கிறது. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் நன்கு திட்டமிடப்பட்ட முயற்சிகள் இந்த பட்டணத்தின் வெவ்வேறு பகுதிகளிலும், ஓக்லேண்டிலும் எடுக்கப்படவேண்டும். சான் பிரான்சிஸ்கோவின் அக்கிரமம் உணரப்படவில்லை. இந்த பட்டணத்தில் நம் வேலை பரவலாக்கப்படவேண்டும். இரட்சிக்கப்படவேண்டிய அநேக ஆத்துமாக்களை தேவன் இங்கே பார்க்கிறார்.

சான் பிரான்சிஸ்கோவில் சுகாதாரமான உணவு விடுதி ஒன்றும் அதோடுகூட உணவு விற்பனைக்கூடமும், சிகிச்சை அறையும் திறக்கப்பட்டது. இவைகள் நல்ல வேலையை செய்துவருகின்றன. ஆனாலும் அதனுடைய செல்வாக்கு மிகவும் அதிகமாக விரிவாக்கப்படவேண்டும். மார்கெட் தெருவிலுள்ளதைப்போன்ற மற்ற உணவு விடுதிகள் சான் பிரான்சிஸ்கோவில் திறக்கப்படவேண்டும். இந்த காரியங்களில் இப்போது எடுக்கப்படும் முயற்சிகளைக்குறித்து: "ஆமென் ஆமென்" என்று சொல்லலாம். மக்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கக்கூடிய மற்றவேலைகளும் விரைவாக ஸ்தாபிக்கப்படும். மருத்துவ மிஷனரி சுவிசேஷ ஊழியம் விவேகமாகவும் முழுமையான முறையிலும் முன்கொண்டுசெல்லப்பட வேண்டும். ஆத்துமாக்களை

இரட்சிக்கும் பரிசுத்தமான பவித்திரமான வேலை மிதமாகவும் அதே சமயம் என்றைக்கும் உயர்த்தப்பட்டதாகவும் முன்னேறவேண்டும்.

உழைக்கும் வல்லமைகள் எங்கே? முழுமையாக மனந்திரும்பின ஆண்களும் பெண்களும், பகுத்தறியக்கூடிய கூரிய தொலைநோக்குப் பார்வையுள்ள ஆண்களும் பெண்களும் இதை இயக்குபவர்களாக இருக்கவேண்டும். விசேஷமான வேலையைச் செய்யும்படி மனிதர்களை வேலைக்கு அமர்த்தும்போது, —தேவனை நேசித்து, அவருக்கு முன்பாக சகல தாழ்மையிலும் நடந்துகொள்ளுகிற, மனிதர்களை உயர்த்தி அவர்களை இரட்சிக்கும் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்ற அவருடைய கரத்தில் வல்லமையான கருவிகளாக இருக்கக்கூடிய மனிதர்களை நியமிக்க நல்ல நிதானம் செயல்படுத்தவேண்டும்.

மருத்துவ மிஷனரி நற்செய்தியாளர்களால் மிகச் சிறந்த முன்னோடி வேலைகளைச் செய்யமுடியும். போதகரின் வேலை மருத்துவ மிஷனரி நற்செய்தியாளர்களின் ஊழியத்தோடு முழுமையாக கலக்கவேண்டும். ஊழியத்தைப்போன்று தன்னுடைய வேலையும் உயர்ந்தது என்று கிறிஸ்தவ மருத்துவர் கருதவேண்டும். அவரில் சுவிசேஷ ஊழியருக்கான தகுதியும், மருத்துவருக்கான தகுதியும் இணைந்து இருப்பதால், அவர் இரண்டு பொறுப்புகளை சுமந்துகொண்டிருக்கிறார். அவருடைய வேலை பிரம்மாண்டமான, பரிசுத்தமான மிக அத்தியாவசியமான வேலை.

மருத்துவரும் போதகரும் — இருவரும் தாங்கள் ஒரே வேலையில் ஈடுபட்டிருப்பதை உணரவேண்டும். அவர்கள் பூரணமான இணக்கத்தோடு உழைக்கவேண்டும்; ஒருமித்து ஆலோசிக்கவேண்டும். தங்களுடைய ஐக்கியத்தினால், சொந்த இரட்சகராக தம்மை நம்புகிற அனைவரையும் இரட்சிக்கும்படி தேவன் தமது ஒரே பேரான குமாரனை உலகத்தில் அனுப்பினார் என்பதற்கு அவர்கள் சாட்சி பகருவார்கள்.

சாதாரண மருத்துவரைவிடவும் விசேஷ வேலைத்திறமைகள் கொண்ட மருத்துவர்கள் பெரும் பட்டணங்களில் தேவனுடைய சேவையில் ஈடுபடவேண்டும். அவர்கள் உயர் வகுப்பினரைச் சந்திக்க நாடவேண்டும். இப்படிப்பட்ட ஊழியம் சான் பிரான்சிஸ்கோவில் சிறிது செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால் அதிகம் செய்யப்படவேண்டும். இந்த முயற்சிகளின் தன்மையையும் முக்கியத்துவத்தையுங்குறித்த தவறான புரிந்துகொள்ளுதல் இருக்கவேண்டாம். சான் பிரான்சிஸ்கோ மிகப் பெரிய இடம்; தேவனுடைய தோட்டத்தின் முக்கியமான பகுதியாகவும் அது இருக்கிறது.

சுவிசேஷ ஊழியத்தைச் செய்கிற மருத்துவ மிஷனரிகள், சக போதகர்களுடைய உழைப்பிற்கு ஒத்த உயர்ந்த வேலையை செய்கிறார்கள். இந்த ஊழியக்காரர்களால் முன்வைக்கப்படும் முயற்சிகள் ஏழ்மையான மக்களுடன் நின்றுவிடக்கூடாது. உயர் வகுப்பார் விநோதமாக நெகிழப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சத்தியம் முரண்பாடின்றி இருப்பதாலும், சுவிசேஷத்தின் உயர் குணங்களை உள்ளடக்கி இருப்பதாலும், வாழ்க்கையின் உயர் வகுப்பினரிடையே அநேகர் அதற்குச் செவிகொடுப்பதைக் காணமுடியும். இவ்விதமாக, சத்தியத்திற்கு ஆதாயப்படுத்தப்படும் திறமையுள்ள அநேகர், தேவனுடைய ஊழியத்தில் ஆற்றலுடன் நுழைவார்கள்.

நம்பிக்கையான இடங்களில் இருப்பவர்களை, யாரிடம் அவர் தமது விலையேறப்பெற்ற ஈவுகளைக் ஒப்படைத்திருக்கிறாரோ அவர்களை, தங்களுடைய அறிவுக்கடுத்த தாலந்துகளையும் சம்பத்துக்களையும் அவருடைய சேவையில் உபயோகப்படுத்தும்படி ஆண்டவர் அழைக்கிறார். ஏழைகளுக்கும் தேவையிலிருப்பவருக்கும் உதவவும், இந்த ஊழியத்தை உறுதியான அடிப்படையில் ஸ்தாபிக்கவும், நமக்கு என்ன தேவைப்படுகிறது என்பதைக்குறித்த நம்முடைய உழைப்பின் திட்டங்களை நம்முடைய ஊழியக்காரர்கள் அவர்கள்முன் தெளிவாக வைக்கவேண்டும். தேவனுடைய வேலையை முன்னேற்றும் பாதையில் சம்பத்துக்களை முதலீடு செய்ய இவர்களில் சிலர் பரிசுத்த ஆவியானவரால் உணர்த்தப்படுவார்கள். செல்வாக்கு ஏற்படுத்தும் மையங்களை பெரிய பட்டணங்களில் ஏற்படுத்த உதவுவதின்வழியாக அவர்கள் அவருடைய நோக்கத்தை நிறைவேற்றுவார்கள். விருப்பங்கொண்ட ஊழியர்கள் வெவ்வேறு மிஷனரி ஊழிய முயற்சிகளில் தங்களை ஒப்புக்கொடுக்க நடத்தப்படுவார்கள். சுகாதாரமான உணவகங்கள் நிறுவப்படும்; ஆனால் எப்படிப்பட்ட கவனத்துடன் இந்த வேலை செய்யப்படவேண்டும்!

சுகாதார உணவகங்களும் ஒரு கல்விக்கூடமாக இருக்கவேண்டும். ஆரோக்கியமான உணவுகளை ஆயத்தப்படுத்துவதில் முன்னேற்றம் கொண்டுவர இதோடு இணைந்துள்ள ஊழியர்கள் தொடர்ந்து படித்துக்கொண்டும், ஆய்வுசெய்துகொண்டும் இருக்கவேண்டும். போதிக்கும் இந்த வேலை சிறிய இடங்களைவிடவும் பட்டணங்களில் பெரிய அளவில் செய்யப்படலாம். ஆனால் சபை இருக்கும் அனைத்து இடங்களிலும் ஆரோக்கிய சீர்திருத்தக் கொள்கைகளோடு இணைந்து வாழ விரும்புகிறவர்களின் நன்மைக்காக, எளிய ஆரோக்கியமான உணவுகளை ஆயத்தம் செய்வதைக்குறித்து போதனைகள் வழங்கப்படவேண்டும். அங்கத்தினர்கள் இதைக்குறித்து தாங்கள் பெற்ற வெளிச்சத்தை தங்கள் சுற்றுப்புறத்தில் இருக்கும் நபர்களுக்கும் கொடுக்கவேண்டும்.

எவ்வாறு சமைக்கவேண்டும் என்பது, நம் பள்ளிகளில் இருக்கும் மாணவர்களுக்கு கற்றுத்தரப்படவேண்டும். இதைக்குறித்த கல்வியில் சாதுரியமும் திறமையும் கொண்டுவரப்படட்டும். வாலிபரின் பாதங்களை அழிவிற்கு நடத்தும் சோதனையின் பாதையில் திருப்ப, சாத்தான் அநீதியின் சகலவித வஞ்சகங்களோடும் கிரியை செய்துகொண்டிருக்கிறான். பசியில் திளைப்பதற்கேதுவாக ஒவ்வொரு திசையிலிருந்தும் வரும் சோதனையில் நிலைத்துநிற்பதற்கு அவர்களை பலப்படுத்தி உதவிசெய்யவேண்டும். ஆரோக்கியமாக வாழும் அறிவியலை அவர்களுக்குக் கற்றுத்தருவது ஆண்டவருக்கு செய்யும் மிஷனரி ஊழியமாகும்.

அநேக இடங்களில் சமையல் பள்ளிகள் நிறுவப்படவேண்டும். இந்த வேலை தாழ்மையாக ஆரம்பிக்கப்படலாம். ஆனால் அறிவுள்ள சமையற்காரர்கள் மற்றவர்களுக்கு போதிக்கத் தங்களுடைய மிகச்சிறந்த முயற்சிகளை எடுக்கும்போது, கர்த்தர் அவர்களுக்கு திறமையையும் புரிந்துகொள்ளுதலையும் கொடுப்பார். கர்த்தருடைய வார்த்தை "அவர்களை தடைபண்ணாதே; நான் என்னை அவர்களுக்கு போதகராக வெளிப்படுத்துவேன்" என்பதே. ஆரோக்கிமான, விலை அதிகமில்லாத உணவுகளை ஆயத்தம்செய்வதன்வழியாக தங்கள் ஆகாரத்தில் எவ்வாறு சீர்திருத்தம் கொண்டுவரலாம் என்று போதித்து அவருடைய திட்டங்களை செயல்படுத்துகிறவர்களோடு அவர் வேலை செய்வார். இவ்வாறு ஏழை மக்கள் ஆரோக்கிய சீர்திருத்தத்தின் கொள்கைகளை பின்பற்ற ஊக்கப்படுத்தப்படுவார்கள். உழைக்கவும், தங்களை சார்ந்து இருக்கவும் உதவிகிடைக்கப் பெறுவார்கள்.

முழுமையான சுவையான உணவுகளை ஏற்றுக்கொள்ளும்விதத்தில் எவ்வாறு ஆயத்தம் செய்யவேண்டும் என்று தகுதியான ஆண்களும் பெண்களும் தேவனால் போதிக்கப்படுகிறார்கள் என்று எனக்குக் காண்பிக்கப்பட்டது. அவர்களில் அநேகர் இளமையானவர்கள். வயது முதிர்ந்தவர்களும் அதிலே இருந்தார்கள். மருத்துவ மிஷனரி வேலை செய்யப்படுகிற அனைத்து இடங்களிலும், சமையல் வகுப்புகளை நடத்த ஊக்கப்படுத்தும்படி நான் போதிக்கப்பட்டேன். சீர்திருத்தத்திற்கு மக்களை நடத்தும் ஒவ்வொரு தூண்டுதலும் அவர்கள்முன் வைக்கப்படவேண்டும் எத்தனை அதிகம் கூடுமோ அத்தனை அதிகமாக வெளிச்சம் அவர்கள்மேல் பிரகாசிக்கட்டும். ஆகாரத்தை ஆயத்தம் செய்வதில் தங்களால் முடிந்த ஒவ்வொரு முன்னேற்றத்தையும் செய்ய அவர்களுக்குக் கற்றுக்கொடுங்கள். தாங்கள் கற்றுக்கொள்ளுபவைகளை மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுக்க அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

பெரிய பட்டணங்களில் வேலையை முன்னேற்ற, நம் வல்லமையில் இருக்கும் அனைத்தையும் நாம் செய்யமாட்டோமா? நமக்கு அருகிலிருக்கும் ஆயிரக்கணக்கானோருக்கு வெவ்வேறு வழிகளில் உதவி தேவைப்படுகிறது. "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது." "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்?" (மத்தேயு 5:14,13) என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது சீஷர்களுக்குச் சொன்னதை சுவிசேஷ ஊழியர்கள் நினைவில் கொள்ளவேண்டும்.

கர்த்தராகிய இயேசு தமது மக்களுக்காக அற்புதங்கள் செய்வார். மாற்கு 16–ம் அதிகாரத்தில் "இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசினபின்பு, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார். அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். *கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து,* அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை *உறுதிப்படுத்தினார்*" (16:19,20) என்று நாம் வாசிக்கிறோம். தாம் எழுந்தருளிச்சென்றபிறகு, மருத்துவ மிஷனரி ஊழியத்தை எடுத்துக்கொள்ள கர்த்தர் தாம் தெரிந்துகொண்ட ஊழியர்களை தகுதிப்படுத்தினார் என்று நாம் உறுதியளிக்கப்படுகிறோம்.

கலியாண விருந்திலே திராட்சரசத்தை ஆயத்தம் செய்தது, திரள்கூட்டத்தை போஷித்தது போன்ற எழுதப்பட்டுள்ள ஆண்டவருடைய அற்புதங்களிலிருந்து மிக உயர்ந்த முக்கியத்துவம்கொண்ட ஒரு பாடத்தை நாம் கற்றுக்கொள்ளலாம். ஆரோக்கியமான உணவுத் தொழில், தேவையைச் சந்திக்கும் கர்த்தருடைய சொந்த கருவிகளில் ஒன்று. அனைத்து உணவுகளையும் ஏற்பாடுசெய்யும் பரலோக **தேவன்,** எல்லா நேரங்களுக்கும் எல்லா சந்தர்ப்பங்களுக்கும் தேவையான மிகச்சிறந்த உணவுகளை ஆயத்தம் செய்வதைக்குறித்த அறியாமையில் இருக்க தமது பிள்ளைகளை விடமாட்டார்.

## உணவக ஊழியம்

நமது நகரத்திலுள்ள மக்களை சென்றடையும்படி இதுவரை செய்ததைவிடவும் நாம் அதிகமாகச் செய்யவேண்டும். பட்டணங்களில் பெரிய கட்டடங்களை நாம் கட்டுதல் கூடாது. ஆனால் நம் பட்டணங்களிலெல்லாம் சிறிய அளவில் செல்வாக்கு மையங்களை நாம் ஸ்தாபிக்கவேண்டும் என்று மீண்டும் மீண்டும் எனக்கு வெளிச்சம் கொடுக்கப்பட்டது.

ஆண்டவர் நம்முடைய பட்டணங்களுக்கான ஒரு செய்தியை கொண்டிருக்கிறார். இந்தச் செய்தியை நம்முடைய முகாம்கூட்டங்களிலும்

மற்ற பொதுவான முயற்சிகளிலும், பிரசுரங்களின் வழியாகவும்கூட நாம் அறிவிக்கவேண்டும். அதோடுகூட சுகாதாரமான உணவகங்கள் பட்டணங்களில் நிறுவப்படவேண்டும். அவைகளின் வழியாக இச்சையடக்கத்தின் தூதுகள் அறிவிக்கப்படவேண்டும். உணவகங்கள் தொடர்புடைய கூட்டங்களை நடத்த ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். சாத்தியமாகும்போதெல்லாம், ஆரோக்கிய அறிவியல் மற்றும் கிறிஸ்தவ இச்சையடக்க விரிவுரைகளுக்கு வாடிக்கையாளர்களை வரவேற்க ஒரு அறையும் ஆயத்தப்படுத்தப்படட்டும். அங்கே அவர்கள் ஆரோக்கிமான உணவை ஆயத்தப்படுத்துவதைக் குறித்தும் மற்ற முக்கியமான தலைப்புகளிலும் போதனைகளைப் பெற்றுக்கொள்ளலாம். இந்த கூட்டங்களில் ஆரோக்கியத்தையும் இச்சையடக்கத்தையும் குறித்தவைகள் மட்டுமல்லாது, ஜெபமும், பாடல்களும், மற்ற பொருத்தமான வேதாகம தலைப்புகளில் உரைகளும் நடத்தப்படலாம். சரீர நலனை காத்துக்கொள்ள மக்கள் கற்பிக்கப்படும்போது, இராஜ்யத்தினுடைய சுவிசேஷ விதைகளை விதைப்பதற்கான அநேக சந்தர்ப்பங்கள் கண்டுபிடிக்கப்படும்.

மக்களுக்கு சாதகமாக அவர்களை உணர்த்துவதற்கேதுவான விதத்தில் இந்தத் தலைப்புகள் அறிமுகப்படுத்தப்படவேண்டும். இந்த கூட்டங்களில் நாடகத்தன்மையுள்ள எதுவும் இருக்கக்கூடாது. பாடல்கள் சிலரால் மாத்திரம் பாடப்படக்கூடாது. கூடியிருக்கும் அனைவரும் பாட்டு ஆராதனையில் கலந்துகொள்ளும்படி ஊக்கப்படுத்தப்படவேண்டும். பாடலைக்குறித்த விசேஷ ஈவுகளைப் பெற்றவர்கள் இருக்கிறார்கள். ஒருவர் தனியாகப் பாடுவதினாலும் அல்லது சிலர் கூடிப்பாடுவதினாலும் விசேஷமான செய்தியை எடுத்துச்சொல்லும் சந்தர்ப்பங்கள் இருக்கிறது. ஆனால் சிலர் மாத்திரம் பாடுவது கூடாது. பாடும் திறமை, செல்வாக்குள்ள ஒரு தாலந்து ஆகும். அனைவரும் அதை வளர்த்துக்கொண்டு, அவருடைய நாம மகிமைக்காக அதை உபயோகிக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

நம்முடைய உணவகங்களுக்கு வருகிற அனைவருக்கும் வாசிக்க ஏதாகிலும் வழங்கப்படவேண்டும். நம்முடைய இச்சையடக்கம் மற்றும் ஆகாரங்களைக்குறித்த சீர்திருத்தங்களடங்கிய எழுத்துகளுக்கும், கிறிஸ்துவின் பாடங்கள் தொடர்புடைய துண்டுப்பிரசுரங்களுக்கும் அவர்களுடைய கவனம் இழுக்கப்படவேண்டும். படிக்கக்கூடிய இவைகளை விநியோகிப்பதன் பாரம் நம்முடைய மக்கள் அனைவராலும் பகிர்ந்துகொள்ளப்பட வேண்டும். வருகின்ற அனைவருக்கும் படிக்கும்படி ஏதாகிலும் கொடுக்கப்படவேண்டும். அநேகர் இந்தப் பிரசுரங்களை படிக்காமல் கடந்துசெல்லலாம். ஆனால் நீங்கள் யார் கைகளில் வைக்கிறீர்களோ, அவர்களில் சிலர் வெளிச்சத்தைத்

தேடிக்கொண்டிருக்கலாம். அவர்கள் நீங்கள் கொடுத்தவைகளை வாசித்து, சிந்தித்து, மற்றவர்களுக்கும் சொல்லலாம்.

உணவகத்திற்கு வரும் குறிப்பிட்ட நபர்களுடன் ஆவிக்குரிய காரியங்களைக்குறித்து தனிப்பட்ட முறையில் பேசும்படி, தேவனுடைய ஆவியானவர் தங்களைத் தூண்டுவதை உணர்ந்துகொள்ளுவதற்கேதுவாக உணவகங்களில் வேலைசெய்கிறவர்கள் அவரோடு அப்படிப்பட்ட நெருக்கமான தொடர்போடு வாழவேண்டும். சுயம் சிலுவையிலறையப்பட்டு, கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாக உருவாகும்போது, நம் எண்ணத்திலும் வார்த்தையிலும் செயலிலும், சத்தியத்தின்மேல் நமக்கிருக்கிற நம்பிக்கையின் உண்மையை வெளிக்காட்டுவோம். கர்த்தர் நம்மோடு இருப்பார். நம்மூலமாக, கிறிஸ்துவைவிட்டு தூரமாயிருப்பவர்களை சென்றடைய பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்வார்.

நம்முடைய உணவகங்களை நடத்துகிறவர்களால் இந்த வேலை செய்யப்படவேண்டும் என்று கர்த்தர் எனக்கு அறிவுறுத்தியிருக்கிறார். தொழிலில் இருக்கிற நெருக்கடியும் வேகமும், ஆத்தும ஆதாயம் செய்யும் வேலையை நெகிழுவதற்கு நடத்திவிடக்கூடாது. நம்முடைய உடனாளிகளின் சரீர தேவைகளுக்கு ஊழியஞ்செய்வது நல்லது. ஆனால் ஆகாரத்திற்காக அனுதினமும் வருகிறவர்களுக்கு சுவிசேஷ ஒளி பிரகாசிக்கக்கூடிய வழிகள் கண்டறியப்படாவிட்டால், தேவன் எவ்விதம் நம் வேலைகளால் மகிமைப்படுத்தப்படுவார்?

உணவக வேலை துவங்கப்பட்டபோது நிகழ்கால சத்தியத் தூதோடு அநேகரைச் சந்திக்கும் ஊடகமாக அது இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அது அதைச் செய்ததா?

உணவகங்களில் வேலை செய்பவர்களிடம் அதிகாரத்தில் இருக்கும் **ஒருவரால்**: “இரட்சிப்பைக்குறித்து எத்தனை பேரிடம் பேசியிருக்கிறாய்” என்ற கேள்வி கேட்கப்பட்டது. கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் ஊக்கமான வேண்டுகோளை உன் உதடுகளிலிருந்து எத்தனை பேர் கேட்டிருக்கிறார்கள்? பாவத்திலிருந்து ஜீவனுள்ள தேவனுடைய சேவைக்குத் திரும்பும்படி எத்தனை பேர் உன் வார்த்தைகளால் நடத்தப்பட்டிருக்கிறார்கள்?

நம் உணவகங்களில் மக்கள் உலக சம்பந்தமான உணவுகளைப் பெறும்போது, தாங்களும், தாங்கள் பணிபுரிகின்ற மக்களும் தொடர்ந்து பரலோக அப்பத்தினால் போஷிக்கப்படவேண்டும் என்பதை தொழிலாளர்கள் மறக்கவேண்டாம். சத்தியத்தை அறியாதவர்களுடன் சத்தியத்தைப் பேசக்கூடிய சந்தர்ப்பங்களுக்காக அவர்கள் தொடர்ந்து காத்திருக்கட்டும்.

## உதவிக்காரரின் பராமரிப்பு

உணவகங்களின் மேலாளர்கள், தங்களுக்குக்கீழ் வேலை செய்பவரின் இரட்சிப்பிற்காக உழைக்கவேண்டும். அவர்கள் அளவுக்குமீறி வேலை செய்யக்கூடாது. ஏனெனில் அப்படிச் செய்வதினால் ஊழியர்களுக்கு உதவிசெய்ய பலமும் விருப்பமும் இல்லாத இடத்தில் தங்களை வைக்கிறார்கள். தங்கள் ஊழியர்களை ஆவிக்குரிய காரியங்களில் உபதேசிக்கவும், வேத வாக்கியங்களை அவர்களுக்கு விளக்கி அவர்களோடு சேர்ந்தும் அவர்களுக்காகவும் ஜெபிக்கவும், தங்களுடைய சிறந்த வல்லமைகளை அவர்கள் அர்ப்பணிக்கவேண்டும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடைய ஆவிக்குரிய ஆர்வங்களை பாதுகாப்பதுபோல, அவர்கள் தங்கள் உதவிக்காரருடைய ஆவிக்குரிய ஆர்வங்களை பாதுகாக்கவேண்டும். பொறுமையாகவும், மென்மையாகவும் அவர்களை கண்காணித்து, கிறிஸ்தவ குணத்தில் பூரணப்பட அவர்களுக்கு உதவ தங்கள் வல்லமையில் உள்ள அனைத்தையும் அவர்கள் செய்யவேண்டும். அவர்களுடைய வார்த்தைகள் வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்கு சமானமாக இருக்கவேண்டும். அவர்களுடைய செய்கைகள் சுயநலம் மற்றும் கடுமையின் எவ்வித சாயலும் இல்லாதவைகளாக இருக்கவேண்டும். கணக்கு கொடுக்கவேண்டியவர்களைப்போல, ஆத்துமாக்களை பாதுகாக்க எப்பொழுதும் ஆயத்தமுள்ளவர்களாக அவர்கள் இருக்கவேண்டும். தங்கள் உதவிக்காரர்களை, அவர்களுடைய தைரியம் தொடர்ச்சியாக பலப்பட்டு, தேவன்மேலுள்ள விசுவாசமும் தொடர்ந்து வளரும் சாதகமான இடத்தில் நிறுத்த அவர்கள் எப்போதும் முயற்சிக்கவேண்டும். நம் உணவகங்கள் இந்தவிதமாக நடத்தப்படாத பட்சத்தில், தங்கள் பிள்ளைகளை வேலைசெய்யும்படி அவர்களிடம் அனுப்புவதற்கு எதிராக நம் மக்களை எச்சரிப்பது அவசியமாயிருக்கும். நம் உணவகங்களை ஆதரிக்கிற அநேகர், தங்களோடு தேவனுடைய தூதர்களைக் கொண்டுவருவதில்லை. இந்த பரிசுத்தவான்களின் தோழமையை அவர்கள் வாஞ்சிக்கிறதுமில்லை. அவர்கள் தங்களோடு உலக செல்வாக்குகளை கொண்டுவருகிறார்கள். ஊழியர்கள், இந்த செல்வாக்கை எதிர்கொள்ளுவதற்கேதுவாக தேவனோடு நெருங்கின தொடர்பில் இருக்கவேண்டும். நம் உணவகங்களின் மேலாளர்கள் தங்களுக்குக்கீழ் இருக்கும் ஊழியர்களிலிருக்கிற வாலிபரைக் காப்பாற்ற அதிகம் செய்யவேண்டும். அவர்களுடைய இளம்மனது, தொடர்ந்து அவர்களோடு தொடர்பு கொள்ளுகிற உலக ஆவியினால் அசைக்கப்பட்டுவிடாமலிருக்க, அவர்களை ஆவிக்குரிய விதத்தில் உயிரோடு வைத்திருக்க, அவர்கள் அதிகமுயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். நம் உணவகங்களில் இருக்கிற இளம் பெண்பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும்

ஒரு மேய்ப்பன் தேவை. அவர்கள் ஒவ்வொருவரும் இல்லத்தினுடைய செல்வாக்குகளினால் பாதுகாக்கப்படவேண்டும்.

விசுவாசிகளாக, தேவனுடைய ஊழியத்திற்கு உதவும் வாஞ்சையோடு நமது ஸ்தாபனங்களில் பிரவேசிக்கும் வாலிபர்கள், தளர்ந்து, மனம் சோர்ந்து, தங்களுடைய வைராக்கியத்தையும் தைரியத்தையும் இழந்து, அலட்சியமாக போய்விடக்கூடிய ஆபத்து இருக்கிறது. இந்த வாலிபர்களை சிறிய இருண்ட அறைகளில் வைத்து, அவர்களுக்கு குடும்ப வாழ்க்கையின் உரிமைகளை மறுத்து, பின்னர் அவர்களிடம் ஆரோக்கியமான ஆவிக்குரிய அனுபவத்தை எதிர்பார்க்கமுடியாது.

நம்முடைய அனைத்து நிறுவனங்களிலும் இருக்கும் உதவிக்காரர்களின் பராமரிப்பிற்காக, விசேஷமாக நம் உணவகங்களில் வேலை செய்பவர்களுக்காக, விசாலமான திட்டங்கள் போடப்படவேண்டியது முக்கியம். நல்ல உதவிக்காரர்கள் பாதுகாக்கப்படவேண்டும். கிருபையிலும் கிறிஸ்துவைக்குறித்த அறிவிலும் வளருவதற்கு உதவும் அனைத்து சாதகங்களும் கொடுக்கப்படவேண்டும். ஜெபத்திற்கும் வேத ஆராய்ச்சிக்கும் முறையான நேரமின்றி, அல்லது எதிர்பாராத சூழ்நிலைகளின் தயவில் அவர்கள் விட்டுவிடப்படக்கூடாது. அப்படி விடப்படும்போது, அவர்கள் கவனமில்லாதவர்களாகவும், குறைவுள்ளவர்களாகவும், நித்தியத்திற்கடுத்த உண்மைகளுக்கு அலட்சியமானவர்களாகவும் இருப்பார்கள்.

ஒவ்வொரு உணவகத்துடனும், உதவிக்காரரின் பாதுகாவலர்களாக ஒரு ஆணும், அவனுடைய மனைவியும்—இரட்சகரையும் அவர் யாருக்காக மரித்தாரோ, அந்த ஆத்துமாக்களையும் நேசித்து, கர்த்தருடைய வழிகளை காத்துக்கொள்ளுகிற ஒரு மனிதனும், மனுஷியும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஞானமுள்ள, நியாயமான, பெருந்தன்மையுள்ள, கண்ணியமான, முழுமையாக மனந்திரும்பின ஊழியர்களை—விசேஷமாக இளவயதுள்ள வர்களை கவனமாக பாதுகாக்கிற ஒரு பெண்ணின் பராமரிப்பின்கீழ் இளம் பெண்கள் இருக்கவேண்டும்.

தொழிலாளர்கள் தங்களுக்கு ஒரு வீடு இருக்கிறதாக உணரவேண்டும். அவர்கள் தேவனுடைய உதவும் கரங்கள். தமது சீடர்களுக்கு மத்தியில் தாம் நிறுத்தின சிறிய குழந்தை எவ்வாறு நடத்தப்படவேண்டும் என்று கிறிஸ்து அறிவித்தாரோ, அதேபோன்று கரிசனையோடும் மென்மையாகவும் அவர்கள் நடத்தப்படவேண்டும். "இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக்

கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்.” “இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்”–மத்தேயு 18:6,10. இப்பணியாட்களுக்கு கவனம் கொடுக்கப்படவேண்டும் என்பது, பெரிய பட்டணங்களில் ஒரு பெரிய உணவகத்தை அமைப்பதைக்காட்டிலும் அநேக சிறு சிறு உணவகங்கள் அமைக்கவேண்டும் என்பதற்கு ஆதரவான காரணங்களில் ஒன்று. பெரிய பட்டணங்களின் வெவ்வேறு பகுதிகளில் அநேக சிறிய உணவகங்களை நிறுவுவது ஏன் சிறந்தது என்பதற்கான காரணம் இதுமட்டும் அல்ல. சிறிய உணவகங்கள், பெரிய ஸ்தாபனங்களைப்போலவே ஆரோக்கிய சீர்திருத்த கொள்கைகளை சிபாரிசு செய்வதோடு, சுலபமாக நிர்வகிக்கவும்படும். உலகத்தை போஷிக்க நாம் கட்டளை பெறவில்லை; மாறாக, மக்களுக்குக் கற்பிக்க அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம். சிறிய உணவகங்களில் செய்யும்படி அதிக வேலை இருக்காது. வேதவார்த்தைகளை ஆராய உதவியாளர்களுக்கு அதிக நேரம் கிடைக்கும். தங்களுடைய வேலையை மேன்மையாக எப்படிச் செய்யமுடியும் என்பதைக் கற்றுக்கொள்ளவும், ஆரோக்கிய சீர்திருத்தக் கொள்கைகளைக் கற்றுக்கொள்ளும் ஆர்வமுடைய வாடிக்கையாளர்களின் வினாக்களுக்கு விடையளிக்கவும் அதிக நேரம் கிடைக்கும்.

இந்த வேலையில் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுவோம் என்றால், தேவனுடைய நீதி நமக்கு முன்பாகச் செல்லும். அவருடைய மகிமை நம்மை பின்னாகக் காக்கும். ஆனால் ஆத்தும ஆதாயம் நடைபெறவில்லையென்றால், உதவிக்காரர்களும் ஆவிக்குரிய நன்மைகளை அடையாவிட்டால், வார்த்தையிலும் செய்கையிலும் அவர்கள் தேவனை மகிமைப்படுத்தாவிட்டால், எதற்காக நாம் அப்படிப்பட்ட ஸ்தாபனங்களை நிறுவி பராமரிக்கவேண்டும்? தேவனுடைய மகிமைக்காக நம்முடைய உணவகங்களை நடத்தாவிட்டால், அவைகளின் வழியாக வல்லமையான செல்வாக்கை கொடுக்காவிட்டால், அவைகளை மூடிவிட்டு, நம் வாலிபரின் திறமைகளை மற்ற காரியங்களில் பயன்படுத்துவது மேன்மையாயிருக்கும். என்றாலும், நம் உணவகங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்கும் ஊடகங்களாக நடத்தப்படமுடியும். அவருடைய ஆலோசனையின் ஒளியில் எப்படி நடப்பது என்பதையும், அவருடைய வார்த்தைகளை எவ்விதம் புரிந்துகொள்ளவேண்டும் என்பதையும், அவைகளை எப்படி பழக்கத்திற்குள் கொண்டுவருவது என்பதையும் அவர் நமக்கு போதிப்பதற்கேற்ற மனத்தாழ்மைக்காக நாம் கர்த்தரை ஊக்கமாக தேடக்கடவோம்.

*****

உதவிக்காரர்கள் மிகக் கடினமாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாரமும் வேலைசெய்தும், எந்த நன்மையும் செய்யப்பட்டதாக காணப்படாதவிதத்தில் நம் உணவகங்களை நடத்தும் ஆபத்து இருக்கிறது. இந்தக் காரியம் கவனமாக கருதப்படவேண்டும். தேவனுக்கு மகிமையாக கனி தராத எந்த வேலையிலும் நம் வாலிபர்களை கட்டிப்போட நமக்கு எந்த உரிமையும் இல்லை.

நன்மைசெய்வதற்கேதுவான வியப்பூட்டும் வெற்றிதருகிற ஊடகங்களாக நம் உணவகங்கள் கருதப்பட்டாலும், யாருக்கு சேவைசெய்கிறோமோ, அவர்களின் சரீர ஆரோக்கியத்தை மாத்திரம் மேம்படுத்தும் விதத்தில் அது நடத்தப்படும் ஆபத்து இருக்கிறது. ஒருவேலை வெளித்தோற்றத்தில் மிக உயர்ந்த அம்சங்களைக் கொண்டிருக்கலாம். ஆனால், அது அவருடைய சித்தத்தைச் செய்து, அவருடைய நோக்கத்தை நிறைவேற்றும் ஊக்கமான வாஞ்சையோடு செய்யப்படாத பட்சத்தில், தேவனுடைய பார்வையில் நல்லது அல்ல. தேவன் நம்முடைய செயல்களின் துவக்கமாகவும் முடிவாகவும் அங்கீகரிக்கப்படவில்லையென்றால், அவைகள் பரிசுத்த ஸ்தலத்தில் தராசினால் நிறுக்கப்பட்டு, குறைய காணப்படும்.

## ஓய்வுநாட்களில் நமது உணவகங்களை மூடுதல்

“நம் உணவகங்கள் ஓய்வுநாட்களில் திறக்கப்படவேண்டுமா?” என்று கேள்வி கேட்கப்பட்டது. என்னுடைய பதில்: “இல்லை! இல்லை!” என்பதே. ஓய்வுநாள் ஆசரிப்பு, தேவனுக்கு சாட்சியாகவும், நாம் அவருடைய மக்கள் என்பதற்கு அவருக்கும் நமக்கும் இடையே இருக்கிற முத்திரை அல்லது அடையாளமாகவும் இருக்கிறது. இந்த அடையாளம் ஒருபோதும் அழிக்கப்படக்கூடாது.

நம் உணவகங்களில் வேலைசெய்யும் ஊழியர்கள், வரக்கூடிய ஜனக்கூட்டத்திற்கு வாரம் முழுவதும் செய்வதுபோலவே ஓய்வுநாளிலும் ஆகாரம் தயார் செய்யவேண்டுமானால், அவர்களுடைய ஓய்வுநாள் எங்கே? அவர்களுடைய சரீர ஆவிக்குரிய பலங்களை மேம்படுத்த அவர்களுக்கு என்ன சந்தர்ப்பம் கிடைக்கும்?

இந்தக் காரியத்தைக்குறித்து சமீபத்தில் விசேஷ வெளிச்சம் எனக்குக் கொடுக்கப்பட்டது. நம்முடைய ஓய்வுநாள் ஆசரிப்பின் தரத்தை உடைத்துப்போடும்படியான முயற்சிகள் எடுக்கப்படும் என்று எனக்குக் காட்டப்பட்டது. நம்முடைய உணவகங்களை ஓய்வுநாளில் திறந்துவைக்கும்படி மனிதர்கள் மன்றாடுவார்கள் என்றும் எனக்கு காட்டப்பட்டது. ஆனால் இது ஒருபோதும் செய்யப்படக்கூடாது.

என்முன் ஒரு காட்சி கடந்துபோனது. சான்பிரான்சிஸ்கோவிலுள்ள நம்முடைய உணவகத்தில் நான் இருந்தேன். அது ஒரு வெள்ளிக்கிழமை. இலகுவாக மக்கள் வீட்டிற்கு எடுத்துச்செல்ல வசதியாக உணவுகளை பொட்டலங்களில் மடிப்பதில் அநேகத் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தார்கள். இந்த பொட்டலங்களை வாங்கவும் கொஞ்சம்பேர் காத்திருந்தார்கள். இதன் காரணம் என்னவென்று கேட்டேன். “வாடிக்கையாக வருகிறவர்களில் சிலர், ஓய்வுநாளில் உணவகம் மூடப்படுவதன் காரணமாக, வாரம் முழுவதும் உபயோகிக்கும் இதேவிதமான உணவை அன்று வாங்கமுடிவதில்லை என்று கவலைகொண்டிருக்கிறார்கள்” என்று வேலைசெய்கிறவர்கள் சொன்னார்கள். “உணவகத்தில் கிடைக்கிற ஆரோக்கிய உணவின் மதிப்பை உணர்ந்து, அது ஏழாம்நாளில் அவர்களுக்கு மறுக்கப்படுவதால் அதைக் கண்டித்து, உணவகத்தின் பொறுப்பாளர்களிடம் உணவகம் இல்லாதபோது தாங்கள் படும் கஷ்டத்தைச் சுட்டிக்காட்டி, வாரத்தின் ஒவ்வொரு நாளும் உணவகத்தை திறந்து வைக்கும்படி மன்றாடினார்கள். இன்று நீங்கள் பார்ப்பது ஓய்வுநாளில் ஆரோக்கிய உணவிற்கான கோரிக்கையின் பதிலைத்தான். ஓய்வுநாள் வரைக்கும் இருக்கக்கூடிய உணவை வெள்ளிக்கிழமையே இந்த மக்கள் எடுத்துக்கொள்ளுகிறார்கள். இவ்விதமாக ஓய்வுநாளில் உணவகத்தை திறக்க மறுப்பதினால் வரும் கண்டனத்தை நாங்கள் தவிர்க்கிறோம்” என்றார்கள்.

நம்முடைய மக்களுக்கும் உலகத்திற்கும் இடையே இருக்கும் எல்லைகோடு தவறின்றி தெளிவாக வைக்கப்படவேண்டும். நம்முடைய மேடை தேவனுடைய பிரமாணங்களே. அதில் ஓய்வுநாளை கைக்கொள்ளும்படி உபதேசிக்கப்பட்டிருக்கிறோம். யாத்திராகமம் 31–ம் அதிகாரத்தில் தெளிவாக காட்டப்பட்டிருப்பதைப்போல, ஓய்வுநாள் ஆசரிப்பு, தேவனுக்கும் அவரது மக்களுக்குமிடையே இருக்கிற அடையாளமாக இருக்கிறது. “நீங்கள் என் ஓய்வுநாட்களை ஆசரிக்கவேண்டும்; உங்களைப் பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர் நான் என்பதை நீங்கள் அறியும்படி, இது *உங்கள் தலைமுறைதோறும்* எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும். ஆகையால், ஓய்வுநாளை ஆசரிப்பீர்களாக; அது உங்களுக்குப் பரிசுத்தமானது; … அது என்றைக்கும் எனக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் அடையாளமாயிருக்கும்; ஆறுநாளைக்குள்ளே கர்த்தர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து பூரித்தார் என்றார்.”

நம்முடைய கீழ்ப்படிதலினால் ஓய்வுநாளுக்கு கனம் தராதவர்களுக்கு பெரிய அசௌகரியத்தை ஏற்படுத்தினாலும், “என்று கர்த்தர் சொல்லுகிறார்” என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். ஓருபுறம் மனிதனுடைய தேவைகள் எனப்படுவது இருக்கிறது. மறுபுறம் தேவனுடைய கற்பனைகள்

இருக்கிறது. நம்மைப் பொறுத்தவரை எதற்கு அதிக கனம் இருக்கிறது.

நம்முடைய சுகாதார மையங்களில் நோயாளிகளின் குடும்பங்கள், மருத்துவர்கள், செவிலியர், உதவியாளர்களோடு சேர்த்து, மற்ற எந்த குடும்பத்தையும்போல, எவ்வளவு முடியுமோ அவ்வளவு குறைவான வேலைசெய்து ஓய்வுநாளில் போஷிக்கப்படவேண்டும். ஆனால் நம் உணவகங்கள் ஓய்வுநாளில் திறக்கப்படக்கூடாது. இந்த நாள் தேவனை தொழுது கொள்ளுவதற்காக கிடைக்கும் என்ற உறுதி, வேலை செய்பவர்களுக்குக் கொடுக்கப்படட்டும். ஓய்வுநாளில் மூடப்பட்ட கதவுகள் உணவகத்தை தேவனுக்கு நினைவுச்சின்னம் என்று முத்திரை குத்துகிறது. ஏழாம்நாள் ஓய்வுநாள் என்றும், அதிலே தேவையில்லாத ஒரு வேலையும் செய்யப்படாது என்றும் அறிவிக்கிற நினைவுச்சின்னமாக முத்திரை குத்துகிறது.

பெரிய பட்டணங்களின் மையங்களில் சுகாதாரமான உணவகங்களும் சிகிச்சை அறைகளும் ஸ்தாபிக்கப்படவேண்டிய முக்கியமான காரணங்களில் ஒன்று, இதன்வழியாக, முன்னேறிக்கொண்டிருக்கிற மனிதர்களின் கவனம் மூன்றாம் தூதனுடைய தூதிற்கு இழுக்கப்படும் என்று எனக்கு போதிக்கப்பட்டது. சதாரண உணவகங்களைக் காட்டிலும் முற்றிலும் வேறுபட்டவிதத்தில் இந்த உணவகங்கள் நடத்தப்படுவதை கவனித்து, தொழில்முறையில் இருக்கும் வேறுபாட்டிற்கான காரணத்தை அறிவுள்ள மனிதர்கள் விசாரிக்கத் துவங்குவார்கள். உயர்ந்த உணவை வழங்க நம்மை நடத்துகிற கொள்கைகளை அவர்கள் விசாரிப்பார்கள். இவ்வாறாக, இக்காலத்திற்குரிய செய்தியைக்குறித்த அறிவுக்கு அவர்கள் நடத்தப்படுவார்கள்.

நம்முடைய உணவகங்கள் ஓய்வுநாளில் மூடப்படுவதை சிந்திக்கும் மனிதர்கள் காணும்போது, சனிக்கிழமைகளில் நம் கதவுகளை மூடிவிடும்படி நடத்துகிற கொள்கைகளைக்குறித்து விசாரிப்பார்கள். அவர்களுடைய கேள்விகளுக்குப் பதில்சொல்லும்போது, நம்முடைய விசுவாசத்திற்கான காரணத்தை அவர்களுக்குத் தெரிவிக்கலாம். நம்முடைய பருவ இதழ்கள் மற்றும் துண்டு பிரசுரங்களை அவர்களுக்குக் கொடுக்கமுடியும். இதனால், “நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும், தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ்செய்யாதவனுக்கும்” (மல்கியா 3:18) இருக்கிற வித்தியாசத்தை அவர்களால் புரிந்துகொள்ளமுடியும். ஓய்வுநாள் ஆசரிப்பில் எப்படி இருக்கவேண்டும் என்பதைக்குறித்து நம் மக்கள் அனைவரும் குறிப்பாக இல்லை. அவர்களைச் சீர்திருத்த தேவன் உதவிசெய்வாராக.

# ஆரோக்கியமான உணவுகள்

## கூரன்பாங் N.S.W., மார்ச் 10, 1900

கடந்த இரவில், அநேக காரியங்கள் எனக்குமுன் திறக்கப்பட்டது. ஆரோக்கியமான உணவுகளை உற்பத்தி செய்து விற்பதற்கு கவனமான ஜெபத்தோடுகூடிய எண்ணம் அவசியப்படுகிறது.

ஆரோக்கியமும் சுவையுமான உணவுகளை எப்படி ஆயத்தப்படுத்துவது என்ற அறிவை கர்த்தர் அநேக இடங்களில் இருக்கிற அநேக மனங்களுக்கு, அவர்கள் இந்த அறிவை நீதியாக உபயோகப்படுத்துவார்களென்று அவர் காண்பாரென்றால், நிச்சயமாகத் தெரியப்படுத்துவார். மிருகங்கள் அதிக வியாதி கொண்டதாகின்றன. ஏழாம்நாள் அட்வெந்துக்கள்தவிர மற்ற அநேகராலும் மிருகஉணவு அகற்றப்படும் காலம் வெகு தூரத்திலில்லை. ஆண்களும் பெண்களும் மாமிசத்தை புசிக்க தேவையில்லாதபடிக்கு, ஆரோக்கியமும் வாழ்க்கையை நீட்டிக்கிறதுமான உணவுகள் ஆயத்தப்படுத்தப்படவேண்டும்.

உயிரைத் தாங்கி, வியாதியை கொண்டுவராதமுறையில் பழங்கள், தானியங்கள், காய்கறிகளை ஆகாரமாக ஒன்றுசேர்க்க, உலகத்தின் அனைத்து பகுதிகளிலுமிருக்கிற அநேகருக்கு கர்த்தர் போதிப்பார். ஆரோக்கியமான உணவுகளை உண்டாக்கும் செய்முறைகளை ஒருபோதும் கண்டிராதவர்கள், இப்போது அறிவோடு பூமியின் உணவு உற்பத்தியை பரிசோதித்து அங்காடிகளில் செயல்படுவார்கள். அவர்களுக்கு இந்த உற்பத்திகளை உபயோகப்படுத்துவதற்கான வெளிச்சம் கொடுக்கப்படும். என்ன செய்யவேண்டும் என்று கர்த்தர் அவர்களுக்குக் காண்பிப்பார். உலகத்தில் ஒரு பக்கத்தில் இருக்கிற தம் மக்களுக்கு திறமையையும் புரிந்துகொள்ளுதலையும் கொடுக்கிறவர், உலகத்தின் மற்ற பகுதிகளில் இருக்கிற தம் பிள்ளைகளுக்கும் திறமையையும் புரிந்துகொள்ளுதலையும் வழங்குவார். ஒவ்வொரு நாட்டிலும் இருக்கிற உணவு பொக்கிஷங்கள் அவைகள் பொருந்துகிற நாடுகளில் உபயோகப்படுத்தப்படுவதற்கு ஏதுவாக ஆயத்தப்படுத்தப்படவேண்டும் என்பது அவரது வடிவமைப்பு. இஸ்ரவேல் புத்திரரை காப்பதற்காக வானத்திலிருந்து மன்னாவை கொடுத்ததைப் போலவே, மாமிச உணவின் இடத்தை எடுத்துக்கொள்ளும்விதத்தில் அந்த நாடுகளிலுள்ள உற்பத்தியை உபயோகிக்க வெவ்வேறு இடங்களில் இருக்கிற தமது பிள்ளைகளுக்கு தேவன் திறமையையும் ஞானத்தையும் கொடுப்பார். இந்த உணவுகள் வெவ்வேறு நாடுகளில் தயாரிக்கப்படவேண்டும். ஏனெனில் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு கொண்டுசெல்வது, ஏழைகள் வாங்கக்கூடாதவாறு அவ்வுணவை விலையுயர்ந்ததாக்குகின்றது. மற்ற நாடுகளின் சுகாதார உணவிற்கு அமெரிக்காவைச் சார்ந்திருப்பது

வருவாய் ஈட்டாது. இறக்குமதி செய்யப்படுகின்ற உணவுகளை நிதி நஷ்டம் இல்லாமல் கையாள்வது மிகக் கடினம்.

ஆரோக்கிய உணவுகளைக் கையாளும் அனைவரும் உடன் மனிதரின் நன்மைக்காக சுயநலமின்றி உழைக்கவேண்டும். கர்த்தர் தங்களுடைய மனங்களை வழிநடத்த மனிதர்கள் அனுமதிக்காவிட்டால், வெவ்வேறு மனிதர்கள் இவ்வேலையில் ஈடுபடும்போது, சொல்லிமுடியாத கஷ்டங்கள் எழும். ஒருவனுக்கு கர்த்தர் திறமையையும் அறிவையும் கொடுக்கும்போது, இந்த ஞானம் தன்னுடைய நன்மைக்காகமட்டும் அல்லாது, மற்றவர்களுக்கும் உதவும்படியாகவே என்று அந்த ஒருவன் நினைவுகூரக்கடவன்.

ஆரோக்கிய உணவுகளை ஆயத்தப்படுத்துவதைக்குறித்த எல்லா அறிவும் தன்னிடமிருக்கிறது என்று எந்த மனிதனும் எண்ணிக்கொள்ள வேண்டாம். அல்லது நிலத்திலும் மரத்திலும் உள்ள கர்த்தருடைய பொக்கிஷங்களை தன்னுடைய வேலையில் உபயோகிக்கும் முழு உரிமையும் தனக்கு இருக்கிறது என்று எந்த மனிதனும் எண்ணிக்கொள்ளவேண்டாம். இந்தக்காரியத்தில் தேவன் தனக்குக் கொடுத்திருக்கிற அறிவை, தன் இன்பத்திற்கேற்ப உபயோகிக்கலாம் என்று எந்த மனிதனும் உணரக்கூடாது. “இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்”–மத்தேயு 10:8.

எளிமையான, விலைகுறைவான ஆரோக்கிய உணவுகளை ஆயத்தப்படுத்துவது நம் ஞானமே. நம்முடைய மக்களில் அநேகர் ஏழைகளாக இருக்கிறார்கள். ஏழைமக்கள் வாங்கக்கூடிய விலைகளில் கொடுப்பதற்கேதுவான ஆரோக்கியமான உணவுகள் உண்டாக்கப்படவேண்டும். ஒவ்வொரு இடத்திலும் இருக்கிற மிகவும் ஏழ்மையான மக்கள் விலை அதிகமில்லாத ஆரோக்கியமான உணவுகளை பெறவேண்டும் என்பது கர்த்தரின் திட்டம். இந்த உணவுகளை உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகள் அநேக இடங்களில் நிறுவப்படவேண்டும். ஒரு இடத்தில் இந்த வேலைக்கு ஆசீர்வாதமாயிருப்பது, பணம் பெறக்கூடாத மற்ற ஒரு இடத்திற்கு ஆசீர்வாதமாயிருக்கும்.

தேவன் தமது ஜனங்களுக்காக வேலை செய்கிறார். அவர்கள் ஆதாரமின்றி இருப்பதை அவர் வாஞ்சிக்கிறதில்லை. மனிதனுக்கு ஆதியில் கொடுக்கப்பட்ட ஆகாரத்திற்கு அவர்களை அவர் கொண்டுவருகிறார். அவர்களுடைய உணவு அவர் உண்டுபண்ணியிருக்கிறவைகளைக் கொண்டிருக்கவேண்டும். இந்த உணவுகளில் பழங்களும், தானியங்களும் கொட்டைகளுமே முதன்மையாக பயன்படுத்தப்படும், வெவ்வேறுவகையான வேர்களும் உபயோகிக்கப்படும்.

இந்த ஆகாரங்களிலிருந்து வரும் இலாபங்கள், ஆண்டவருடைய மக்களிடமிருந்து வருவதைக்காட்டிலும், உலகத்திடமிருந்தே அதிகமாக வரவேண்டும். தேவனுடைய மக்கள் இந்த வேலையை பராமரிக்கவேண்டும். அவர்கள் புது இடங்களில் நுழைந்து சபைகளை ஸ்தாபிக்கவேண்டும். அவர்கள்மேல் அநேக மிஷனரி வேலைகளின் பாரங்கள் தங்கியிருக்கிறது. அவர்கள்மேல் தேவையற்ற பாரங்கள் வைக்கப்படக்கூடாது. தமது மக்களுக்கு ஒவ்வொரு தேவையிலும் தேவன் அனுகூலமான துணையாயிருக்கிறார்.

நம்முடைய ஆரோக்கிய பத்திரிக்கைகளுக்கு சமையல் குறிப்புகளை ஆயத்தம் செய்கிறவர்கள், அதிக கவனமாயிருக்கவேண்டும். இப்போது செய்யப்படும் சில விசேஷ உணவுகள் மேம்படுத்தப்படமுடியும். அவைகளின் உபயோகங்களைக்குறித்து நாம் வைத்திருக்கும் திட்டங்களும் மாற்றியமைக்கப்படவேண்டும். கொட்டை உணவுகளை சிலர் அதிகமாக உபயோகிக்கின்றனர். "என்னால் கொட்டை உணவுகள் உபயோகிக்கமுடியாது. அவைகளின் இடத்தில் நான் எதை உபயோகிக்கலாம்?" என்று அநேகர் எனக்கு எழுதியிருக்கிறார்கள். ஒருஇரவு நான் ஒரு மக்கள் கூட்டத்தின்முன்பு நின்று அவர்களிடம்: "கொட்டைகள் உணவு தயாரிப்புகளில் அதிகமாக உபயோகிக்கப்படுகிறது; கொடுக்கப்பட்டிருக்கிற சமையல் குறிப்புகளில் இருப்பதைப்போலச் செய்வது நம் சரீரத்தால் கையாளமுடியாது ஒன்று என்றும், அதற்கு மாறாக, மிகக்குறைவாக உபயோகிக்கப்பட்டால், விளைவுகள் திருப்தியாக இருக்கும் என்று பேசிக்கொண்டிருந்ததைப்போன்று தோன்றியது."

வருடத்தின் அதிகமான நாட்களில் பழங்கள் கிடைக்கப்பெறும் நாட்டுப்புறங்களில் இருக்கிறவர்கள், பழங்களில் இருக்கிற ஆசீர்வாதங்களைக் குறித்து விழிப்படையவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். மரங்களிலிருந்து பறித்தவுடன் கிடைக்கும் பழங்களை அதிகம் சார்ந்து இருக்கும்போது, ஆசீர்வாதம் அதிகமாயிருக்கும்.

மரக்கறி உணவை ஏற்றுக்கொண்டபிறகு சிலர் மாமிச உணவிற்கு திரும்புகிறார்கள். இது மெய்யாகவே அறிவில்லாத செயல். மாமிச உணவின் இடத்தில் முறையான உணவை எப்படிப் பொருத்துவது என்கிற அறிவின் குறைவை இது வெளிக்காட்டுகிறது.

ஞானமுள்ள ஆசிரியர்களால் நடத்தப்படும் சமையல் வகுப்புகள் அமெரிக்காவிலும் இன்னும் மற்ற நாடுகளிலும் நடத்தப்படவேண்டும். ஆகார சீர்திருத்தத்தின் மதிப்பை மக்களுக்குக் காண்பிக்கும்படி நாம் செய்யக்கூடிய ஒவ்வொன்றும் செய்யப்படவேண்டும்.

# ஆரோக்கிய உணவுகளின் உற்பத்தி

## செயின்ட் ஹெலினா, கலிபோர்னியா, பெப்ரவரி 16, 1901.

ஏழாம்நாள் அட்வெந்து மக்களாக, நாம், அன்பையும், பொறுமையையும் மெய்யான மரியாதையையும் பண்படுத்தவேண்டும் என்று நேற்று இரவு நம் மக்களிடம் சொல்லிக்கொண்டிருப்பதாக நான் கண்டேன். அவரிடத்தில் கற்றுக்கொள்ளுவார்களென்றால், இயேசு தமது ஜனத்தின் தலைவர்களை பலப்படுத்துவார். தேவனுடைய ஜனங்கள் மிகமிக உயர்ந்த தரத்தை எட்டும்படி முயற்சிக்கவேண்டும். விசேஷமாக மருத்துவ மிஷனரி ஊழியம் செய்பவர்கள், தாங்கள் மருத்துவ மிஷனரி ஊழியத்தின் தெய்வீக மாதிரியான இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகிறோம் என்பதை தங்கள் ஆவியிலும் வார்த்தையிலும் குணத்திலும் வெளிக்காட்டவேண்டும்.

ஒவ்வொரு இடத்திலும் அவருடைய கட்டளைகளுக்கேற்றபடி இந்த வேலை கொண்டுசெல்லப்படவேண்டும் என்ற ஊக்கமான வாஞ்சை எனக்கு இருக்கிறது. இப்போது சில காரியங்கள், விசேஷமாக ஆரோக்கிய உணவுத் தொழில் குறித்த காரியங்கள் செய்யப்படும்விதத்தில், மலைகளைப்போன்ற உயரமான பிரச்சனைகள் நம்மக்கள்முன் இருப்பதை நான் காண்கிறேன். முன்னேறும்போது, அதிக குழப்பங்களைக் கொண்டுவருகிற மனித கண்டுபிடிப்புகளின் மிக அதிகமான கஷ்டங்களை நாம் சந்திக்கவேண்டியது வரும். சூழ்ச்சிகள் உண்மையின்மைக்கே கொண்டுசெல்லும்.

டாக்டர் கெல்லாகும் அவருடைய உடனாளிகளும் அதிக திறமையோடும், வேதனைதரும் முயற்சியோடும் விசேஷமாக ஆரோக்கிய உணவுகளைத் தயாரித்திருக்கிறார்கள். அவர்களுடைய முதன்மையான நோக்கம் மனுக்குலத்திற்கு நன்மை செய்வதே! தேவனுடைய ஆசீர்வாதங்கள் அவர்களுடைய முயற்சிகளில் இருக்கிறது. தேவனுடைய ஆலோசனையை பின்பற்றினால், கிறிஸ்துவின் முன்மாதிரியின்படி நடந்தால், அவர்கள் தொடர்ந்து முன்னேறுவார்கள். சுயநலமின்றி அவரைத் தேடுகிறவர்களுக்கு தேவன் திறமையையும் அறிவையும் கொடுப்பார். நம்முடைய தொழிற்சாலைகளிலிருந்து அனுப்பப்படும் ஆரோக்கிய உணவுகளில் அநேக விதங்களில் முன்னேற்றம் செய்யப்படலாம். மிக எளிமையானதும் விலை அதிகமில்லாததுமான உணவுகளை தயாரிப்பது எப்படி என்று கர்த்தர் தமது ஊழியக்காரருக்கு போதிப்பார். அவருடைய ஆலோசனையிலும், தங்கள் சகோதரரோடு இணைந்தும் நடப்பார்களென்றால், இந்தக் காரியங்களை அநேகருக்கு அவர் போதிப்பார்.

## எல்லா தேசங்களிலுமிருக்கிற நம்முடைய சகோதரருக்கு...!

ஆரோக்கியமான உணவுகளை மிக நேர்த்தியாக தயாரிப்பதைக் குறித்து பெற்றுக்கொள்ளவேண்டிய எல்லா வெளிச்சத்தையும் ஒருசிலருக்கு மாத்திரம் அவர் கொடுப்பதில்லை என்று சொல்லும்படியாக தேவன் எனக்கு அறிவுறுத்தினார். தாங்கள் வசிக்கிற தேசத்துக்குப் பொருந்தும் வகையில் ஆரோக்கிய உணவுகளை தயாரிக்க அவர்களைத் தகுதிப்படுத்தக்கூடிய சாதுரியத்தையும் திறமையையும் வெவ்வேறு இடங்களிலிருக்கிற அநேக மனங்களுக்கு அவர் தருவார்.

தேவனே அனைத்து ஞானத்திற்கும், அனைத்து அறிவிற்கும், அனைத்து தாலந்திற்கும் மூலகர்த்தா. ஆரோக்கிய உணவுகளை தயாரிக்க அநேக மனங்களுக்கு ஞானத்தைக் கொடுப்பதன்வழியாக அவர் தமது நாமத்தை மேன்மைப்படுத்துவார். அவர் அப்படிச் செய்யும்போது, சில காரியங்களில் வெவ்வேறு நபர்களால் தயாரிக்கப்படும் உணவுகள் ஒரேவிதத்தில் காணப்பட்டாலும், ஏற்கனவே ஆரோக்கிய உணவுகளை தயாரிப்பவர்கள் உண்டுபண்ணப்படும் இந்த புதிய உணவுகளை தங்களுடைய உரிமைக்கு ஊறுவிளைவிக்கிற செயலாக பார்க்கக்கூடாது. தேவன் சாதாரண மனிதர்களை எடுத்து அவர்களுக்கு பூமியின் விளைவுகளை உபயோகிப்பதில் திறமையையும் அறிவையும் கொடுப்பார். தமது ஊழியக்காரர்களை அவர் பட்சபாதமின்றி நடத்துவார். ஒருவர்கூட அவரால் மறக்கப்படுவதில்லை. தமது மக்களுக்கு வேலைவாய்ப்பைத் தரும் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு ஓய்வுநாளை ஆசரிக்கும் தொழில் அதிபர்களை உணர்த்துவார். ஏழை மக்களால் வாங்கப்படக்கூடிய விலைக்குறைவான ஆரோக்கிய உணவுகளைத் தயாரிக்க தமது ஊழியக்காரர்களுக்கு அவர் போதிப்பார்.

ஆரோக்கிய உணவு வேலை தேவனுக்குச் சொந்தமானது என்பதையும், சுய ஆதாயத்திற்கான நிதி சம்பந்தப்பட்டதாக அது மாற்றப்படக்கூடாது என்பதையும், நம்முடைய எல்லா திட்டங்களிலும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். அது தேவன் தம்முடைய ஜனங்களுக்குத் தரும் பரிசு. எவ்விடங்களிலுமுள்ள துன்பப்படும் மனுக்குலத்தின் நன்மைக்காக அதன் ஆதாயங்கள் உபயோகப்படுத்தப்படவேண்டும்.

விசேஷமாக, வட அமெரிக்காவிலுள்ள தென் மாநிலங்களில் ஆரோக்கிய உணவு தொழிலகங்கள்வழியாக ஏழைகளையும் தேவையில் இருப்போரையும் பராமரிக்க அநேக காரியங்கள் வகுக்கப்பட்டு, அநேக வசதிகள் செய்யப்படும். அவர்களுடைய ஆத்தும இரட்சிப்பிற்காக உழைக்கும் ஆசிரியர்களின்கீழ், தங்களுடைய நிலத்தில் இலகுவாக

விளைகிறவைகளை எப்படி பயிரிட்டு உணவுகளை ஆயத்தம் செய்யலாம் என்று கற்றுக்கொடுக்கப்படுவார்கள்.

## ஒரு தீயச் செயல்

அதிக காயத்தை ஏற்படுத்தக்கூடிய வேலையை நம்முடைய சகோதரர்களில் சிலர் செய்திருக்கிறார்கள். தம்முடைய வேலையை பராமரிக்கும் ஒரு ஊடகமாக, தேவன் தமது ஜனங்களுக்குக் கொடுத்த ஆரோக்கிய உணவுகளை உற்பத்தி செய்யும் வழிமுறைகளின் அறிவை, தொழிலதிபர்களுக்குத் இந்த மனிதர்கள் தெரியப்படுத்த, அவர்கள் அதை சுயலாபத்திற்காக உபயோகிக்கிறார்கள். தங்களுடைய சொந்த ஆதாயத்திற்காக கர்த்தருடைய பொருட்களை அவர்கள் விற்றுவிட்டார்கள். இவ்வாறு ஆரோக்கிய உணவுகள் தயாரிப்பதுகுறித்து தங்களிடமிருந்த இரகசியங்களை வெளிப்படுத்தியவர்கள், தேவன் கொடுத்திருந்த வேலையை தவறாக உபயோகித்திருக்கிறார்கள். இந்த நம்பிக்கையை காட்டிக் கொடுத்ததன் விளைவுகளை அவர்கள் காணும்போது, தங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆலோசனையை காத்துக்கொள்ளாமல், ஆண்டவர் தமது ஊழியக்காரரை வழிநடத்தி தம்முடைய சொந்தத் திட்டங்களை செயல்படுத்த தாங்கள் பொறுமையற்றிருந்ததைக் குறித்து சிலர் மிகவும் வருந்துவார்கள். இந்த இரகசியங்களைப் பெற்றுக்கொண்ட சிலர், நம்முடைய சுகாதார மையங்களின் உணவு வேலைக்கு வேலிபோடும் சூழ்ச்சிகளைச் செய்வார்கள். தவறாக காட்டுவதால், ஆதரிக்கிறவர்களுக்குக் காயமுண்டாக அவர்களை ஏமாற்றுவார்கள்.

தங்களுடைய நிர்வாகத்தினால் தேவஊழியத்தை எடுத்துக்கட்டவும் முன்னேற்றிச்செல்லவும் முயலுகிறவர்களிடமிருந்து ஆரோக்கிய உணவுத் தொழில் கடன்வாங்கப்படவோ அல்லது திருப்பப்படவோ கூடாது. டாக்டர் கெல்லாக், மற்றவர்களின் உதவியோடு, அதிகம் செலவழித்து, சில விசேஷ உணவுகளைத் தயாரிப்பதற்கான முறைகளை ஆராய்ந்திருக்கிறார். அவைகளை உற்பத்தி செய்ய விலையுயர்ந்த வசதிகளையும் செய்திருக்கிறார். இந்த வேலை அதிக பரிசோதனைகள் செய்யப்படவேண்டியதிருந்ததால், விலையேறப்பெற்ற நேரத்தை அதிகம் எடுத்திருக்கிறது. இப்படியாக உழைத்து, தங்கள் சம்பத்தை முதலீடு செய்திருக்கிறவர்கள், தங்கள் உழைப்பின் பலனை அறுவடை செய்ய அனுமதிக்கப்படுவது சரியானது. தேவனுடைய வேலையை சமயம் ஏற்படும்போது முன்கொண்டுசெல்லுவதற்கான நிதி அவரிடம் இருக்கும்படி, கர்த்தருடைய உக்கிராணக்காரராக, கெல்லாக், தேவனுடைய ஆசீர்வாதத்தினாலே தயாரித்த விசேஷ உணவின் வருமானத்தினுடைய ஒரு நியாயமான பங்கை பெற்றுக்கொள்ள

அனுமதிக்கப்படவேண்டும். அவர்களுடைய சேர்க்கையின் இரகசியங்களைக் கற்றுக்கொண்ட எவரும், சுய இலாபத்திற்காக இந்த விசேஷ உணவுகளை தயாரித்து விற்காதிருக்கட்டும். விற்பனைக்காக முதலாவது இந்த உணவுகளை தயாரித்தவர்களுடன் இணைந்து வேலை செய்வதைப்போன்ற பதிப்பை, அப்படிச் செய்யாத எவரும் கொடுக்கவேண்டாம். சுயநலத்தோடு இந்த உணவுகள் உற்பத்தியில் ஈடுபட எவருக்கும் உரிமை இல்லை. நாம் அனைவரும் கர்த்தருக்கு அருகில் வந்து, தாழ்மையான இருதயத்தோடு நம் ஒவ்வொரு செய்கையிலும் அவரை மகிமைப்படுத்தத் தேடுவோமாக.

நம்முடைய தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் விசேஷ ஆரோக்கிய உணவுகளின் உற்பத்திமுறைகளைக்குறித்த அறிவைப் பெற்றிருக்கிறவர்களுக்கு ஒரு எச்சரிப்பை வைத்திருக்கிறேன். அவர்கள் தங்களுடைய அறிவை சுயநல நோக்கங்களுக்கோ, அல்லது அவருடைய வேலையைத் தவறாக குறிப்பிடும்விதத்திலோ உபயோகிக்கக்கூடாது. இந்த அறிவை பகிரங்கமாக தாக்கவும் கூடாது. இவைகளை பொறுத்துக்கொண்டு, இப்படிச் செய்வது நம்பிக்கையை மறுதலிப்பதற்குச் சமம் என்பதையும், அது ஊழியத்திற்கு நிந்தையைக் கொண்டுவரும் என்பதையும் சபைகள் அந்த சகோதரர்களுக்குக் காண்பிக்கட்டும்.

டாக்டர் கெல்லாகாலும் அல்லது வேறு எந்த முன்னோடியாலும் முதலாவது தயாரிக்கப்பட்ட ஆரோக்கிய உணவுகளை செய்யும் வேலையில் ஈடுபட்டிருக்கிற, ஈடுபட்டிருந்த எவரும், விசேஷ உணவுகளை உற்பத்தி செய்யும் இரகசியங்களை எவருக்கும் வெளிப்படுத்தவேண்டாம். அப்படிச் செய்வதால், அதை முன்கொண்டுசெல்ல உபயோகிக்கப்படவேண்டியதை வஞ்சிக்கிறார்கள். முடவன் வழியைவிட்டு தப்பிப்போய்விடாதபடிக்கு உங்கள் கால்களுக்கு நேர் வழியை ஆயத்தப்படுத்தும்படி, என் சகோதரரே உங்களை வேண்டுகிறேன். ஆரோக்கிய சீர்திருத்தத்தைக்குறித்த குறைந்த அறிவினால், சுத்தமில்லாத உணவுகளை ஆரோக்கிய உணவு என்று சந்தைகளில் வைத்துவிடக்கூடிய எவருக்கும் இவைகளை அறியப்படுத்தவேண்டாம்.

உங்களுடைய அனைத்து பரிமாற்றங்களிலும் நீதியின் பக்கம் நில்லுங்கள். அப்போது தேவன்முன்பாகவும், மனிதர்முன்பாகவும் அனுகூலமற்றவர்களாக காணப்படமாட்டீர்கள். எந்தவித உண்மையில்லாத பழக்கங்களிலும் நுழையவேண்டாம். சுகாதார மையத்தின் ஆரோக்கிய உணவுகளை உற்பத்தி செய்வதை சொந்த இலாபத்திற்காக எடுத்துக்கொள்ளுபவர்கள் தங்களுக்கு உரிமையில்லாத ஒன்றில் உரிமைபாராட்டுகிறார்கள். இவ்வாறு பெரும் குழப்பம் ஏற்படுகிறது. ஆரோக்கிய உணவுகள் என்று அழைக்கப்படும் பொருட்களை சிலர் உற்பத்திசெய்து விற்கிறார்கள். ஆனால் அவைகளில்

ஆரோக்கியமற்ற பொருட்கள் இருக்கிறது. மேலும் பலவேளைகளில், அந்த உணவுகள் மிகவும் தரம் குறைந்தவைகளாக இருப்பதால், அனைத்து ஆரோக்கிய உணவுகளும் ஒரேமாதிரியானவை என்று யூகித்து அவைகளை வாங்குபவர்களுக்கும், அவைகளை விற்பதின் நோக்கத்திற்கும் அதிக கெடுதல் உண்டாகிறது.

சுகாதார மையங்களின் ஆரோக்கிய உணவுகளைக்குறித்து ஏற்படுத்தப்பட்டிருக்கிற தொழில் திட்டங்களை சாதகமாக எடுத்துக்கொள்ள எவருக்கும் உரிமை இல்லை. அதிக செலவுசெய்து டாக்டர் கெல்லாகால் வகுக்கப்பட்ட உணவுகளை கையாள்பவர்கள், முதலில் அவருடன் அல்லது அவருடன் இணைந்து வேலை செய்பவர்களுடன் ஒரு புரிந்துகொள்ளுதலுக்கு வந்து, இவைகளைக் கையாளும் மிகச் சிறந்த முறைகளை கற்றுக்கொள்ளவேண்டும். இந்த வேலையில் சுயநலத்தோடு நுழைந்து, அதே சமயம் தன்னுடைய வாடிக்கையாளர்களிடம் தான் விற்கிற இந்த பொருட்களின் இலாபங்கள் உண்மையில் சுயநலமான விருப்பங்களுக்கு உபயோகப்படுத்தப்படும்போது, அவைகள் நன்மையான தொழிலுக்கு உதவும்படி போகிறது என்னும் உணர்த்துதலை உண்டாக்குபவன், தேவனுடைய அதிருப்தியின்கீழ் இருக்கிறான். அவனுடைய தொழில் நாளாக நாளாக நலிவடையும். அவமானத்திலிருந்து அதை காப்பதற்காக அவனுடைய சகோதரர்கள் தலையிடவேண்டிய அப்படிப்பட்ட சிக்கல்களில் அவன் மாட்டிக்கொள்வான்.

அவருடைய சேவையில் ஈடுபடுகிறவர்களின் சுயநலத்தினால் அது கனவீனப்படுத்தப்படும்போது, கர்த்தர் மிகவும் மனம் வருந்துகிறார். மூட்டு மற்றொரு மூட்டோடு இணைந்திருப்பதைப்போல, தமது வேலையில் ஒவ்வொரு பகுதியும் மற்ற ஒவ்வொரு பகுதியுடனும் இணக்கமாயிருக்க அவர் சித்தங்கொள்ளுகிறார்.

தமது ஜனங்கள் சுயநலமான விருப்பங்களுக்கு மேலாக உயர்ந்து நிற்கவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். தாங்கள் சந்திக்கிற சோதனைகளை அவர்கள் வெற்றிகொள்ளவேண்டுமென்று அவர் வாஞ்சிக்கிறார். பரிசுத்தவான்களின் தோழமைக்கு அவர் அழைக்கிறார். தம்முடைய கண்காணிப்பின்கீழ் தமது ஊழியர்கள் நிற்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார். கட்டடம் ஒன்றிலும் குறைவுபடாமல், பூரணமாகவும் முழுமையாகவும் இருக்கிறதற்கேதுவாக, அவர் தமது ஆலயத்திற்கான பொருட்களை சமப்படுத்தி, மெருகூட்டி, ஒன்றோடொன்று நெருங்கி இருக்கும்படி அவைகளை ஆயத்தப்படுத்துவார்.

பரலோகம் இந்த பூமியிலே துவங்கவேண்டும். கர்த்தருடைய ஜனங்கள் சாந்தத்தினாலும், மென்மையினாலும் நிறையப்படும்போது, தங்கள்மேல் இருக்கிற அவருடைய கொடி நேசமே என்று உணருவார்கள். அவருடைய கனி அவர்களுடைய சுவைக்கு மதுரமாயிருக்கும். மேலிருக்கும் பரலோகத்திற்கு ஆயத்தப்படுவதற்காக கீழே ஒரு பரலோகத்தை உண்டாக்குவார்கள்.

## மக்களுக்குக் கற்பியுங்கள்.

### செயின்ட் ஹெலீனா, கலிபோர்னியா, ஆகஸ்ட் 20, 1902.

எங்கெல்லாம் சத்தியம் அறிவிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் ஆரோக்கியமான உணவுகளை தயாரிப்பதைக்குறித்த அறிவுரைகளும் கொடுக்கப்படவேண்டும். ஒவ்வொரு இடத்திலும், அங்கே இலகுவாகக் கிடைக்கிற விளைபொருட்களை ஞானமாக உபயோகிக்க மக்களுக்குக் கற்றுத்தரவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நாட்டின் தங்களுடைய இடத்தில் தாங்கள் வளர்க்கக்கூடிய அல்லது பாதுகாக்கக்கூடிய விளைபொருட்களை மிகச்சிறப்பாக உபயோகப்படுத்துவது எப்படி என்பதை திறமையுள்ள ஆசிரியர்கள் மக்களுக்குக் காண்பிக்கவேண்டும். இவ்வாறாக, ஏழைகளும், நல்ல சூழ்நிலையில் இருப்பவர்களும் ஆரோக்கியமாக வாழ கற்றுக்கொள்ளமுடியும்.

ஆரோக்கிய சீர்திருத்த ஊழியத்தின் ஆரம்பத்திலிருந்து, கல்வி கற்பிப்பது அவசியம் அவசியம் அவசியம் என்பதை நாங்கள் கண்டோம். மக்களுக்குக் கற்பிக்கும் வேலையை நாம் தொடரவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். நம் தொழிற்சாலைகளிலுள்ள ஆரோக்கிய உணவுகளின் விற்பனை பாதிக்கப்படும் என்ற பயத்தின் காரணமாக, இதை நாம் நெகிழவிடக்கூடாது. அது மிக முக்கியமானது அல்ல. எவ்வாறு சிறந்த உடலுக்குகந்த உணவை பெற்று தயாரிப்பது என்றும், தேவனுடைய சன்மார்க்க சாயலை தங்களில் புதுப்பிக்க தேவனோடு எப்படி ஒத்துழைப்பது என்றும் மக்களுக்குக் காண்பிப்பதுதான் நம்முடைய வேலை.

ஆரோக்கிய உணவுகளை தயாரிப்பதில் தங்களுடைய புத்திக்கூர்மையை நமது ஊழியர்கள் செயல்படுத்தவேண்டும். எவரும் டாக்டர் கெல்லாகினுடைய இரகசியங்களைத் துருவக்கூடாது. மாறாக, ஆண்டவர் அநேக இடங்களிலிருக்கிற அநேக மனங்களுக்கு போதிக்கிறார் என்கிறதை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும். முறையாக தயாரித்து இணைக்கும்போது, அநேக விளைபொருட்கள், விலையுயர்ந்த பொருட்களை, விசேஷமாக ஆரோக்கிய உணவுகளை வாங்கமுடியாதவர்களுக்கு

ஆசீர்வாதமாயிருக்கக்கூடிய உணவுகளாக செய்யப்படமுடியும். ஆசரிப்புக் கூடாரத்தை கட்டுவதற்கு திறமையான அனைத்துவித வேலைகளுக்கும் திறமையையும் அறிவையும் கொடுத்தவர், இயற்கை உணவுப்பொருட்களை இணைத்து எவ்வாறு ஆரோக்கிய உணவுகளைப் பெறலாம் என்கிற திறமையையும் புத்தியையும் தம்முடைய மக்களுக்குத் தருவார்.

ஆரோக்கிய உணவுகளை தயாரிப்பதுகுறித்த அறிவு தேவனுடைய சொத்து. அது தன்னுடைய சக மனிதனுக்கு கொடுக்கும்படியாக மனிதனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைச் சொல்லும்போது, டாக்டர் கெல்லாகும் மற்றவர்களும் அதிகம் ஆராய்ந்து, பூரணப்படுத்தும்படி அதிகம் செலவுசெய்த விசேஷ தயாரிப்புகளை நான் குறிப்பிடவில்லை. அனைவரும் தங்களுக்கென்று செய்யக்கூடிய எளிய தயாரிப்புகளை விசேஷமாகக் குறிப்பிடுகிறேன். இவைகளைக்குறித்த போதனைகள், ஆரோக்கியமாக வாழ விரும்புகிறவர்களுக்கு, விசேஷமாக ஏழைமக்களுக்கு இலவசமாக கொடுக்கப்படவேண்டும்.

ஒவ்வொரு இடத்திலும் இருக்கிற ஆண்களும் பெண்களும் தங்களுடைய பகுதியில் விளையும் இயற்கைப் பொருட்களிலிருந்து ஆரோக்கிய உணவுகளைத் தயாரிப்பதில் தங்களுடைய தாலந்துகளை மேம்படுத்திக்கொள்ள உற்சாகப்படுத்தப்படவேண்டும் என்பது ஆண்டவரின் திட்டமாக இருக்கிறது. அவர்கள் தேவனை நோக்கிப் பார்த்து, தங்கள் திறமையையும் கூர்மதியையும் அவருடைய ஆவியானவரின் நடத்துதலுக்குக்கீழ் செயல்படுத்தினால், எவ்வாறு இயற்கையான விளைச்சல்களிலிருந்து ஆரோக்கிய உணவுகளை தயாரிப்பது என்பதைக் கற்றுக்கொள்ளுவார்கள். இவ்வாறு மாமிச உணவின் இடத்தை எடுத்துக்கொள்ளும் உணவுகளை தங்களுக்காக உண்டாக்க ஏழை மக்களுக்கு அவர்களால் சொல்லித்தரமுடியும். இவ்வாறு உதவிபெற்றவர்கள் மற்றவர்களுக்குக் கற்றுத்தரலாம். அப்டிப்பட்ட வேலை, அர்ப்பணிக்கப்பட்ட வைராக்கியத்துடனும் ஆற்றலுடனும் இனிமேல் செல்லவிருக்கிறது. அது இதற்குமுன் செய்யப்பட்டிருக்குமானால், இன்றைக்கு இன்னும் அதிகமானபேர் சத்தியத்தில் இருந்திருப்பார்கள். போதிக்கக்கூடியவர்கள் இன்னும் அதிகமானபேர் இருந்திருப்பார்கள். நம்முடைய கடமை என்ன என்கிறதை நாம் கற்றுக்கொண்டு, பின்னர் அதைச் செய்வோமாக. மற்றவர்களைச் சார்ந்தும் உதவியற்றவர்களாகவும், தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற வேலையை மற்றவர்கள் செய்ய காத்திருக்கவும் கூடாது.

உணவுகளை உபயோகிப்பதில் நாம் நல்ல தெளிவான பொது அறிவை செயல்படுத்தவேண்டும். குறிப்பிட்ட உணவு நம்மோடு

ஒத்துப்போகவில்லையென்று நாம் காணும்போது, இந்த தொந்தரவின் காரணத்தை விசாரித்து கடிதங்கள் எழுதவேண்டிய அவசியமில்லை. உணவை மாற்றுங்கள். சில உணவுகளை குறைவாக உபயோகித்து மற்ற தயாரிப்புகளை முயற்சிசெய்யுங்கள். சில சேர்க்கைகளால் நம்மீது கொண்டிருக்கும் விளைவுகளை விரைவாக அறிந்துகொள்வோம். புத்தியுள்ள மனிதர்களாக, தனித்தனியாக, கொள்கைகளை ஆராய்ந்து, நம் அனுபவத்தையும் நிதானத்தையும் உபயோகித்து, எந்த உணவு நமக்கு மிகச்சிறந்தது என்று தீர்மானிக்கக்கடவோம்.

நாம் உபயோகிக்கும் உணவுகள், நாம் ஈடுபட்டிருக்கும் தொழிலுக்கும், நாம் வசிக்கிற தட்பவெப்பத்திற்கும் உகந்ததாக இருக்கவேண்டும். ஒரு நாட்டிற்குப் பொருத்தமாயிருக்கிற உணவு மற்றொரு நாட்டிற்குக் பொருத்தமாயிருக்காது.

அதிகமான சிகிச்சை அல்லது மருத்துவ ஆலோசனையைவிடவும் ஒவ்வொரு வாரமும் ஒரு நாளோ அல்லது இரண்டு நாட்களோ உணவை விலக்குவது சிலருக்கு அதிக நன்மையாயிருக்கும். **வாரத்தில் ஒருநாள் உபவாசிப்பது அவர்களுக்குக் கணக்கிடமுடியாத நன்மையானதாக இருக்கும்.**

கொட்டை உணவுகள் பலவேளைகளில் ஞானமின்றி உபயோகிக்கப் படுவதாகவும், அதிக அளவிலான கொட்டைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன என்றும், சில கொட்டைகள் மற்றவைகளைப்போல உடலுக்கு உகந்தவைகளாக இருப்பதில்லை என்றும் நான் போதிக்கப்பட்டேன். வேர்கடலைக்குப் பதிலாக வாதுமைக் கொட்டை உபயோகிக்கப்படலாம். என்றாலும், குறைவான அளவில், தானியங்களோடு, சத்தான சீரணமாகக் கூடிய உணவில் வேர்க்கடலை உபயோகிக்கப்படலாம்.

ஒவ்வொரு ஆகாரத்தோடும் நல்ல பலன்களோடு சாப்பிடக்கூடிய விதத்தில் ஒலிவபழங்களைத் தயாரிக்கலாம். வெண்ணெய் உபயோகிப்பதன் பலன்களை, முறையாக தயாரிக்கப்பட்ட ஒலிவபழங்களை சாப்பிடுவதிலிருந்து பெறலாம். **ஒலிவபழங்களில் இருக்கும் எண்ணெய், மலச்சிக்கலைப் போக்குகிறது. நுரையீரல் காசநோய் கொண்டவர்களுக்கும், அழற்சி கொண்ட வயிற்றிக்கும், வேறு எந்த மருந்தைவிடவும் இது மேலானது. உணவாக மிருகங்களிலிருந்து இரண்டாந்தரமாக வரும் எந்த எண்ணெய்யையும்விட இது நல்லது.**

குறைவாக சமைத்து, அதிகமான பழங்களை அதனுடைய இயற்கை நிலையிலேயே சாப்பிடுவது நமக்கு நல்லது. செழிப்பான

திராட்சையையும், ஆப்பிள், பேரிக்காய், கொட்டையில்லாப் பழங்களையும் கிடைக்கக்கூடிய மற்ற பழங்களையும் அதிகமாக சாப்பிட நாம் மக்களுக்குப் போதிப்போம். தகரத்திற்குப்பதிலாக கண்ணாடிக் குவளைகளை பயன்படுத்தி குளிர்காலங்களில் உபயோகிப்பதற்காக அவைகள் தயாரிக்கப்படட்டும்.

மாமிச உணவைப் பொறுத்தமட்டில், அதை விட்டுவிடவே நாம் மக்களுக்குப் போதிக்கவேண்டும். அதை உபயோகிப்பது மிகச் சிறப்பான சரீர, மன, சன்மார்க்க வளர்ச்சிக்கு எதிரிடையாக இருக்கிறது. டீ, காபி உபயோகங்களுக்கு எதிராக நாம் தெளிவான சாட்சிபகரவேண்டும். திகட்டும் இனிப்புவகைகளையும் தவிர்ப்பது நல்லது. பாலும், முட்டையும், வெண்ணெய்யும் மாமிச உணவோடு வகைப்படுத்தப்படக்கூடாது. சிலருக்கு முட்டை உபயோகிப்பது நன்மையாக இருக்கும். பாலையும் முட்டையையும் உபயோகிப்பது முற்றிலும் அகற்றப்படவேண்டும் என்கிற காலம் வரவில்லை. ரொட்டியையும் பாலையுமே சாப்பிடுகிற சில ஏழைக் குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களிடம் கொஞ்சம் பழங்கள் இருக்கிறது. கொட்டை உணவுகளை அவர்களால் வாங்கமுடியாது. மற்ற எல்லா சுவிசேஷ ஊழியங்களிலும் செய்யப்படுவதைப்போல ஆரோக்கிய சீர்திருத்தத்தைக் கற்பிப்பதன்வழியாக மக்கள் எங்கே இருக்கிறார்களோ, அங்கே அவர்களைச் சந்திக்கவேண்டும். சுவையான, சக்தியுள்ள, விலை அதிகமில்லாத ஆரோக்கிய உணவுகளை தயாரிக்கக் கற்றுத்தரும் வரையில், ஆரோக்கிய சீர்திருத்த உணவைக்குறித்த மிகவும் முன்னேறின காரியங்களைச் சொல்ல சுதந்திரமில்லை.

ஆகார சீர்திருத்தம் படிப்படியாக வரட்டும். பாலும் வெண்ணெய்யும் இல்லாத உணவுகளைத் தயாரிப்பது எப்படி என்பது மக்களுக்குச் சொல்லித்தரப்படட்டும். மனிதர்களுக்குள்ளே அக்கிரமம் அதிகரிப்பதற்கு இணையாக மிருகங்களின் வியாதிகள் அதிகரிப்பதால், முட்டைகளையும், பாலையும் வெண்ணெய்யையும் பாதுகாப்பாக உபயோகிக்கக்கூடாத காலம் வெகு சீக்கிரத்தில் வரும் என்று அவர்களுக்குச் சொல்லுங்கள். விழுந்துபோன இனத்தின் அக்கிரமத்தினிமித்தம், நம் பூமியை சபிக்கிற வியாதிகளின்கீழ் முழு மிருக உலகமும் வேதனைக்குரல் எழுப்பும் காலம் சமீபித்திருக்கிறது.

இவைகளின்று ஆரோக்கிய உணவுகளை தயாரிக்கும் திறமையையும் சாதுரியத்தையும் தேவன் தமது பிள்ளைகளுக்குக் கொடுப்பார். ஆரோக்கியமற்ற அனைத்து சமையல் குறிப்புகளையும் நம் மக்கள் அகற்றட்டும். ஆரோக்கியமாக வாழ்ந்து, தாங்கள் கற்றுக்கொண்டதை மற்றவர்களுக்குப் போதிப்பது எப்படி என்பதை அவர்கள் கற்றுக்கொள்ளட்டும்.

வேதாகம போதனைகளைத் தருவதைப்போலவே இந்த அறிவையும் கொடுக்கட்டும். ஆரோக்கியத்தைப் பாதுகாத்து, உலகத்தை நீண்ட நாட்கள் இயலாதவர்களாக வைத்திருக்கிற அதிகப்படியான சமையலைத் தவிர்த்து, பலத்தை அதிகப்படுத்த மக்களுக்கு அவர்கள் கற்றுத்தரட்டும். **தேவன் ஆதாமுக்கு பாவமில்லாத நிலையில் கொடுத்த உணவே, அந்த பாவமில்லாத நிலையை தேடும் மனிதன் உபயோகிக்க மிகச் சிறந்த உணவு என்பதை வார்த்தையாலும், வாழ்க்கையாலும் மிகத் தெளிவாக்குங்கள்.**

ஆரோக்கிய சீர்திருத்த கொள்கையை போதிப்பவர்கள், மனித முகவர்களின் ஒவ்வொரு செயலும் வாழ்க்கையின் நியதிகளோடு இணக்கமுள்ளதாயிருக்கவேண்டும் என்பதை புரிந்துகொண்டவர்களாக, வியாதிகளையும் அவற்றிற்கான காரணங்களையும்குறித்த அறிவுள்ளவர்களாயிருக்கவேண்டும். ஆரோக்கிய சீர்திருத்தத்தில் தேவன் கொடுத்திருக்கும் வெளிச்சம், நம்முடைய இரட்சிப்பிற்காகவும், உலகத்தினுடைய இரட்சிப்பிற்காகவுமே.

நமது சிருஷ்டிகரால் அவரது வாசஸ்தலமாக ஸ்தாபிக்கப்பட்ட நமது சரீரங்களின்மேல் நாம் விசுவாசமான உக்கிராணக்காரர்களாயிருக்க தேவன் விரும்புகிறார் என்று, நம் சரீரத்தைக்குறித்து ஆண்களும் பெண்களும் அறிவிக்கப்படவேண்டும். “நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே”–2 கொரிந்தியர் 6:16.

ஆரோக்கிய சீர்திருத்தக் கொள்கையை உயர்த்திப்பிடியுங்கள். இருதயத்தில் உண்மையுள்ளவர்களை ஆண்டவர் நடத்தட்டும். இச்சையடக்கக் கொள்கைகளை மிகவும் வசீகரிக்கிறவிதத்தில் கொடுங்கள். ஆரோக்கியமாக வாழ்வதைக்குறித்த போதனைகளைத் தரும் புத்தகங்களை பரப்புங்கள்.

நம்முடைய ஆரோக்கிய புத்தகங்களிலும் பத்திரிக்கைகளிலுமிருந்து, பிரகாசிக்கிற வெளிச்சம் மிக அதிகமான மக்களுக்குத் தேவைப்படுகிறது. மூன்றாம் தூதனுடைய தூதின் எச்சரிப்பிற்கு கவனம் கொடுக்கும்படி மக்களுடைய சிந்தையை கவரக்கூடிய வெளிச்சம்வீசும் ஊடகங்களாக இந்த புத்தகங்களையும் பத்திரிக்கைகளையும் பயன்படுத்த தேவன் வாஞ்சையுள்ளவராக இருக்கிறார். தேவன் ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கும் இந்த நாளிலே, இந்த உலகவாசிகள் கண்டிப்பாகப் பெற்றுக்கொள்ளவேண்டிய வெளிச்சத்தைப் பரப்புகிற விசேஷ வேலையைச் செய்யும் கருவிகளாக நம்முடைய நலவியல் பத்திரிக்கைகள் இருக்கின்றன. ஆரோக்கியம்

இச்சையடக்கம் மற்றும் சமுதாய தூய்மைக்கான சீர்திருத்தத்தின்பேரில் அவை சொல்லமுடியாத செல்வாக்கைக்கொண்டிருக்கின்றன. இவைகளை முறையாகவும், மெய்யான வெளிச்சத்திலும் மக்கள்முன் வைக்கும்போது, மிகப் பெரிய நன்மையைக் கொண்டுவரும்.

ஆண்டவர் நமக்கு வரிவரியாக கொடுத்துக்கொண்டிருக்கிறார். நாம் இந்தக் கொள்கைகளை நிராகரித்தால், அவைகளை போதிக்கிற தூதுவனை அல்ல, இந்த கொள்கைகளைக் கொடுத்த ஒருவரை நாம் நிராகரிக்கிறோம்.

சீர்திருத்தம், தொடர் சீர்திருத்தம், மக்கள் முன்பு வைக்கப்பட வேண்டும். நம் வாழ்க்கையின்வழியாக நமது போதனைகளை நாம் வற்புறுத்தவேண்டும். மெய்யான மார்க்கமும் ஆரோக்கிய சட்டங்களும் கைகோர்த்துச் செல்லுகின்றன. ஆரோக்கியத்தை அழித்து, ஆத்துமாவை மட்டுப்படுத்தி, தெய்வீக சத்தியம் மனதை உணர்த்தாதபடி தடுக்கிற பாவ மனநிறைவுகளிலிருந்து வெளியேறுவதன் அவசியத்தை காண்பிக்காமல், ஆண்கள் பெண்களுடைய இரட்சிப்பிற்காக உழைப்பது கூடாத காரியம். ஒவ்வொரு பழக்கத்தையும் ஒவ்வொரு வழக்கத்தையும் கவனமாக கண்ணோக்கி, சரீரத்திற்கு ஆரோக்கியமற்ற நிலையைக் கொண்டுவந்து மனதின்மேல் இருண்ட நிழலை பரப்புகிறவைகளை உடனடியாக அப்புறப்படுத்தும்படி ஆண்களும் பெண்களும் போதிக்கப்படவேண்டும். தமது வெளிச்சத்தைக் கொண்டுசெல்லுகிறவர்கள் தங்கள்முன்பு எப்போதும் ஒரு உயர்ந்த தரத்தை வைத்திருக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். பின்பற்றப்படும்போது துன்பத்திற்கும் தாழ்விற்கும் வியாதிக்கும் ஆத்தும மரணத்திற்கும் நடத்துகிற சாத்தானுடைய பொய்யான தரத்திற்குமேலாக, தங்களுடைய பூரணமான தரத்தை வார்த்தையாலும் வாழ்க்கையாலும் அவர்கள் அதிகமாக உயர்த்திப்பிடிக்கவேண்டும். ஆரோக்கியத்தை பாதுகாக்கிறதற்கேதுவாக எப்படி புசிப்பது குடிப்பது உடுத்துவது என்ற அறிவைப் பெற்றவர்கள், இந்த அறிவை மற்றவர்களுக்குக் கொடுக்கக்கடவர்கள். பரிசுத்த ஆவியானவருடைய ஆலயமாயிருக்கிற சரீரத்தை எப்படி முறையாக பாதுகாப்பது என்பதை அறிவதற்கேதுவாக, நடைமுறை சாத்தியங்களின் கண்ணோட்டத்தில் ஏழைமக்களுக்கு ஆரோக்கிய சுவிசேஷம் அறிவிக்கப்படட்டும்.

# பகுதி 2

## ஆரோக்கிய உணவுப் பணி!

### 1934 தொகுப்பிற்கான அறிமுகம்

**(1934—ல் பிரதிகளாக எடுக்கப்பட்ட தொகுப்பு)**

1934—ல் லோமாலிண்டா உணவுத் தொழிற்சாலையின் எதிர்காலத்திற்கு கவனம் கொடுக்கப்பட்டபோது, அந்த நிறுவனத்தின் எதிர்கால திட்டங்களை வடிவமைக்கும்போது உபயோகமாயிருக்கக்கூடியவைகளை தொகுத்துத்தரும்படி பசிபிக் யூனியன் கான்பரன்ஸ்—ன் தலைவர்கள் கேட்டுக்கொண்டனர்.

அந்த நேரத்தில் கிடைக்கப்பெற்ற தொகுப்பு இந்தப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. பிரதிகளாக இது அநேகருடைய கரங்களைச் சென்றடைந்தது. சபைக்குக் கொடுக்கப்பட்ட ஆலோசனைகளில் வெளியாகிய ஆரோக்கிய உணவு வேலைகுறித்த காரியங்களையும், ஆகாரத்தையும் உணவையும் குறித்த ஆலோசனைகள் (Counsels on Diet and Food) என்ற புத்தகத்திலிருந்தும், வேறு எங்கும் குறிப்பிடப்படாத சிலவற்றையும் அதோடு இணைத்து ஒரே ஆவணமாக கொடுப்பது இப்போது நல்லது.—A. L. White.

## கல்விக்கூடக் கைத்தொழிலாக

ஆரோக்கிய உணவுகளை உற்பத்திசெய்ய வசதிகளை ஏற்படுத்தவிருக்கும் நேரத்தில் “இதை எவ்வாறு நடத்தப்போகிறோம்? நமக்கும் கூரன்பாங்கில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பள்ளிக்கும் மிக முக்கியமாயிருக்கிற இந்த வேலையை நாம் எங்கே அமைக்கப்போகிறோம்? இன்னும் அதிக மாணவர்கள் அனைத்து துறையிலும் கல்வி கற்க வாசலையும் வாய்ப்பையும் திறக்கிறதற்கேதுவாக இந்தத் தொழில் கூரன்பாங்கில் ஸ்தாபிக்கப்படுமா? என்கிற கேள்விகள் எழுந்தது.

இடத்தையும், பள்ளியைச்சார்ந்து கட்டுவதையுங்குறித்து எனக்குக் கொடுக்கப்பட்ட வெளிச்சத்திலிருந்து, தூய்மைக்கும் பக்திக்கும், மார்க்க ஈடுபாட்டிற்கும் உகந்ததாக இராத, சோதனைகள் மற்றும் கண்ணிகள், பொழுதுபோக்குகள் மற்றும் விடுமுறைகள் நிறைந்திருக்கிற பட்டணங்களிலிருந்து சற்றுதூரத்தில் இந்த ஸ்தாபனம் நிறுவப்படவேண்டும் என்பது தேவனுடைய திட்டம் என்று நான் அறிவேன். மன வல்லமைகளுடன் சரீர உழைப்பையும் இணைக்கும்படி அவர் வகுக்கிறார்.

நம் பள்ளிகளின் கற்பிக்கும் வேலையில் வேளாண்மையைக்குறித்த வைகள் முதல் எழுத்துக்களாயிருக்கவேண்டும் என்று காண்பிக்கப்பட்டது. ஆரோக்கியமாயிருக்க மிக அத்தியாவசியமான பழங்களுக்காகவும், தானியங்கள், காய்கறிகளுக்காகவும் இறக்குமதி செய்யப்படும் பொருட்களை இந்த ஸ்தாபனம் சார்ந்து இருக்கக்கூடாது. நுழையவேண்டிய முதல் வேலை இதுவே. பின்னர், நாம் முன்னேறி வசதிகளை கூட்டும்போது, மேம்பட்ட ஆராய்ச்சிகளும் பொருட்பாடங்களும் உள்ளே வரவேண்டும். கல்வியில் ஒரு கிளையாக நாம் ஏற்கனவே கொண்டிருக்கிறதை அதிலிருந்து விலக்கக்கூடாது.

சிக்கனமாக சமைப்பது எப்படி என்றும், மாமிச உணவுக்கடுத்த அத்தனையையும் தவிர்ப்பது எவ்வாறு என்றும் மீண்டும் நம் வாலிபர்கள்—ஆண்களும் பெண்களும் கற்பிக்கப்படவேண்டும். இது உலகத்திற்கு மிகவும் சீரிய விஷயம். மரித்துப்போன மிருகங்களின் மாமிசத்தில் பிழைத்திருக்கிற ஆயிரக்கணக்கான மனிதர்கள், தாங்கள் அறிந்திராத அநேகக் காரணங்களினால் வேதனைப்பட்டும் மரித்துக்கொண்டும் இருக்கிறார்கள். முறையான ஆரோக்கியமான உணவிற்கும் மாமிச உணவிற்குமிடையே வேறுபடுத்திப் பார்க்கும்படி கடும் முயற்சிகளால் அவர்கள் கற்றுத்தரப்படமுடியும். வாலிபரின் பயிற்சியில் வெகு குறைவான மாமிசத்தைக்கொண்ட உணவுகளைக்கூட தயாரிக்க ஊக்கம் தரக்கூடாது. ஏனெனில், இது ஆரோக்கிய சீர்திருத்தத்தின் தூய்மையை விடவும், எகிப்தின் இருட்டையும் அறியாமையையுமே குறிக்கிறது. தேநீரின் இடத்தை எடுக்கத்தக்கதாக பொருத்தமாக தயாரிக்கப்பட்ட ஆரோக்கிய பானங்களை தானியங்களிலிருந்து தயாரிக்க மாணவர்களுக்குப் போதியுங்கள். மிகச் சுத்தமாகச் செய்யப்பட்டாலும், தேநீர் ஆரோக்கியமானது அல்ல, தேநீரைப்போலவே இருக்கிற மற்ற பொருட்கள் இதோடு கலக்கப்படுவதால், இது ஒரு ஆபத்தான பானமாக மாறியிருக்கிறது.

எங்களுக்கான வெளிச்சம் உங்களிடம் இருக்கிறதா? இருந்தால் எங்களுக்குத் தாருங்கள் என்ற கேள்வி என்னிடம் கேட்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவ்வப்போது அநேக காரியங்கள் எனக்குத் திறக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பலவேளைகளில் சிரமங்கள் எழும்புவதற்குச் சற்றுமுன்னதாக வெளிச்சம் வந்திருக்கிறது. இப்படியாக, சில வாரங்களுக்கு முன்பு நாம் ஸ்டேன்மோரில் இருந்தபோது, நடந்தது. என் சொப்பனங்களில் இரவுமுழுவதும் நாங்கள் மாற்றங்கள் ஏற்படுத்திக்கொண்டிருந்தோம். சிலர் மூட்டைகட்டிக்கொண்டு வேறொரு இடத்திற்கு நகர்ந்துகொண்டிருந்தார்கள். ஒவ்வொருவருடைய நோக்கத்தையும் குறித்து விசாரித்தபோது, அதிகம்

சொல்லப்பட்டது. பள்ளியோடு இணைந்திருக்க எண்ணியிருப்பதால், கூரன்பாங்கிற்குப் போய்க்கொண்டிருப்பதாக சிலர் கூறினார்கள். ஏதாவது வழியில் தங்களுக்கு வேலை கிடைக்கவேண்டும் என்பதற்காக, வேலை செய்யப்போவதாக அவர்கள் சொன்னார்கள். எல்லா படிப்பையும் படிக்கமுடியாவிட்டால், தங்களால் முடிந்ததை படித்து, எப்படி உழைப்பது என்று கற்றுக்கொள்ளுவோம். அது நடைமுறை வாழ்க்கைக்கும், மிஷனரி ஊழியத்தில் செய்யப்படவேண்டிய வேலைக்கும் தங்களை தகுதிப்படுத்தும் என்றார்கள். மற்றவர்களுடைய மனங்களை ஒளிப்படுத்த ஆயத்தப்படுமுன், வாழும் கொள்கைகளைக்குறித்து தங்களுடைய சொந்த மனங்களில் மாற்றங்கள் கொண்டுவரப்படவேண்டும் என்பதை தங்களால் காணமுடிகிறது என்றார்கள்.

புசிப்பதிலும் குடிப்பதிலும் இச்சையடக்கத்தோடு இருப்பதைக்குறித்த நல்ல கருத்துக்கள் கொண்டுவரப்பட்டது. நாம் முதலாவது கற்றுக்கொள்ள வேண்டும். பின்னர் மற்றவர்களுக்கு மிஷனரி ஊழியம் செய்யும்படி வெளியே போகும்போது, அவர்களுக்கு நம்முடைய அனுபவங்களைக் கொடுக்கமுடியும். எப்படி வேலைசெய்வது என்பதைக்குறித்த நடைமுறை அறிவைமாத்திரமல்ல, கூரன்பாங்கில் எப்படி நமது வேதாகமங்களைப் படித்து ஆராய்வது என்பதையும் கற்றுக்கொள்ளுவதற்கான மிக சாதகமான சந்தர்ப்பங்களும் நமக்குக் கிடைக்கும். அப்போது, “வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுவதினால்தானே. என் முழு இருதயத்தோடும் உம்மைத் தேடுகிறேன், என்னை உமது கற்பனைகளைவிட்டு வழிதப்பவிடாதேயும். நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்” என்று சங்கீதம் 119–ல் இருக்கிற தாவீதின் வார்த்தைகளை நம் அனுபவத்தில் நாம் அறிவோம்.

ஆண்களும் பெண்களுமாக கணிசமானபேர் ஒரு நோக்கத்திற்காக எழுப்பப்பட்டனர். நம்முடைய வழிமுறைகளை தெரியப்படுத்தி, அதினால் மக்கள் குடியிருப்புகளில் நாம் ஸ்தாபிக்கும் தொழிலிலிருந்து நமக்குக் கிடைக்கும் நன்மைகளை துறக்கவேண்டுமா? இந்த ஆரோக்கிய உணவுகளை எப்படிச் செய்வது என்ற அறிவியலை நாம் கொடுத்துவிடவேண்டுமா? இறந்துபோன மிருகங்களின் மாமிசத்தை பயன்படுத்தாமல் எப்படி வாழமுடியும் என்பதை ஏழை மக்களுக்கு நாம் போதிக்கவேண்டுமா? கொட்டைகளை எவ்வாறு விதைத்து வளர்ப்பது, மற்றவைகளால் தயாரிக்கப்படும் அதிக விலைகொடுத்து வாங்கவேண்டியதிருக்கிற பொருட்களை தங்களுக்கென்று எப்படி விளைவிப்பது என்பதை சத்தியத்திற்குள் வரும் ஏழை மக்களுக்கு

கற்றுத்தரவேண்டுமா? இந்த உணவுகளை தங்களுக்கென்று எப்படி தயாரிப்பது என்பதை கற்றுத்தரவேண்டுமா? என்று மாமிசம், தேநீர், காபி போன்றவைகளின் இடங்களில் அதிக ஆரோக்கியமான ஆகாரத்தைக் கொடுப்பதற்கு மற்றவர்களுக்கு கற்பிப்பதற்கான ஆலோசனைகள்குறித்த கேள்விகள் கேட்கப்பட்டன.

இவைகள் முக்கியமான கேள்விகளாகவும், விடுவிக்கிறதற்கு கடினமானவைகளாகவும் தோன்றியது. பின்னர்: "ஆரோக்கிய சீர்திருத்தம் மிகப் பெரிய காரியம். அது முக்கியமான காரியம். இந்த மிஷனரி வேலை வாழ்க்கையின் பெரும்பாதைகளிலும், சந்துகளிலும் எடுத்துச்செல்லப்படவேண்டும். மூன்றாம் தூதனின் தூது, 1898–ற்கான நிகழ்கால சத்தியம். சரீரத்தோடு கரங்கள் இணைந்திருப்பதைப்போல ஆரோக்கிய செய்தி இந்தத் தூதோடு நெருக்கமாக இணைந்திருக்கிறது. எனவே, ஆரோக்கிய சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தும் மிகச்சிறந்த முறைகளுக்கு வெளிச்சம் கொடுக்கப்படவேண்டும். மாமிசமே மனித சரீரத்திற்குள் அறிமுகப்படுத்தப்படக்கூடிய மிகப் பெரிய வியாதி பெருக்கி. ஆனால் மிக விலைக்குறைவான வாழ்க்கைமுறைகளை அளிக்காதபோது, ஆரோக்கிய சீர்திருத்தத்தை நீங்கள் போதிக்கமுடியாது. சத்துருவிற்கு எந்தவழியிலும் அனுகூலம் இருக்கக்கூடாது. இந்த வாழ்க்கையைக்குறித்து அவர் கொடுத்துள்ள ஒவ்வொரு நியதிகளையும் கைக்கொள்ளுகிறவர்களை மாத்திரமே ஆண்டவரால் ஆசீர்வதிக்கமுடியும்..." என்ற ஞானத்தின் குரல் கேட்கப்பட்டது.

நிதிகுறித்த நம்முடைய சொந்த ஆர்வங்களுக்கு எதிராக வேலைசெய்வதுபோன்று காணப்படக்கூடிய ஒரு வேலை செய்யப்படவேண்டும் என்று நான் காண்கிறேன். இது மற்றவர்கள் நமக்குக் கொடுக்கவேண்டுமென்று நாம் விரும்புகிற செய்தியை நாம் மற்றவர்களுக்குக் கொடுப்பதைக்குறித்தது. சரியான ஆரோக்கிய சீர்திருத்தத்திற்கு எவர்களை மீண்டும் கொண்டுவர நாம் விரும்புகிறோமோ, அவர்களுக்கு எளிமையான கொட்டை உணவுகளை தங்களுக்காக தயாரிப்பது எப்படி என்று போதியுங்கள். தங்களுக்காக தாங்களே செய்யாவிட்டால், இவைகளை பெறக்கூடாத ஏழைகள் அவர்கள்.

ஒரு சிலரே என்னவேன்று அறிந்திருக்கிற ஒரு வேலை நம்முடைய சபைகளால் செய்யப்படவேண்டியதிருக்கிறது. "பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்; வஸ்திர மில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள்"

(மத்தேயு 25:35,36) என்று கிறிஸ்து கூறினார். அறுவடை வயலில் இருக்கும் ஊழியக்காரர்களைத் தாங்குவதற்காக நம்முடைய சம்பாத்தியங்களைக் கொடுக்கவேண்டும். சேர்க்கப்படப்போகிற அரிக்கட்டுகளினிமித்தம் களிகூருவோம். இது சரியாக இருந்தபோதும், இன்னும் தொடாத வேலை ஒன்று இருக்கிறது. அது செய்யப்படவேண்டும். கிறிஸ்துவின் ஊழியம் வியாதியஸ்தர்களை சுகப்படுத்தி, நம்பிக்கையற்றவர்களுக்கு உற்சாகங்கொடுத்து, மனம் உடைந்தவர்களின் காயங்களைக் கட்டுவதாக இருந்தது. மனுக்குலத்திலிருக்கிற தேவையிலும் வேதனையிலும் இருக்கிற மனிதருக்கு மத்தியில் இந்த மறுசீரமைக்கும் வேலை செய்யப்படவேண்டும்.

தேவன் உங்களுடைய தாராள குணத்தை மாத்திரமல்ல, மகிழ்ச்சியான முகத்தையும், உங்களுடைய நம்பிக்கைதரும் வார்த்தைகளையும், உங்கள் கரத்தின் தொடுதலையும் கேட்கிறார். அல்லல்படுகிற தேவனுடையவர்கள் சிலரை அதிலிருந்து விடுவியுங்கள். மீண்டும் வெளிச்சத்தை அவர்களுக்குக் கொண்டுவாருங்கள். தங்கள் தைரியத்தை இழந்துபோன ஆத்துமாக்கள் உண்டு; அவர்களோடு பேசுங்கள். அவர்களுக்காக ஜெபியுங்கள். ஜீவ அப்பத்தின் தேவையிலிருக்கிறவர்கள் உண்டு; தேவனுடைய வார்த்தையிலிருந்து அவர்களுக்கு படித்துக் காண்பியுங்கள். எந்த தைலமும் எட்டக்கூடாத — எந்த மருந்தும் குணப்படுத்தக்கூடாத வியாதி உண்டு. அவர்களை இயேசுவண்டை கொண்டுவாருங்கள். மனித மனங்களில் உணர்த்துதல்களை உண்டுபண்ண உங்களுடைய எல்லா வேலையிலும் கிறிஸ்து இருப்பார்.

இதுதான் செய்யப்படவேண்டிய மருத்துவ மிஷனரி ஊழியம். நீதியின் சூரியனுடைய வெளிச்சத்தை வியாதிப்பட்ட, துன்பத்திலிருக்கிறவர்களின் அறைகளில் கொண்டுவாருங்கள். ஏழையான வீடுகளில் இருப்பவர்களுக்கு சமைப்பது எப்படி என்று கற்றுத்தாருங்கள். இம்மைக்குரிய ஆவிக்குரிய மன்னாவினால் "அவர் தமது மந்தையை மேய்ப்பனைப்போல போஷிப்பார்" "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது" (மத்தேயு 11:28–30) என்று கிறிஸ்து உங்களை அழைக்கிறார்.—MS 105, 1895. Written August 26, 1898.

# தொழிலாளர்களின் குணம்

கூரன்பாங்கிலுள்ள பள்ளிக்கூட நிலத்தின் அனுகூலங்களை முன்வைத்திருக்கிறோம். இங்கு பள்ளியை ஸ்தாபிப்பதற்கு நமக்கு வேதாகமமே வழிகாட்டியும் ஆசிரியருமாக இருந்தது என்பதை காண்பித்திருக்கிறோம். ஒரு ஆரோக்கிய உணவு உற்பத்தித்தொழிலை இங்கு செய்வது என்பது சமீபத்திய திட்டம். இது மிகப் பெரிய பொறுப்பு. தேவனுக்குப் பயப்படுகிற, தங்களுடைய கொடுக்கல் வாங்கல்களிலெல்லாம் அவரைக் காண்கிற, உண்மையுள்ள, கண்ணியமான, ஒவ்வொரு பதவியிலும் மரியாதையுள்ள, நேசிக்கத்தக்க, மற்றவர்களை வழிநடத்திச்செல்லத்தகுதியுள்ள மனிதர்களை இது அழைக்கிறது. அவர்கள் பண்புள்ளவர்களாகவும், கிறிஸ்தவத்தின் கனிவுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். கிறிஸ்துவே அவர்களுடைய பலமும் அவர்களுடைய நீதியுமாயிருக்கவேண்டும்.

நற்கிரியைகளினால் அவர்களுடைய குணம் நறுமணமுள்ளதா யிருப்பதை அவர்களோடு தொடர்புள்ள வாலிபர்கள் காணவேண்டும். அவர்களுடைய வாயிலிருந்து சமாதானமுள்ள, சண்டையைக் கிளராத வார்த்தைகளை அவர்கள் கேட்கவேண்டும். எல்லா மனிதர்களையும் தேவனுடைய குமாரனின் இரத்தத்தினால் வாங்கப்பட்டவர்களாகக் காண்கிற, அவர்களோடு பிரியமாகவும் மென்மையாகவும் அன்பாகவும் பேசுகிற மனிதர்களை அவர்களில் காணவேண்டும்.

இயக்குனர் பதவிகளில் இருக்கிறவர்களுக்கு: “கிறிஸ்துவின் உக்கிராணக்காரராக, நீங்கள் யாரை நடத்துகிறீர்களோ அவர்களுக்கு மேய்ப்பனாகச் செயல்படவேண்டும் என்று நான் சொல்லுவேன். கனிவாகப் பேசுங்கள்; உங்கள் உதடுகளிலிருந்து அதிகாரமுள்ள ஒரு வார்த்தையும் வெளிப்படவேண்டாம். தேவனுடைய சுதந்தரத்தை ஆட்சி செய்யாதிருங்கள். நீங்கள் நடத்துகின்றவர்களின் வேலையை இனிமையும் மகிழ்ச்சியுமுள்ளதாக்குங்கள். மாணவர்களை மதிக்கும்படி மற்றவர்களுக்கு எப்படிப் போதிக்கலாம் என்பதற்கு உதாரணம் தாருங்கள். இதை நீங்கள் செய்யும்போது தேவன் அபரிதமாக ஆசீர்வதிப்பார்.

தங்களை நடத்துகிறவர்களின் தோழமை தங்களுக்கு இருக்கிறது என்று வாலிபர்கள் உணரும்போது, அவர்களுக்கு தங்களுடைய நம்பிக்கையையும் அன்பையும் தருவார்கள். கடினமான அதிகாரம் எதுவும் அங்கே இருக்கக்கூடாது. நல்ல பழக்கங்களைக் கற்றுத்தர பள்ளியில் கொடுக்கப்படும் கல்வியில் இது ஒரு பகுதி. அனைத்து இளம் மனிதனுக்கும் இளம் மனுஷிக்கும் அவர்களுடைய சோதனைகளும் போராட்டங்களும்

இருக்கின்றன. புத்திசாலித்தனமற்ற சர்வாதிகாரமும், கிறிஸ்துவின் ஊழியக்காரனாயிருக்கவேண்டியவன் குற்றப்படுத்தும் ஆவியில் இனிமை காண்கிறான் என்கிறதை காண்பிக்கிற வார்த்தைகளும், தீமையின் புளிப்பு தன் வேலையைத் துவங்க நடத்துகிறது. சண்டை, கடுமை, வாதங்களின் ஆவி உள்ளே வருகிறது. கிறிஸ்து கனவீனப்படுத்தப்படுகிறார். அவருடைய நாமம் உயர்த்தப்படுகிறதில்லை.—MS 159, 1898. Written December 8, 1898.

## விஸ்தாரமான தளம்

கூரன்பாங்கில் ஆரோக்கிய உணவுகள் உற்பத்தி செய்யப்பட்டு, சத்தியத்தின் தரம் உயர்த்தப்படுகிற ஒவ்வொரு இடத்திற்கும் அனுப்பப்படவேண்டும். இறந்துபோனவைகளாக சந்தைக்குக் கொண்டுவரப் படும் கால்நடைகளைக்குறித்த கேள்வியை உலகசம்பந்தமான செய்தித் தாள்கள் கையாள்கின்றன. மிருகங்களில் ஒன்றோ அல்லது இரண்டோதான் புசிப்புக்கு ஏற்றதாக அறிவிக்கப்படுகின்றன. அறிவுள்ள மனிதனை இது எழுப்புகிறது. மாமிச உணவின் இடத்தை எடுத்துக்கொள்ள என்ன செய்யலாம் என்று மக்கள் கேட்கின்றனர். எலியாவின் ஆவியில் போய் கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்தும் முறையான வழிகளில் வேலைசெய்ய இதுதான் நமது நேரம்.—Christian Education 14, 1899. Written January, 1899.

## சுகாதாரமற்ற உணவுகளுக்கு தேவனுடைய மாற்றீடு

(சுகாதாரமான உணவுத் தொழிலுக்கும் பள்ளிக்குமிடையேயிருக்கிற தொடர்பைக்குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு ஜூலை 22, 1899—ல் ஒரு ஓய்வுநாளின் மதியத்தில் பேசிக்கொண்டிருந்தபோது, சகோதரி உவைட் கீழ்க்கண்ட பதிலைக் கொடுத்தார்).

மிருக உணவுகளை நாம் விட்டுவிடவேண்டிய காலம் வெகு தூரத்திலிருக்காது என்பதே எனக்குக் கொடுக்கப்பட்ட வெளிச்சம். பாலையும் கூட விட்டுவிடவேண்டியதிருக்கும். வியாதிகள் துரிதமாக பெருகிவருகின்றன. மனிதன் பூமியை கெடுத்ததால், தேவனுடைய சாபம் பூமியின்மேல் இருக்கிறது. மிருக உணவிற்குப்பதிலாக வேறு ஏதாவது உணவை மனித குடும்பத்திற்கு மாற்றீடாக வைக்கும் நிலைமைக்கு மனிதனுடைய பழக்கங்களும் வழக்கங்களும் இந்த பூமியை கொண்டுவந்திருக்கின்றன. நமக்கு மாமிச உணவு அவசியமே இல்லை. தேவன் நமக்கு வேறு எதையாகிலும் தருவார்.

இந்த நிலத்தைப்பற்றி நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது, “இங்கே எதுவும் வளர்க்கமுடியாது” என்று சொல்லப்பட்டது. “என்றாலும் நம்முடைய

ஆண்டவரால் வனாந்தரத்திலே ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தமுடியும்" என்று நான் சொன்னேன். அவருடைய நடத்துதலின்கீழ் உணவு போதுமானதாயிருக்கும். அவருடன் சரியான உறவில் நம்மை நாம் வைக்கும்போது, அவர் நமக்கு உதவுவார். அவருக்கு கீழ்ப்படிந்து நாம் உண்ணும் உணவு, நம்மை திருப்திப்படுத்தும். தேவனுடைய ஆசீர்வாதம் உணவின்மேல் இருந்தால், நாம் நினைக்கிறதற்கும் மிகக்குறைவான உணவினாலும் நாம் பிழைக்கமுடியும். அது அவருடைய மகிமைக்காக இருக்குமென்றால், அவரால் அதை பெருக்கமுடியும்.

தேவன் ஆரோக்கிய சீர்திருத்த இயக்கத்தில் இருக்கிறார் என்கிறதை நாம் புரிந்துகொள்ளவேண்டியது அவசியம். நாம் கிறிஸ்துவை அதிலே வைக்கும்போது, அனைத்து சாத்தியங்களையும் நிகழ்வுகளையும் பிடித்துக் கொள்ளுவது நமக்கு சரியாக இருக்கும்.

ஆரோக்கிய உணவுத் தொழில் நமது பள்ளியோடு இணைந்திருக்கவேண்டும். அதற்கான ஏற்பாடுகளை நாம் செய்யவேண்டும். நோயாளிகளைக் கவனிக்க நாம் கட்டடங்களை எழுப்புகிறோம். அங்கே நோயாளிகளுக்கு உணவு தேவைப்படும். விருப்பங்கள் எழும் இடங்களிலெல்லாம் ஆரோக்கிய சீர்திருத்த கொள்கைகளை மக்களுக்கு போதிக்கவேண்டும். இந்த வழி உள்ளே கொண்டுவரப்படுமாயின், சத்தியத்தைக் கொடுக்கும் வேலைக்கு இது நுழைவாயிலாக இருக்கும். இங்கே சுகாதார உணவுத் தொழில் ஸ்தாபிக்கப்படவேண்டும். பள்ளியுடன் இணைந்துள்ள தொழில்களில் இதுவும் ஒன்று. பெற்றோர்கள் இந்தத் தொழிலில் வேலை பெற்று, பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பலாம் என்று தேவன் எனக்குப் போதித்தார். ஆனால் செய்யப்படுகின்ற அனைத்தும் மிகவும் எளிமையாகச் செய்யப்படவேண்டும். எதிலும் ஊதாரித்தனம் கூடாது. திடமான வேலை செய்யப்படவேண்டும். வேலை திடமாக செய்யப்படாதபோது, அஜாக்கிரதையான அனுபவங்கள் விளையும். ஒவ்வொரு துறையிலும் திடமான, நன்கு தேறின தொழிலாளர்கள் நமக்குத் தேவை. இந்தத் துறையிலுள்ள உதவிக்காரர்கள் பரிசுத்த ஆவியினால் கட்டுப்படுத்தப்படும்போது, ஆசரிப்புக்கூடாரத்தில் வேலை செய்தவர்களுக்கு அறிவையும் திறனையும் கொடுத்ததைப்போலவே உணவுகளை உற்பத்தி செய்வதில் ஆண்டவர் அவர்களுக்கு சாதுரியத்தையும் அறிவையும் தருவார். சரீரமாகிய கூடாரத்தை கட்டுவதில் சரியான தன்மையுள்ள வேலையைச்செய்ய அவர் அவர்களைத் தகுதிப்படுத்துவார்.—Australasian Union Conference Record, July 28, 1899.

## மனித கூட்டமைப்புகள்

ஜாக்கிரதையாக இயங்கும்படி தேவன் அழைக்கிறார். அவிசுவாசிகளுடன் கூடிக்கொள்ளுவதற்கெதிராக அவர் எச்சரிக்கிறார். அவர்களோடு தொழில் உறவுகளில் நாம் நம்மைப் பிணைத்துக்கொள்ளக் கூடாது. இப்படிச் செய்கிற எவரும் மன்னிக்கப்படக்கூடியவர்கள் அல்ல.

தமது வேலையைச் செய்யும்படி தேவன் நியமித்திருக்கிறவர்கள், ஆரோக்கிய உணவுகளின் விற்பனையைக்குறித்த காரியத்தில் சில கட்டுப்பாடுகளுக்கு இசைந்துபோவதற்காக தங்களை கட்டிப்போடக்கூடாது. இப்படிச் செய்கிறவன் கிறிஸ்துவின் நுகத்தைச் சுமந்திருக்கவில்லை; மாறாக, மனிதர்கள் இயற்றிய நுகத்தை சுமந்துகொண்டிருக்கிறான். ஆண்டவர்தான் அனைத்துக்கும் உரிமையாளர். அப்படி சில கட்டுப்பாடுகளோடு இசைந்துபோகாத பட்சத்தில் அவைகளைக் கையாள முடியாது என்பவைகளை அப்படியே விட்டுவிடவேண்டும் என்ற அறிவுரை எனக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. தமது சொந்த பொருட்களுக்கு ஆண்டவர்தாம் மேலாளர். தமது ஊழியக்காரரைக் கட்டிப்போடுகிற கட்டுப்பாடுகளுக்கு அவர் எதிர் உத்தரவுகளைக் கொடுப்பார். சூழ்நிலைகள் வேண்டுவதுபோல செயல்படுவதற்காக அவைகளை அப்படியே விட்டுவிடவேண்டும்.

தமது சேவையில் நாம் கையாளவேண்டும் என்று அவர் விரும்புகிற பெருட்களைக்குறித்த அனைத்தையும் தேவன் அறிந்திருக்கிறார். மேற்பரப்பிற்குக் கீழே பார்த்து, தேவனுடன் இணைந்து உழைக்கிறவர்களை கட்டுப்படுத்தும்படி மனிதர்களை நடத்துகிற நோக்கங்களை அவரால் வாசிக்கமுடியும். குறிப்பிட்ட முடிவுகளை எட்டும்படி மனிதர்கள் தங்கள் உடன்பணியாளர்கள்மேல் கட்டுப்பாடுகளை வைக்கலாம். மற்றவர்கள் தங்களுடைய விதிமுறைகளுக்கு மிகவும் சரியாக ஒத்துவருவதை அத்தியாவசியமாக்குவதினால், முன்னேறிச்செல்லவேண்டும் என்று தேவன் அறிவித்த வேலையை அவர்கள் கட்டிப்போடலாம். குறிப்பிட்ட காரியத்தை ஆதாயப்படுத்தும் வாஞ்சையில், தேவனால் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட சாதுரியத்தையும் தாலந்தையும் தங்களுக்கென்று பயன்படுத்துகிறார்கள். — Letter 51, 1900. Written March 29, 1900.

## சுகாதார உணவு வேலையில் தனியுரிமை இல்லை

மனிதர் ஏற்படுத்தியிருக்கிற குறிப்பிட்ட கட்டுப்பாடுகளுக்கு ஒத்துப்போகும் ஒப்பந்தத்துடன், ஆரோக்கிய உணவுகளைக் கையாளுபவர்களை கட்டும்படியான உத்தேசம் எந்த நாட்டிலுமிருக்கிற ஏதாவது சபைக்கும் அல்லது விசுவாசிகளின் கூட்டத்திற்கும்முன்பு

வைக்கப்பட்டால், அதற்கான பதில்: “கூடாது” என்பதுதான் எப்போதுமே! தேவனுடைய வேலை கட்டப்பட்டிருக்கவில்லை.

டாக்டர் கெல்லாகிற்கு தேவன் தமது மிகப்பரந்த ஊற்றிலிருந்து ஞானத்தைக் கொடுத்திருப்பாரானால், நிகழ்காலத்தின் நெருக்கடி நிலையைச் சந்திப்பதற்கான பொருட்களையும் அறிவியல் அறிவையும் கொடுத்திருப்பாரானால், தேவன் தமது மக்களை மறந்துவிடவில்லை என்று காண்பிப்பதற்கு, அவர்மேல் வைக்கப்பட்ட இந்த அன்பளிப்பு அதன்மேல் அவருக்கு ஒரு காப்புரிமையைக் கொடுக்கிறதா? இந்த அன்பளிப்பு டாக்டர் கெல்லாகிற்குச் சொந்தமானது அல்ல. மாறாக, அவரையுங்கடந்த மாபெரும் வல்லமைக்குச் சொந்தமானது. தானும் மற்ற மனிதர்களைப்போலவே கற்பிக்கப்பட்டு, பயிற்சிக்கப்படவேண்டியதிருக்கிற மனிதன் என்பதை டாக்டர் கெல்லாக் மறந்துவிட்டார். தேவன் அவரை மிக அதிகமாக கனப்படுத்தியிருக்கிறார். அவர் கிறிஸ்துவின் நுகத்தை சுமந்துகொண்டு, கிறிஸ்துவின் பாடசாலையில் அவருடைய சாந்தத்தையும் மனத்தாழ்மையையும் கற்றுக்கொண்டிருக்கும் காலம்வரை, தேவன் அவரைத் தொடர்ந்து கனப்படுத்துவார். டாக்டர் கெல்லாக் தாமாகவே உண்டாக்கவில்லை. அறிவின் ஊற்றிலிருந்து பருகக்கூடியவர் அவர் ஒருவர் மாத்திரமல்ல. தாம் போதிக்கும் மற்ற மனிதர்களும் ஆண்டவருக்கு உண்டு. டாக்டர் கெல்லாகின் அறிவு, தான் உண்டுபண்ணிய பொருளாக எடுத்துச்செல்லுவதற்காக தேவனிடமிருந்து அவருக்குக் கொடுக்கப்படவில்லை.

தமது ஜனங்களின் நன்மைக்காக, தேவனால் அளிக்கப்பட்ட ஞானத்தினால், டாக்டர் கெல்லாக் சுகாதார உணவுகுறித்த சிலவற்றை கண்டுபிடித்திருப்பாரானால், இந்தப் பொருட்கள் தன்னுடையது என்று ஏன் அவர் உணரவேண்டும்? இது தேவனுடைய வேலையின் ஒரு பகுதி. மேலும் இது பூரணமாவதிலிருந்து வெகு தொலைவிலிருக்கிறது. என்றாலும் ஆண்டவரோடு இணைந்திருக்கிற ஒவ்வொருவரும் ஆண்டவர் தமது ஏராளத்திலிருந்து கொடுத்த ஞானத்தினால் கண்டுபிடிக்கவும், திட்டமிடவும், பரிசோதித்துப் பார்க்கவும் சுதந்தரவாளிகளாயிருக்கிறார்கள். மிகச்சிறந்த விதத்திலும் மிக ஆரோக்கியமானவிதத்திலும் உணவைத் தயாரிக்கும் வழிகளைக்குறித்த அறிவை தேவன் தருவார். இந்த உணவுகளை விற்பது குறித்த, இதை அல்லது அதைச் செய்வோம் என்று கூறுகிற ஒப்பந்தத்தில் தேவனுடைய பிள்ளைகள் எவரும் கையெழுத்திட எவ்வித முயற்சியும் எடுப்பதை ஆண்டவர் தடைசெய்கிறார்.

ஆரோக்கிய உணவுகளின் காரியத்தில் மாபெரும் முன்னேற்றங்கள் செய்யப்படும். சில உணவுகள் மிகச்சிறந்த மிக ஆரோக்கியமானவிதத்தில் தயாரிக்கப்படவில்லை என்பது கண்டுபிடிக்கப்படும். தாங்கள் இருக்கும் இடத்திலேயே நின்றுவிடாது, இந்த தயாரிப்புகள் இப்போதிருப்பதைவிடவும் அதிக பூரணமானவைகளாகும்வரை பரலோக நடத்துதலின்கீழ் வேலை செய்யக்கூடிய ஆண்களையும் பெண்களையும் ஆண்டவர் அழைக்கிறார். முன்னேற்றும் காரியத்தை திறமையுள்ள மனங்கள் எடுத்துக்கொள்ளட்டும். ஆண்டவர் ஞானம் கொடுப்பார். ஆனால் உங்கள் ஞானம் நீங்களே உண்டாக்கியது என்றோ, இந்த ஞானத்தினால் உற்பத்தி செய்தவைகளை உங்களுக்குப் பிடித்ததுபோல கட்டிவைக்க உங்களுக்கு உரிமை இருக்கிறது என்றோ யோசிக்கத் துவங்கும்போது, நீங்கள் கிறிஸ்துவின் தளத்தில் இல்லை. நீங்கள் உங்கள் கால்களுக்குக் கோணலான பாதையை உண்டாக்குகிறீர்கள். முடமாயிருக்கிற அநேகர் பாதையைவிட்டு விலக்கப்படுவார்கள்.

கொடுக்கும்படியாகப் பெற்றுக்கொள்ளும் மனிதர்களை தேவன் அழைக்கிறார். ஆண்டவருடைய வேலை ஒரு மூலையில் செய்யப்படக் கூடாது. பாரபட்சமற்ற, சுயநலமில்லாத சாட்சிகள், சுயசாட்சியைக் கொண்டவர்களாக ஆண்டவர் தங்களுக்குக் கொடுத்தவைகளை மற்றவர் களுக்குக் கொடுக்கவேண்டும். சீர்திருத்தத்தில் வரும் ஒரு வெற்றி, மற்றொரு வெற்றிக்கும், அது மேலும் ஒரு வெற்றிக்கும் நடத்திச்செல்லவேண்டும். தேவனுடைய ஊழியக்காரர்கள் கிறிஸ்துவின் கல்விச்சாலையில் கற்றுக்கொள்ளுகிறார்களென்றால், இந்த விளைவு காணப்படும். அப்போது தங்களுடைய தொழில் பரிமாற்றத்தில் சுயநலமான ஒரு நூலிழையைக்கூட கொண்டுவரக்கூடாது என்பதை அவர்கள் உணருவார்கள். “நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்” என்று தேவன் சொல்லுகிறார். தேவன் கொடுத்த சாதுரியமும் அறிவும் நம்மைப் பலப்படுத்தினதால் நாம் செய்த அனைத்து முன்னேற்றங்களையும் நம் எல்லகளில் நாம் வெளிக்காட்டவேண்டும். இந்த வேலையை முன்னேற்றுவதில் இருக்கும் ஒவ்வொரு நடைமுறை காரியமும் ஒரு மனிதனின் சொத்தாக மாறிவிடக்கூடாது. ஏனெனில், இஸ்ரவேலரின் பாளையம் முழுமைக்கும் வானத்திலிருந்து மன்னாவைக் கொடுத்த பரலோகப் பிதாவிடமிருந்து அது வருகிறது. தேவன் தங்களுக்குக் கொடுத்திருக்கும் ஞானத்தினால் மனிதன் சாதிக்கின்றவைகள், ஊழியத்தில் ஒரு பகுதியை மாத்திரம் முன்னே கொண்டுசெல்ல உபயோகப்படுத்தப்படக்கூடாது. மாறாக, தேவனுடைய வேலையை முழுமையாகக் கொண்டுசெல்ல உபயோகிக்கப்படவேண்டும். —MS 30, 1900. Written June 18, 1900.

## தேவனுடைய சேவையின் ஒரு பகுதி

உங்களுக்குச் சொல்லும்படியான சில காரியங்கள் என்னிடம் இருக்கிறது. உணவுத்தொழிற்சாலையில் உங்களுக்கு ஒரு இடத்தை ஆண்டவர் திறந்திருக்கிறார். அவர் உங்களை ஆசீர்வதித்து, அந்த வேலைக்கான சாதுரியத்தையும் அறிவையும் கொடுத்திருக்கிறார். உங்கள் நிலையை மாற்றுவது உங்களுடைய கடமை என்று உறுதியான ஆதாரம் பெறும்வரை, இருக்கும் நிலையிலேயே இருங்கள். அநேகர் இல்லத்தின் செல்வாக்குகளிலிருந்து பிரிந்துபோக நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கும்போது, உங்களுக்கு உங்கள் தாயின் துணை இருப்பதினால் நீங்கள் மற்ற வாலிபருக்கும் மேலாக ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

என்னுடைய வாலிப சகோதரனே, நீங்கள் செய்துகொண்டிருக்கிற வேலையை வேறு ஒருவர் செய்யவேண்டும் என்று உங்களுக்குச் சொல்ல நான் ஆண்டவரால் உணர்த்தப்பட்டேன். நீங்கள் வைக்கப்பட்டிருக்கும் பதவியில் ஒரு வாலிப மனிதன் பெறக்கூடிய மிகச்சிறந்த அனுபவத்தை நீங்கள் பெற்றுக்கொண்டிருக்கிறீர்கள். ஆண்டவரை நேசித்து அவருக்குப் பயப்படுகிற ஆண்களும் பெண்களும் இந்த ஸ்தாபனத்துடன் தொடர்புடையவர்களாக இருக்கவேண்டுமென்று ஆண்டவர் விரும்புகிறார். ஆரோக்கிய உணவுகளை தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறவர்கள், பல் மருத்துவ தொழிலில் அல்லது மருத்துவ மிஷனரி ஊழியத்தில் இருப்பவரைப்போலவே தேவனுடைய சேவையில் இருக்கிறார்கள். ஆரோக்கிய உணவுகளை ஆயத்தப்படுத்த நீங்கள் உதவும்போது, நீங்கள் தேவனுடைய சேவையை செய்துகொண்டிருக்கிறீர்கள்...

இப்போதிருக்கும் வாணிகத்தில் நீங்கள் முழுமையாகத் தேறும்போது, ஆரோக்கிய உணவுகளை எவ்வாறு தயாரிக்கலாம் என்று மக்களுக்கு போதிப்பதில் உங்களால் நல்ல சேவை செய்யமுடியும். நீங்கள் செய்யக்கூடிய எந்த வேலையையும்போலவே, இந்தத் துறையின் வேலையும் இன்றியமையாதது. வாலிப ஆண்களுக்கும் வாலிப பெண்களுக்கும் இது மிகமிக முக்கியமான கல்வி. ஏனெனில் எதிர்காலத்தில் அநேக மற்ற தன்மையான வேலைகள் ஏற்றுக்கொள்ளப்படாதபோது, இந்த வகையான வேலை ஏற்றுக்கொள்ளப்படும்.—Letter 151, 1900. Written Nobember 20, 1900.

## தேவன் நியமித்த வேலை

சுகாதாரமான உணவுகளை பெருமளவில் உற்பத்தி செய்கிறவராகவோ அல்லது இந்தத் தொழிலில் பிரத்தியேக உரிமைபெற்றவராகவோ

ஆகவேண்டுமென்று ஒருவரும் பிரயாசப்படக்கூடாது. ஆகாரத்தொழிலைக் கட்டுப்படுத்த எவரும் முயற்சிக்கவேண்டாம். இயற்கையாக விளைகிறவை களை ஒன்றிணைத்து ஆரோக்கிய உணவை உண்டாக்க தேவன் தங்களுக்கு நியமித்த வேலையை ஒவ்வொருவரும் செய்யட்டும்.

பழங்களையும், கொட்டைகளையும், தானியங்களையும், வேர் களையும் ஆரோக்கிய உணவுகளில் ஒன்றிணைப்பது ஆண்டவருடைய வேலை. சபை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு இடத்திலும் சபை அங்கத்தினர்கள் தேவனுக்குமுன்பாக தாழ்மையாக நடக்கக்கடவர்கள். ஆரோக்கிய சீர்திருத்தக் கொள்கைகளாலே அவர்கள் மக்களை ஒளிப்படுத்த விழைவார்களாக.—MS 79, 1900. Written December 23, 1900.

## பகுத்தறிவுள்ள சீர்திருத்தம்

மாபெரும் சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டியதிருக்கிறது. சீர்திருத்தத்தை முன்கொண்டுசெல்ல நாம் முயற்சிக்கும்போது, பெரும் மாற்றங்கள் தேவைப்படும். ஆனால் எதிர்காலத்திற்குச் சொந்தமான சீர்திருத்தங்கள் நிகழ்காலத்திற்குக் கொண்டுவரப்படக்கூடாது. நாம் படிப்படியாக முன்னேறவேண்டும். சீர்திருத்தங்கள் கண்டுபிடிப்புகளாக அல்ல, இயற்கையான விளைவுகளாகக் கொண்டுவரப்படவேண்டும். அப்போது அவைகள் மாபெரும் ஆசீர்வாதங்களாக இருக்கும்.

ஆரோக்கிய சீர்திருத்தத்தின் கொள்கைகளை வழங்கும்போது, நன்மைக்கு ஏதுவல்லாது, பெரும் தீமைக்கு ஏதுவான மாற்றங்களைக் கொண்டுவருவதில் சிலர் விருப்பமாயிருக்கக்கூடிய ஆபத்து இருக்கிறது. தீவிரமானவிதத்தில் ஆரோக்கிய சீர்திருத்தங்கள் திணிக்கப்படக்கூடாது. இப்போதைய சூழ்நிலையில் பாலும் முட்டையும் வெண்ணெய்யும் முழுமையாக விலக்கப்படவேண்டும் என்று நாம் சொல்லமுடியாது. மிக அதிகப்படியான போதனைகளால் மனதில் உணர்த்தப்பட்ட ஆத்துமாக்கள் நிச்சயமாக எல்லைக்குப் போய்விடுவார்கள். விலக்கும் உணவுகளின் இடத்தை முறையாக எவ்வாறு நிரப்புவது என்பதை சிலர் மாத்திரமே அறிந்திருக்கிறபடியால், ஆரோக்கிய சீர்த்திருத்தத்தை அவர்களுடைய சரீர தோற்றம் காயப்படுத்திவிடும்.

தீமையை எதிர்ப்பதிலும், நன்மையை அறிவதிலும் நாம் ஞானமுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று ஆண்டவர் விரும்புகிறார். பாதிப்பை ஏற்படுத்தும் தன்மைகளுள்ள உணவுகளை உபயோகிக்காமலே, நம்முடைய சரீரத்தை நல்ல முறையில் வைத்துக்கொள்ளுவதற்கான ஆரோக்கியமான உணவுகளைத் தயாரிக்கும் திறமையை வெவ்வேறு

நாடுகளிலுள்ள மனிதர்களுக்குத் தருவேன் என்று தேவன் எனக்கு கற்பித்திருக்கிறார். உணவுகள் தயாரிப்பதில் தேவன் தமது பரிசுத்த ஆவியினால் தமது ஊழியக்காரர்களை வழிநடத்துவார். இந்த உணவுகளிலிருந்து கிடைக்கும் இலாபங்கள் சுகாதார மையங்களின் நன்மைக்காக மாத்திரம் உபயோகப்படுத்தப்படக்கூடாது. அப்படிப்பட்ட பிரிவினைச் சுவர்களை தேவன் எழுப்பவில்லை. இந்த இலாபங்கள் எவ்விடத்திலுமுள்ள துன்பப்படுகிற மனுக்குலத்தின் நன்மைக்காக உபயோகிக்கப்படவேண்டும்.

நீங்கள் பணியாற்றிவருகிற தளத்தில் (ஆஸ்திரேலியாவில்) ஆரோக்கிய உணவுகளை தயாரிப்பதைக்குறித்து அதிகம் கற்றுக்கொள்ள வேண்டியதிருக்கிறது. பரிபூரணமான ஆரோக்கியத்திற்கேதுவானதும், கூடவே விலைகுறைவானதுமான உணவுகள் தயாரிக்கப்படவேண்டும். ஆரோக்கியத்தின் நற்செய்தி ஏழைகளுக்கு பிரசங்கிக்கப்படவேண்டும். சத்தியத்தை ஏற்றுக்கொண்டதினால் வேலையை இழந்தவர்கள், இந்த உணவு உற்பத்திகளிலிலிருந்து தங்கள் ஜீவனத்திற்கான சம்பாத்தியத்தைப்பெற வழிகள் திறக்கப்படும். தேவன் கொடுக்கும் விளைச்சல்கள், மக்கள் தங்களுக்கென்று ஆயத்தப்படுத்திக்கொள்ளும் ஆரோக்கிய உணவுகளாகச் செய்யப்படவேண்டும். அப்போது நம்மால் ஆரோக்கிய சீர்திருத்தத்தின் கொள்கைகளை சரியாகக் கொடுக்கமுடியும். அதைக் கேட்கிறவர்களும் அந்தக் கொள்கைகளின் இசைவினால் உணர்த்தப்பட்டு, அவைகளை ஏற்றுக்கொள்ளுவார்கள். சுவையான சத்தான, என்றாலும் விலைகுறைவான ஆரோக்கிய சீர்திருத்த உணவுகளை கொடுக்கும்வரையிலும் ஆகார சீர்திருத்தத்தில் மிகவும் முன்னேறின காரியங்களைக் கொடுக்கும் சுதந்தரத்தை நாம் பெறவில்லை.—Letter 98, 1901. Written June 19, 1901.

## உரிமைகளைக்குறித்த ஒரு கேள்வி

நிலத்திலும் மரத்திலும் விளைகிறவைகளை உபயோகித்து, தங்களுடையதைப் போன்றவைகளை உற்பத்தி செய்கிற மற்றவர்கள் தங்களுடைய உரிமைகளில் நுழைகிறார்கள் என்று சொல்லும்படி, ஆரோக்கிய உணவுகளை உண்டாக்க தேவனால் கற்பிக்கப்பட்டவர்களை சாத்தான் சோதிப்பான். ஆனால், உணவுக்கடுத்த அனுகூலங்கள் அனைத்தையும் சிலர் மாத்திரமே ஏகபோகமாக உரிமைபாராட்டவேண்டுமென்றும், அதே அனுகூலங்கள் தேவைப்படுகிற மற்றவர்களை, சில நிபந்தனைகளை நிறைவேற்றும்படி கட்டிப்போட நிர்ப்பந்திக்கவேண்டுமென்றும் தேவன் ஒருபோதும் திட்டமிடவில்லை.—MS 159, 1902. Written December 15, 1902.

*****

இப்போது ஆரோக்கிய உணவுகள் மனிதனால் தோற்றுவிக்கப்பட்டதாக கருதப்படுகிறது. வேறு ஏதாகிலும் உண்டாக்கப்படும்போது, “அவர்கள் நம்முடைய உரிமைகளின் எல்லைக்குள் நுழையவில்லையா?” என்ற எண்ணம் எழுகிறது. ஆனால் சுகாதார உணவுகள் தமது ஜனங்களுக்கு ஆசீர்வாதமாக தேவனால் தோற்றுவிக்கப்பட்டது. அவைகள் கட்டப்பட்டு, பேட்டில் கிரீக்—ன் வல்லமையின் கட்டுப்பாட்டிற்குள் அவர்களுடைய விசேஷ சொத்தாக வைக்கப்படக்கூடாது. இந்தத் தொழில் தேவனுடைய சொத்து. அதன் வளர்ச்சிக்காக அவர் மற்ற மனிதர்களுக்கும் வெளிச்சம் கொடுப்பார். “... நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்” 1 கொரிந்தியர் 6:19,20. முழு உற்பத்தியையும் வாங்கி சேமித்து வைத்துக்கொண்டு, பின்னர் மக்களை அதிக விலை கொடுத்து வாங்கச் செய்கிற உலக செல்வந்தர்களின் கொள்கைகளை நாம் பின்பற்றக்கூடாது. இதனால் ஏழைகள் துன்பப்படுகிறார்கள்.

அனைத்து மக்களின் நன்மைக்காகவும் உபயோகப்படக்கூடிய ஆரோக்கிய உணவுகளை உற்பத்திசெய்து தயாரிப்பதில், உலகத்தின் அனைத்து பகுதிகளிலும் பரிசோதனைகள் நடத்தப்பட்டு, செய்முறைகள் கண்டுபிடிக்கப்பட்டு, முறைகள் அறியப்படும். ஒரு குழுவிற்கு வெளிச்சத்தையும் ஞானத்தையும் கொடுக்கிற சர்வ ஞானமுள்ள தேவன், அவர்களைப்போலவே நமது சுகாதார மையங்களிலும் மருத்துவ மிஷனரித் துறையிலும் தங்களை அர்ப்பணித்திருக்கிறவர்களுக்கு தமது ஒளியையும் ஞானத்தையும் நிறுத்திவைக்கமாட்டார். புதிய உணவுத் தொழிற்கூடங்கள் இருக்கவேண்டும். பரிபூரண ஆரோக்கியமும், கூடவே விலைகுறைவானதுமான உணவுகள் செய்யப்படவேண்டும். இதனால், சத்தியத்தை ஏற்றுக்கொண்டதினால் தங்களுடைய வேலையிலிருந்து வீசியெறியப்பட்டவர்களுக்கு வேலை கண்டடையும்படியான வழி திறக்கும். பரலோகத்தின் தேவன் தமது மனித முகவர்களுக்கு புத்தியைக் கொடுப்பார்.—Letter 192, 1901. Written July 3, 1901.

## எளிமையும் விலைகுறைவுமான உணவுகள்

வெவ்வேறு இடங்களிலிருக்கிற அநேகருக்கு ஆண்டவர் ஆரோக்கிய உணவுகுறித்த அறிவைக் கொடுப்பார். அவரால் வனாந்தரத்தில் மேசையை ஆயத்தப்படுத்தமுடியும். ஆரோக்கிய சீர்திருத்த கொள்கைகளை பழக்கப்படுத்த முயற்சிக்கிற சபைகளால் ஆரோக்கியமான உணவுகள் தயாரிக்கப்படவேண்டும். அவர்கள் இதைச் செய்யும்போது, தங்களுடைய

உரிமைகளில் அத்துமீறி நுழைவதாக சிலர் சொல்லுவார்கள். ஆனால் இந்த உணவுகளைத் தயாரிப்பதற்கு அவர்களுக்கு ஞானத்தைக் கொடுத்தவர் யார்? — பரலோகத்தின் தேவனே. அதே தேவன் வெவ்வேறு நாடுகளில் இருக்கிற தமது ஜனங்களுக்கு, தங்களுடைய நாடுகளில் விளைகிறவைகளை உபயோகித்து ஆரோக்கியமான உணவுகளை தயாரிக்க ஞானத்தைத் தருவார். எளிமையும், விலைஅதிகமில்லாதவிதங்களிலும் நம்முடைய ஜனங்கள் தாங்கள் வசிக்கும் தேசங்களிலுள்ள பழங்களையும் தானியங்களையும் வேர்களையும்வைத்து பரிசோதித்துப் பார்க்கவேண்டும். ஏழை மக்களின் நன்மைக்காக விலைஅதிகமில்லாத ஆரோக்கிய உணவுகள் வெவ்வேறு நாடுகளில் உற்பத்தி செய்யப்படவேண்டும்.

வெளிநாடுகளிலிருக்கும் நம்முடைய மக்கள், அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஆரோக்கிய உணவுகளிலிருந்து தங்களுடைய ஆரோக்கிய உணவு வழங்கப்படும் என்று, அதைச் சார்ந்திருக்கக்கூடாது என்பது தேவன் எனக்குக் கொடுத்த செய்தி. சரக்கு அனுப்பும் செலவும், அதன்மேல் விழும் வட்டியும், இந்த உணவுகளின் விலையை அதிகமாக்க, செல்வந்தர்களைப்போலவே தேவனுடைய பார்வையில் விலைமதிக்கத்தக்கவர்களாக இருக்கும் ஏழைகள், இவைகளால் அனுகூலம் அடையமுடியாமற்போய்விடும்.

## மிஷனரி தளங்களில்

ஆரோக்கிய உணவுகள் தேவனுடைய தயாரிப்புகள். எளிமையான, விலைஅதிகமில்லாத, ஆரோக்கியமான உணவுகள் கிடைப்பதற்கேதுவாக நிலத்தின் விளைச்சல்களை ஒன்றிணைக்க மினஷரி தளங்களில் இருக்கிற தம்முடைய மக்களுக்கு அவர் போதிப்பார். அவர்கள் அவரிடத்தில் ஞானத்தை கேட்பார்களென்றால், எவ்வாறு திட்டஞ்செய்து செயல்படுத்துவது என்பதை அவர் அவர்களுக்குக் கற்றுத்தருவார். “அவர்களை தடைபண்ணாதிருங்கள்…” என்று சொல்லும்படி நான் அறிவுறுத்தப்பட்டேன்.

இந்தக் காலத்தில் சத்தியத்தைக் கேட்டிராதவர்களுக்கு செய்தி வரும்போது, தங்களுடைய உணவில் மாபெரும் சீர்திருத்தம் நடைபெறவேண்டும் என்று அவர்கள் காண்கிறார்கள். புலால் உணவுகள் மதுபானத்திற்கான பசியை உண்டாக்கி, சரீரத்தை வியாதிகளால் நிரப்புகிறதினால், அதை கண்டிப்பாக அப்புறப்படுத்தவேண்டுமென்று அவர்கள் காண்கிறார்கள். மாமிச உணவை உட்கொள்ளுவதால், சரீர மன, மற்றும் சன்மார்க்க வல்லமைகள் பெலவீனமடைகிறது. **மனிதன் தான் உண்கிறவைகளால் கட்டப்படுகிறான்**. புலால் உணவை உண்பதாலும்,

புகையிலையை உபயோகிப்பதாலும், மதுபானங்களை குடிப்பதாலும், மிருக உணர்ச்சிகள் ஆதிக்கம் செய்கின்றன. பூமி கொடுக்கிறதிலிருந்து புலால் உணவின் இடத்தை எடுத்துக்கொள்ளும் உணவுகளை தயாரிக்க ஆண்டவர் தமது மக்களுக்கு ஞானம் தருவார். கொட்டைகளையும் தானியங்களையும் பழங்களையும் ஒன்றிணைத்து, சுவையாகவும் திறமையாகவும் தயாரிக்கப்படும் உணவுகள், அவிசுவாசிகளிடையே அவர்களைப் பரிந்துரைக்கும். ஆனாலும் செய்யப்படும் உணவுகளில் வழக்கமாக அதிகமான கொட்டைகள் உபயோகிக்கப்படுகின்றன.—MS 156, 1901. Written November 27, 1901.

## அதிகரிக்கும் வெளிச்சம்

ஆரோக்கிய உணவுகளுக்காக பணம் ஒதுக்குவதில், யாருடைய சொத்தை கையாளுகிறீர்கள் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்கவில்லை. நீங்கள் உங்களுடையவர்களல்ல. அங்கு ஒருவரும் இங்கு ஒருவருமாக அநேக மனங்களுக்கு தேவன் சாதுரியமும் திறமையுங்கூடிய ஞானத்தையும் ஆலோசனையையும் கொடுத்திருக்கிறார். வெவ்வேறு மனங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிற இந்த அன்பளிப்புகளை இணைத்து, ஆரோக்கிய உணவில் பெரிய தொழிலைச்செய்ய நீங்கள் இசைந்திருந்தாலும், உங்களைப்போலவே ஆரோக்கிய உணவுகளை திட்டஞ்செய்ய தேவன் தங்களுக்குக் கொடுத்திருக்கும் ஞானத்தைப் பயன்படுத்த மற்றவர்களும் சலுகை பெற்றிருக்கவேண்டாமா? தேவனுடைய ஊழியத்திற்கு நன்மையைக் கொண்டுவரும்விதத்தில் இருந்துகொண்டிருக்கும்—எப்போதும் இருக்கப்போகும் தேவைகளை சந்திக்கவும் அவைகளை உபயோகிக்க அவர்களுக்கு உரிமை இல்லையா? இப்படிப்பட்ட பலமான தடுப்புகள் ஏன் கட்டப்படவேண்டும்?

மிக அதிகமான விதங்களில் ஆரோக்கிய உணவுகளை உண்டுபண்ணும் சமையல் குறிப்புகள் எந்த ஒரு மனிதனுக்கும் விசேஷமாக வழங்கப்படவில்லை என்பது எனக்குக் கொடுக்கப்பட்ட வெளிச்சம். ஏற்கனவே கொடுக்கப்பட்ட சமையல் குறிப்புகள் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. இதைச் செய்ததில் மற்ற மனங்கள் உந்தப்பட்டிருக்கின்றன. தேவனுடைய பயிற்சியின்கீழ் இன்னும் அது தொடர்ந்து வளரும். கதவு அடைக்கப்பட்டது என்றும், மேற்கொண்டு எந்த விசாரணையும் செய்யவேண்டியதில்லை என்றும் அவர்கள் உணரக்கூடாது. மனித மனங்கள் திட்டம்பண்ணி செயல்படுத்துகிறவைகள் இன்னும் அதிகமாக இருப்பதினால், எந்த மனிதனும் அதை தடுக்கக்கூடாது. இந்த வேலை மனித முகவர்களுக்குக் கொடுக்கப்படும்.

இந்த வேலை சில மனங்களுக்குள் அடைக்கப்படவேண்டுமென்றும், மனித குடும்பத்தின் மீதமான அனைவரும் ஆரோக்கிய உணவுகள் தயாரிப்பதைக்குறித்த அறியாமையில் இருக்கவேண்டும் என்றும் தேவன் திட்டம்பண்ணவில்லை. ஒவ்வொரு இடத்திலும் கிடைக்கிற மண்ணின் விளைச்சலை உபயோகிப்பதைக்குறித்து, உலகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இருக்கிற மக்கள் அறிவடையவேண்டும் என்று ஆண்டவர் விரும்புகிறார். உணவு தயாரிப்பை எளிமையாக்குவதற்கும், உற்பத்தி செய்து எடுத்துச் செல்வதினால் ஏற்படும் செலவை குறைப்பதற்கும் ஏதுவாக, அங்கங்கு விளையும் விளைச்சல்கள் ஒன்றிணைக்கப்படமுடியுமா என்று கவனமாக ஆராயப்பட்டு பரிசோதிக்கப்படவேண்டும். இதைச் சாதிப்பதற்காக ஆண்டவரின் கண்காணிப்பின்கீழ் அனைவரும் சிறப்பான செயல்களைச் செய்யட்டும். மனிதர்களில் மேதைகள் ஒன்றிணைக்கக்கூடிய விலையுயர்ந்த உணவு பொருட்கள் அநேகம் இருக்கின்றன. ஆனாலும் விலையுயர்ந்த தயாரிப்புகளைச் செய்ய உண்மையான அவசியம் இல்லை.

மூன்று வருடங்களுக்கு முன்பாக: "என்னால் கொட்டை உணவுகளை சாப்பிடமுடியாது; என் வயிற்றால் அவைகளை சீரணிக்கமுடியாது" என்று எழுதப்பட்ட ஒரு கடிதம் எனக்கு வந்தது. பின்னர் அநேக சமையல் குறிப்புகள் என்முன் காண்பிக்கப்பட்டது. அதில், அவ்வளவு அதிகமான கொட்டைகள் சேர்க்காத, கொட்டைகளோடு இணங்கிப்போகிற, கொட்டைகளோடு இணைக்கப்படவேண்டிய வேறு பொருட்கள் கொண்ட ஒன்றும் இருந்தது. இணைக்கப்படும் பொருட்களைப் பொறுத்து, பத்தில் ஒரு பங்கிலிருந்து ஆறில் ஒரு பங்குவரையிலான கொட்டைகள் போதுமானவை. நாங்கள் வெற்றிகரமாக இதை முயற்சித்துப் பார்த்தோம். மற்ற காரியங்களும் குறிப்பிடப்பட்டது. பேசப்பட்ட ஒரு காரியம்: இனிப்பான பிஸ்கெட்டுகள் ஒருவர் விரும்பினதினிமித்தம் செய்யப்பட்டன; பின்னர் அவைகளை சாப்பிடக்கூடாத அநேகர் அவைகளைப் பெற்றுக்கொண்டனர். செய்யப்படவேண்டிய அநேக முன்னேற்றங்கள் இன்னும் இருக்கின்றன. தம்மோடு வேலை செய்கிற அனைவரோடும் தேவன் வேலை செய்வார்.—Letter 188, 1901. Written December 30, 1901.

## ஒரு முறையான கூட்டுமுயற்சி

விலைமலிவான, தேவையான ஆரோக்கிய உணவுகளை உற்பத்தி செய்யும் வசதிகள் தென்பகுதியிலுள்ள தளங்களில் இருக்கவேண்டும். உலக கொள்கைகள் இந்த வேலையில் கொண்டுவரப்படக்கூடாது. "என்னுடைய இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல" என்று கிறிஸ்து சொன்னார். அது

மனித வல்லமையினால் ஸ்தாபிக்கப்படவில்லை; மனித வல்லமை அதனை கவிழ்க்கவும் முடியாது.

தேவனுடைய அனைத்து ஈவுகளும் இயேசு கிறிஸ்துவின்மூலமாகவே நமக்கு வருகின்றன. நம்முடைய உலகத்திற்காக தமது குமாரனைக் கொடுத்ததில் தேவன் முழு பரலோகத்தையும் கொடுத்துவிட்டார். ஆரோக்கிய உணவுத் தொழில் தொடர்புடைய ஒவ்வொன்றிலும், தேவன் மாத்திரமே கனப்படுத்தப்பட்டு, மகிமைப்படுத்தப்படவேண்டும். “வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது” (மத்தேயு 28:18) என்று தாம் அறிவித்ததை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும் என்று ஆண்டவர் இயேசு விரும்புகிறார்.

தென்பகுதியில் உற்பத்திசெய்யப்பட்டு, விற்கப்படும் ஆரோக்கிய உணவுகளைக்குறித்து: சதர்ன் யூனியன் கான்பரன்சு, தென்பகுதியில் இந்தப் பணியின் நன்மைக்காக, திறமையுள்ள, கவனமாக செலவுசெய்யக்கூடிய மனிதர்களை தெரிந்தெடுத்தால் நலமாக இருக்கும் என்று நான் சொல்லுவேன். என்றாலும் மிகச் சிறந்த ஞானமும் செலவுகளும் இந்த பணி வெற்றிகரமாக இருப்பதற்கேதுவாக செயல்படுத்தப்படவேண்டும். இந்த வேலையைச் செய்ய முறையான மனிதர்கள் கண்டுபிடிக்கப்படுவார்களானால், இந்த வேலை வெற்றியடைவதற்காக, முழு யூனியன் கான்பரன்சும் சுயநலமின்றி இதைத் தாங்கட்டும். தென்பகுதியில் இந்த வேலைக்கு உதவிசெய்கின்ற தொழிற்சாலைகள் நிறுவப்படலாம் என்று இந்த இயக்கத்தில் நான் காண்கிறேன். உணவு விற்பனைக்கூடங்களையும் உணவகங்களையும் திறப்பதன்வழியாக செல்வாக்குள்ள மையங்கள் அநேக இடங்களில் ஸ்தாபிக்கப்படலாம். தேவனுடைய ஊழியக்காரர்களாக மனிதர்கள் செய்யப்படக்கூடிய அனைத்தும் தென்பகுதிகளில் செய்யப்படவேண்டும்.

தென்பகுதியில் ஆரோக்கிய உணவுகளை உற்பத்திசெய்ய எடுக்கப்படும் ஒவ்வொரு முயற்சியிலும், தனிமனித இலாபத்திற்காக அல்லாது, மக்களுக்கு நம்பிக்கையின் கதவு திறக்கப்படுவதற்கேதுவாக... தேவன் நியமித்தபடி தொழில் நடத்தப்படவேண்டும் என்ற வெளிச்சம் எனக்குக் கொடுக்கப்பட்டது.

சுயநலமான ஏகபோக உரிமைபாராட்டும் ஆவி இந்த வேலையில் நுழையக்கூடாது. மாறாக, இலகுவாகவும், நியாயமான விலையிலும் ஆரோக்கிய உணவுகளை பெற்றுக்கொள்ள மக்களுக்கு உதவக்கூடிய ஆவி இருக்கவேண்டும். வடபகுதியிலே கொண்டுசெல்லப்பட்டதைப்போல இந்த வேலை தென்புறத்திலே கொண்டுசெல்லப்படக்கூடாது. ஆரோக்கிய உணவுத்தொழில் மக்களுக்கான தேவனுடைய ஈவாகக் கருதப்படவேண்டும்.

தென்பகுதியில் நீங்கள் செய்யக்கூடிய சாதாரண உணவுகளோடு தொடர்புபடுத்தி, பேட்டில் கிரீக்கில் நமது மக்களால் செய்யப்படும் அநேக விசேஷ உணவுகளைக் கையாள உங்களால் ஒழுங்குபடுத்த முடியும்.

நம்முடைய அனைத்து வேலைகளிலும், ஐந்து அப்பம் இரண்டு மீன்களால் அநேகரை போஷித்த அதே இயேசுவானவர் நம்முடைய வேலையின் பலனை நமக்குக் கொடுக்க வல்லமையுள்ளவராயிருக்கிறார் என்கிறதை நாம் நினைவுகூரவேண்டும். கீழ்ப்படிந்ததினால் தங்கள் வலைகள் கிழிந்துபோகத்தக்கதாக மீன்களைப்பிடித்த கலிலேயாவிலிருந்த மீன்பிடிப்பவர்களிடம், உங்களது வலைகளைப் போடுங்கள் என்று சொன்னவர், இன்று தங்களுக்காக அவர் என்ன செய்வார் என்பதின் சான்றை, இதிலே தம்முடைய மக்கள் காணவேண்டுமென்று விரும்புகிறார்.

இஸ்ரவேல் புத்திரருக்கு வானத்திலிருந்து மன்னாவைக் கொடுத்த அதே தேவன் இன்றும் ஜீவிக்கிறார்; ஆட்சிசெய்துகொண்டிருக்கிறார். ஆரோக்கிய உணவுகளை தயாரிப்பதில் அவர் திறமையையும் புத்தியையும் கொடுப்பார். ஆரோக்கிய உணவுகள் தயாரிப்பதில் அவர் தமது மக்களை நடத்துவார். ஆரோக்கியமுள்ள உணவுகளைத் தயாரிப்பதில் அவர் தமது ஜனங்களை நடத்துவார். தங்களுடைய முதல் பொறுப்பான தங்களுடைய சொந்த குடும்பங்களுக்காக மட்டுமல்லாது, ஏழை மக்களின் உதவிக்காகவும் அப்படிப்பட்ட ஆகாரத்தை தயாரிப்பதில் தாங்கள் என்ன செய்யமுடியும் என்பதை அவர்கள் காணவேண்டுமென்று அவர் விரும்புகிறார். கிறிஸ்துவைப்போன்ற தாராளத்தை அவர்கள் காண்பிக்கவேண்டும். அவர்கள் வைத்திருக்கிற அனைத்தும் அவருடைய மானியங்கள்.—Letter 25, 1902. Wrtten February 5, 1902.

## விலை அதிகமில்லாத உணவுகள்

உணவுத் தொழில் பெரிய அளவில் செய்யப்படும்போது, மிகவும் குழப்பமானதும் ஆத்துமாவை பயப்படுத்துகிறதுமாயிருக்கும். அதை மேற்கொள்ளுகிறவர்கள், தேவன் அவர்களுக்கு எந்தவித தாலந்துகளைக் கொடுத்திருந்தாலும், அநேக குழப்பங்களைச் சந்திப்பார்கள்.... ஆரோக்கிய உணவுகளைத் தயாரிப்பது ஆண்டவருடைய திட்டம் என்றும், அது எந்த ஒரு மனிதனுடைய சொத்தாகவும் கருதப்படக்கூடாது என்றும் நான் அறிவுறுத்தப்பட்டேன். ஆனாலும் நான் சொல்லுவதை, டாக்டர் கெல்லாகினுடைய காப்புரிமைக்குள்ளோ அல்லது வேறு எவருடைய காப்புரிமைக்குள்ளோ அத்துமீறி நுழைய கொடுக்கப்படும் சுதந்திரமாக எடுத்துக்கொள்ளக்கூடாது.

பசியுள்ளவர்களை போஷிக்கவும், வஸ்திரமில்லாதவர்களுக்கு வஸ்திரம் கொடுக்கவும், அறியாதவர்களுக்குப் போதிக்கவும், உழவுத் தொழிலிலும் எளிமையாக வாசிப்பதிலும் கற்பிக்கவும் வேண்டிய விருப்பங்களை பராமரிக்கத் தேவையான வழிகளை வகுக்க, ஆண்டவர் ஒவ்வொரு இடத்திலுமுள்ள மனங்களுக்கு உணர்த்துவார். அமெரிக்காவின் மற்ற எல்லாப் பகுதிகளையும்விட தென்மாநிலங்களில் அதிகமாகத் தேவைப்படுகிற ஆரோக்கியமுள்ள உணவுகளை உற்பத்தி செய்ய அவர் அவர்களுக்கு ஞானத்தைக் கொடுப்பார். முடிந்த அளவு மிகக் குறைவான விலையில் ஏழைகளுக்கு விற்கப்படவேண்டிய ஆரோக்கியமுள்ள உணவுகளைத் தயாரிப்பதற்காக, காக்கைக் குஞ்சுகளை போஷித்து, காட்டு விலங்குகளை கவனிக்கிறவர், ஞானத்தையும் திறமையையும், தாலந்தையும் புத்திக்கூர்மையையும் கொடுப்பார்.

## ஞானமும் பொருளாதாரமும்

இந்த வேலையில் அதிக பணயம் இருக்கிறது. ஆரோக்கியமுள்ள விலைஅதிகமில்லாத உணவுகளை உண்டுபண்ணும் முயற்சியில் பூமியின் ஆரோக்கியமுள்ள விளைச்சல் பரிசோதிக்கப்படவேண்டும்.

உணவுத் தொழில் ஊக்கமான ஜெபத்தின் பொருளாக இருக்கவேண்டும். ஆரோக்கியமுள்ள உணவுகளை தயாரிப்பதற்கான ஞானத்திற்காக மக்கள் தேவனிடம் கேட்கக்கடவர்கள். ஐந்து அப்பத்தாலும் இரண்டு மீன்களாலும் ஐயாயிரம்பேரை போஷித்தவர், இன்று அவருடைய பிள்ளைகளின் தேவைகளை கொடுப்பார். இந்த ஆச்சரியமான அற்புதத்தை நடத்தினபின்னர், கிறிஸ்து சிக்கனத்தைக்குறித்த ஒரு பாடத்தைக் கொடுத்தார். திரளானவர்களின் பசி திருப்தியாக்கப்பட்டபின்னர், “ஒன்றும் சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்துவையுங்கள் என்றார்.” “அந்தப்படியே அவர்கள் சேர்த்து, … மீதியான துணிக்கைகளினாலே பன்னிரண்டு கூடைகளை நிரப்பினார்கள்.”—Letter 27, 1902. Written February 26, 1902.

## மன்னாவைப்போல

ஆரோக்கிய உணவுகுறித்த கேள்விக்கு ஆண்டவர் எனக்குக் கொடுத்த அறிவுரையை நான் இப்போது என்னுடைய சகோதரர்களுக்கு கட்டாயம் கொடுக்கவேண்டும். ஆரோக்கிய உணவுகள் மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றாக அநேகரால் பார்க்கப்படுகிறது. ஆனால் தமது மக்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கும்படி அவைகள் தேவனால் தோற்றுவிக்கப்பட்டவைகள். ஆரோக்கிய உணவு வேலை தேவனுடைய சொத்து. அது தனிப்பட்ட நிதி

ஆதாயத்திற்கான ஒன்றாகச் செய்யப்படக்கூடாது. இஸ்ரவேல் மக்களுக்கு அன்று மன்னா எவ்வாறு இருந்ததோ, அதைப்போலவே, உணவுக்கடுத்த கேள்விக்கு தேவன் கொடுத்த, இன்னும் தொடர்ந்து கொடுக்கப்போகிற வெளிச்சம் இன்று அவருடைய பிள்ளைகளுக்கு இருக்கவேண்டும். மன்னா வானத்திலிருந்து விழுந்தது. அதை சேகரித்து, சாப்பிடுவதற்கேற்ப தயாரிக்கும்படி மக்கள் அறிவுறுத்தப்பட்டார்கள். அவ்வாறே, உலகத்தின் வெவ்வேறு நாடுகளில் இருக்கும் ஆண்டவருடைய மக்களுக்கு வெளிச்சம் கொடுக்கப்படும், அந்த நாடுகளுக்கு ஏற்றாற்போன்று ஆரோக்கிய உணவுகள் தயாரிக்கப்படும்.

ஒவ்வொரு சபையின் அங்கத்தினர்களும் தேவன் தங்களுக்குக் கொடுக்கும் சாதுரியத்தையும் புத்திக்கூர்மையையும் விருத்தியாக்கவேண்டும். புலால் உணவுகள் உண்பதற்கு எந்த சாக்குபோக்கும் மக்களுக்கு இல்லாதிருப்பதற்கேதுவாக, மாமிச உணவின் இடத்தை எடுத்துக்கொள்ளுகிற எளிமையான, இலகுவாக தயாரிக்கக்கூடிய, ஆரோக்கிய உணவுகளை உண்டுபண்ண பூமியின் விளைவுகளை எவ்வாறு ஒன்றிணைப்பது என்பதை கற்றுக்கொள்ளும் முயற்சியில் தங்களது திறமைகளையெல்லாம் உபயோகிக்கும் அனைவருக்கும், ஆண்டவர் திறமையையும் புத்தியையும் வைத்திருக்கிறார்.

அப்படிப்பட்ட உணவுகளை எவ்வாறு தயாரிப்பது என்கிற வெளிச்சம் கொடுக்கப்பெற்றிருக்கிறவர்கள், தங்களுடைய அறிவை சுயநலமின்றி பயன்படுத்தவேண்டும். அவர்கள் தங்களுடைய ஏழ்மையான சகோதரருக்கு உதவவேண்டும். அவர்கள் உற்பத்தி செய்கிறவராகவும் நுகர்வோராகவும் இருக்கவேண்டும்.

அநேக இடங்களில் ஆரோக்கிய உணவுகள் உற்பத்தி செய்யப்படவேண்டும் என்பது தேவனுடைய நோக்கம். சத்தியத்தை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் இந்த எளிய உணவுகளை எவ்வாறு தயாரிப்பது என்கிறதை கற்றுக்கொள்ளவேண்டும். வாழ்க்கையின் தேவைகளுக்காக ஏழைகள் துன்பப்படவேண்டும் என்பது ஆண்டவருடைய திட்டம் அல்ல. தம்மிடம் ஞானத்தைக் கேட்கும்படியும், பின்னர் அவர் தருகிற ஞானத்தை சரியாக உபயோகிக்கும்படியும் வெவ்வேறு நாடுகளிலிருக்கிற தமது மக்களை ஆண்டவர் அழைக்கிறார். நம்பிக்கையின்மையிலும், சோர்விலும் நாம் அடங்கிவிடக்கூடாது. மற்றவர்களை ஒளிப்படுத்த நம்மால் முடிந்த சிறப்பானதை நாம் செய்யவேண்டும்.—MS 78, 1902. Written June 16, 1902.

## சுவிசேஷ ஊழியக்காரர்களுக்கான வேலை அல்ல

சீயோனின் சுவர்களின்மேல் காவற்காரர்களாக நிற்கும்படி தேவன் நியமித்த ஊழியர்கள் ஆரோக்கிய உணவு உற்பத்திசெய்யும் அல்லது ஆரோக்கிய உணவு விற்பனைக்கூடங்களை நிறுவும் பாரத்தை தங்கள்மேல் எடுத்துக்கொள்ளக்கூடாது. மற்ற தொழில்களிலும் அவர்கள் தங்களை இணைத்துக்கொள்ளக்கூடாது. அவர்கள் செய்யவேண்டுமென்று தேவன் கூறுகிற வேலையின் முன்னேற்றத்திற்கு இது ஒரு இடையூறாயிருக்கும். —MS 105, 1902. Written July 16, 1902.

## கொட்டை உணவுகளின் உபயோகம்

கொட்டை உணவுகளை முறையாக உபயோகிப்பதில் அதிக கவனம் கொடுக்கப்படவேண்டும். சில கொட்டைகள் மற்ற கொட்டைகளைப்போல ஆரோக்கியமுள்ளவைகளல்ல. அதிக கொட்டைகள்கொண்ட சில உணவு பொருட்களுக்காக அதிகம் செலவுசெய்ய வேண்டாம். இந்த உணவுகள் அதிகமாக எடுத்துக்கொள்ளப்படக்கூடாது. சிலரால் இவைகள் சற்றுக் குறைவாக உபயோகிக்கப்படுமானால், விளைவுகள் அதிக திருப்தியாக இருக்கும். கொடுக்கப்பட்டுள்ள சில சமையல் குறிப்புகளில் இருப்பதைப்போல, மற்ற பொருட்களுடன் அதிக விகிதத்தில் சேர்க்கப்படும்போது, அவை உணவை, சரீரம் முறையாக உட்கிரகித்துக்கொள்ளக்கூடாத மிகச் செழிப்பானதாக மாற்றுகிறது.—Letter 135, 1902. Written August 28, 1902.

## ஆரோக்கிய உணவு மேலாளர்

உணவுத் தொழிலின் பொறுப்பில் வைக்கப்படும் நபர், கவனமான, சிக்கனமான மனிதனாக, நிலையாக, என்றாலும் கவனமாக முன்னேறுகிற, ஒருங்கிணைத்துச் செல்லுகிற, தொழில் உற்பத்தி செய்யப்படுவதுடன் நுகரவும் படுகிறது என்பதை நிச்சயப்படுத்திக்கொள்பவராகவும் இருக்கவேண்டும். —Letter 158, 1902. Written October 8, 1902.

## சுகாதார மையத்துடன் இணைந்ததாக

நாம் விவேகமுள்ளவர்களாகவும், காரியத்தை விளைவோடு காரணப்படுத்திப் பார்க்கிறவர்களாகவும் இருக்கவேண்டுமென்று ஆண்டவர் விரும்புகிறார். சுகாதார மையம் நிறுவப்படும் இடங்களிலெல்லாம், தேவைக்கேற்ப பெரியதாகவோ அல்லது சிறியதாகவோ ஆரோக்கிய உணவுகள் தயாரிக்கப்படுவதற்கான வசதிகள் செய்யப்படவேண்டும். எதிர்காலத்தில் அமெரிக்காவிலிருந்து ஆரோக்கிய உணவுகளை அனுப்புவது

முடியாததாயிருக்கும். மற்ற காரணங்களுக்காகவும், முடிந்தவரை நீங்கள் இருக்கும் இடத்திலேயே உங்களுடைய உணவுகளை உண்டாக்குவது மேலானதாயிருக்கும்.

கடைசி நாட்களின் ஆபத்துகளுக்கு மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வெவ்வேறு நாடுகளில் தம்முடைய மக்கள் தொழிற்சாலைகளை நிறுவவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். வருங்கால சுகாதார மையத்துடன் தொடர்புடைய தொழிற்கூடங்கள் நிறுவப்படவேண்டும். அவைகள் எவ்வாறு மிகச்சரியாக இருக்கவேண்டும் என்று இப்போதைக்கு விளக்கமுடியாது. உங்கள் வேலையில் நீங்கள் முன்னேறும்போது, இது உங்கள் முன்பாக திறக்கப்படும்.—Letter 201, 1902. Written December 15, 1902.

## ஆரோக்கிய தொழிலில் இருக்கும் ஆபத்துகள்

ஏப்ரல் மாதம் 26—ம் தேதி இரவு, காட்சிக்குப்பின் காட்சிகள் என்முன் கடந்துபோனது. பேட்டில் கிரீக்கில் இருக்கிற நம்முடைய மக்களோடு நான் பேசிக்கொண்டும், நம்மேல் வரவிருக்கிற ஆபத்துகளைக்குறித்து அவர்களை ஊக்கமாக எச்சரித்துக்கொண்டுமிருந்தேன்.

அடுத்த இரவில் மிகவும் ஆர்வத்தோடு வேலைசெய்துகொண்டிருந்த என் சகோதரர்களை மீண்டும் சந்தித்தேன். **அதிகாரிகளில் ஒருவர்** அங்கே இருந்தார். **அவர்**: "மாபெரும் வெற்றிகளைச் சம்பாதித்ததால் நீங்கள் களிகூருகிறீர்கள். ஆனால் நிச்சயமாகவே உங்களுக்கு பயங்கரமான போராட்டங்கள் உண்டு" என்றார்.

அநேக இடங்களில் உணவு விற்பனைக்கூடங்கள் நிறுவும்படி பேட்டில் கிரீக்கிலிருந்த நம்முடைய சகோதரர்களால் முன்மொழியப்பட்டது என்பதாக நினைத்தேன். இந்த விஷயத்தில் பெரிய தவறுகள் செய்யப்படும்; எனவே அங்கு பெரிய ஆபத்து இருப்பதாக நான் அறிவுறுத்தப்பட்டேன். இந்த வேலை வணிகத் தொழிலாக நடத்தப்பட்டு, கடைசி எல்லைவரைக்கும் கொண்டுசெல்லப்படும் ஆபத்து இருக்கிறது; தாங்கள் இருக்கும் இடங்களிலே அதிகமாகத் தேவைப்படும் மனிதர்கள், அதிக கூலியினிமித்தம் இந்த தொழிலில் நுழைய உற்சாகப்படுத்தப்படும் ஆபத்து இருக்கிறது என்று அறிவுறுத்தப்பட்டேன்.

எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிருக்கிறது. செய்யப்பட்டுக் கொண்டிருக்கிற திட்டங்களை ஆண்டவர் பார்த்து: "நற்செய்தி அறிவிப்பாளராகவும், புத்தக ஊழியராகவும், சபைப் போதகராகவும்

எஜமானுக்கு சேவைசெய்யவேண்டிய மனிதர்கள், வணிக நிறுவனங்களில் நுழைய தூண்டப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்” என்கிறார்.

உணவு வணிகம் குறித்த கடந்தகால உலக திட்டங்கள் மாறலாம். ஆனால் அநேகவிதங்களில், அதே மரமும், புல்லும், வைக்கோலும் அஸ்திபாரத்தின்மேல் வைக்கப்பட்டு, அதிக நிதி ஆதாயத்தை அடையும் வேலைகளினால், உணவு வேலையில் செய்யப்படவேண்டும் என்று கிறிஸ்து நியமித்த வேலை செய்யப்படாமல் போய்விடக்கூடிய ஆபத்து இருக்கிறது.

என் சகோதரரே, ஜெபிப்பதற்கு விழிப்பாயிருங்கள். எஜமானுக்காக வெற்றிகரமாக வேலைசெய்ய தங்களைத் தகுதிப்படுத்தின அனுபவத்தை அடைந்த மனிதர்கள், நம்பிக்கையான வெவ்வேறு தகுதிகளில் நல்லபடியாக வேலை செய்கிறவர்கள், மற்றொரு வேலைக்காக தற்போதைய வேலையை விட்டுவிட உற்சாகப்படுத்தப்படக்கூடாது. ஆரோக்கிய உணவு வேலையில் நுழைய, இப்போது வேலைசெய்யும் இடத்தை விட்டுவிட, ஒரு சிலரால் வாதாடப்படும் கொள்கைகளை அவர்கள் பின்பற்றுவார்களானால், வருட முடிவில், ஆண்டவருடைய வேலை, இருக்கவேண்டிய இடத்தைவிட்டு மிகவும் பின்தங்கியிருக்கும்.

பேட்டில் கிரீக்கிலிருக்கிற ஆரோக்கிய உணவு வேலையின் அதிகாரிகள் தங்கள் பாதங்களுக்கு நேரான பாதையை உண்டுபண்ணவேண்டும் என்று நம்முடைய **போதகர்** அவர்களோடு சொன்னார். ஆரோக்கிய உணவு விற்பனைக்கூடங்களும் சுகாதார உணவகங்களும் கோடிட்டுக் காட்டப்பட்டதைப்போன்று திட்டம்பண்ணப்படுமானால், அநேக ஆத்துமாக்கள் கண்ணிகளிலும் படுகுழிகளுக்குள்ளும் விழுவார்கள். ஆரோக்கிய உணவு விற்பனைக்கூடங்களையும் உணவகங்களையும் ஸ்தாபிப்பதை சாதகமாகப் பார்க்கக்கூடியவர்கள் இருக்கிறார்கள். ஆனால் மற்ற சில வேலைகளைப் போலவே இந்த வேலையும் முழுவதும் ஆட்கொள்ளுகிற வேலை என்கிறதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். அதற்குள் மிக அதிகமான வியாபாரமும் மிகக் குறைவான கொள்கைகளும் கொண்டுவரப்படலாம். இவ்விதமாக, சரியாக கையாளப்படும்போது ஆசீர்வாதமாயிருக்கக்கூடிய இந்த வேலை, ஒரு சாபமாக மாறிவிடும்.

ஆகார உணவு வேலையை விரிவுபடுத்துவதுகுறித்து அதிக கவனம் காட்டப்படவேண்டும். சரியான திட்டங்கள் போடப்பட்டு, எச்சரிக்கையாக இருக்காவிட்டால், இந்த வேலை ஒரு கண்ணி என்கிறதை நிரூபிக்கும் என்று எனக்கு அறிவுறுத்தப்பட்டது. ஆகார உணவு வேலையில் உலக வியாபார திட்டங்கள் கொண்டுவரப்பட்டு, உழைப்பவர்களின் மனங்கள்

வியாபார கவலைகளினாலே ஆட்கொள்ளப்பட்டு, இவ்விதமாக ஆவிக்குரிய காரியங்களுக்கு மரித்தவர்களாகும் ஆபத்து இங்கே இருக்கிறது.

மனிதர்கள் தாங்கள் எஜமானுக்காக வெற்றிகரமாக செய்து கொண்டிருக்கும் வேலையை விட்டுவிட்டு, உணவு வேலையில் நுழையும்படி அவர்களை சோதிக்கிறதற்கேதுவான பரிதானங்கள் அதிக சம்பளம் என்னும் வடிவத்தில் கொடுக்கப்படக்கூடாது.

ஏற்கனவே கனமான பொறுப்புகளை சுமந்துகொண்டிருக்கும் மனிதர்கள், இன்னும் அதிக கனமான பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு தங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையையும் காத்துக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படக்கூடாது. குழப்பத்தையும் கஷ்டத்தையும் உண்டுபண்ணும் இதைக்குறித்த திட்டங்கள் செய்யப்படக்கூடாது. நம் கால்கள் சிக்கிக்கொள்ளுவதற்கேதுவாக விரிக்கப்படுகிறதைக் கண்டு, சத்துரு மகிழ்ச்சியடையும் கண்ணி இது.

குறிப்பிட்ட அளவு வேலையை வெற்றிகரமாக கொண்டுசெல்லக் கூடியவர்கள், செய்யத் தங்களுக்கு இருக்கும் சரீர மன பலத்திற்கு மிஞ்சின வேலை தங்கள்மேல் சுமத்தப்படும்போது, அதிகம் சோர்ந்து, எரிச்சலடைந்து, பொறுமையற்றவர்களாகின்றனர். தங்கள் இருதயத்திலிருந்து தேவனுடைய அன்பை இழக்கிறார்கள். பின்னர் தைரியத்தையும் விசுவாசத்தையும் இழக்கிறார்கள். தேவனுடைய ஆசீர்வாதம் அவர்களோடு இல்லை. தாங்கள் செய்யவேண்டியவேலைக்கும் அதிகமாக இரட்டத்தனையான வேலைசெய்ததினால், மருத்துவர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வல்லமையை இழந்துவிட்டிருக்கிறார்கள். தாங்கள் செய்யக்கூடிய வேலையைக்காட்டிலும் அதிகமான வேலை செய்யும்படி அழைக்கப்படும்போது, அல்லது சோதிக்கப்படும்போது, நான் செய்வதைக்காட்டிலும் அதிகமாக என்னால் பாதுகாப்பாக செய்யமுடியாது; இதைச் செய்ய என்னால் சம்மதிக்கவும் முடியாது என்று உறுதியாகச் சொல்லுங்கள்.

வேறுஇடத்திற்குத் தேவைப்படும் தாலந்தை ஆட்கொள்ளும்விதத்தில் உணவுத்தொழில் செய்யப்படக்கூடாது. உணவுத் தொழிலை மிகச் சிறப்பாகச் செய்வதினால், ஆண்டவருடைய வேலையின் மற்ற பிரிவுகள் வேலையாட்கள் இன்றி போகும்படியான திட்டங்கள் பின்பற்றப்படக்கூடாது. கிறிஸ்தவ குணத்தை பூரணப்படுத்துவதற்கு உதவாத வர்த்தக தொழில் சம்பந்தமான வேலையில் ஈடுபடும்படி ஆண்களும் பெண்களும் நடத்தப்படக்கூடாது.

பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிற, தெய்வீகத் தன்மையில் பங்குபெற்றிருக்கிற புத்தக ஊழியம் செய்பவர்களும், சுவிசேஷ ஊழியர்களும், போதகர்களும் நமக்குத் தேவை. தேவனோடு பேசக்கூடியவர்களும்,

பின்னர் மக்களோடு பேசக்கூடியவர்களுமான ஊழியர்கள் நமக்குத் தேவை. சுவிசேஷ ஊழிய வேலையிலிருந்து மனிதர்களை திசைதிருப்பி அப்படியாக தேவனுடைய வேலையை தடுக்க அநேக தடங்கல்கள் வந்துகொண்டிருப்பதை நான் காணும்போது எச்சரிப்படைகிறேன். நம்முடைய உணவகங்கள் எனக்குக் காட்டப்பட்டபோது, ஆத்துமாக்களை சத்தியத்தினிடத்திற்குக் கொண்டுவரும்படியாக செய்யவேண்டிய வேலையை அவைகள் செய்துகொண்டிருக்கவில்லை. எல்லா இடத்திலும் அதிகம் தேவைப்படுகிற புத்தகங்களை சுற்றுக்குவிடும் வேலையை செய்யவேண்டியவர்களுக்கு: செய்யும்படியாக தேவன் அவர்களை அழைத்த வேலையிலிருந்து விலகாதபடிக்கு கவனமாயிருக்கும்படி நான் அவர்களுக்கு எச்சரிக்கை கொடுக்கிறேன். சுவிசேஷ வேலையை செய்யும்படி தேவன் அழைத்த மனிதர்கள், தொழில் குழப்பங்களில் சிக்கிக்கொள்ளாதிருக்கட்டும். ஆவிக்குரிய காரியங்களுக்கு மிக அதிக சிறப்பான சூழ்நிலைகளில் அவர்கள் தங்கள் ஆத்துமாக்களை வைத்துக்கொள்ளட்டும். அநேக சோதனைகள் இருக்கிற இடத்தில், பரலோக மன்றங்களில் பிரவேசிக்கத் தேவையான ஆயத்தங்கள் செய்வதைக்குறித்து அக்கறையற்றிருக்கிறதற்கேதுவான கவலைகளால் ஆட்கொள்ளப்படும் இடத்தில் அவர்கள் தங்களை வைத்துக்கொள்ளாதிருக்கட்டும். நிகழ்கால சத்தியத்தை விசுவாசிக்கிறதாக உரிமைபாராட்டும் ஒவ்வொரு ஊழியக்காரனும், தன்னைச் சுற்றிலும் இருக்கிற அழிந்துகொண்டிருக்கும் ஆத்துமாக்களை இரட்சிக்கிற வேலைக்கு தன்னையும், தன்னுடைய சரீரத்தையும், ஆத்துமாவையும், ஆவியையும் அர்ப்பணிக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

உணவுத்தொழில் ஒரு வணிக நிறுவனமாக நடத்தப்பட்டால், எவ்வாறு அது நம்முடைய வேலையில் ஆபத்தை பரப்பி, ஆபத்தான காரியமாக மாறிவிடும் என்பதைக்குறித்த ஒரு காரியம் எனக்குக் கொடுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. உங்கள் மனச்சாட்சியை தேவன் முன்பாக சுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள் என்று ஆண்களுக்கும் பெண்களுக்கும் சொல்லும்படி அழைக்கப்பட்டேன். கிறிஸ்தவனாயிருப்பது என்றால் என்ன என்கிற உங்களுடைய ஆவிக்குரிய கண்ணோட்டத்தை இழந்துவிடாதபடிக்கு, உங்கள் கண்களால் காண்கிறவைகளினாலும், காதுகளால் கேட்கிறவைகளினாலும் சோதிக்கப்பட்டு பரீட்சிக்கப்படும் இடத்தில் உங்களை நீங்கள் வைத்துக்கொள்ளாதீர்கள். தரத்தை உறுதியாகப் பிடித்திருந்து, அதை மேலும் உயர்த்துங்கள். கிறிஸ்துவை சமாதானத்துடன் சந்திக்க நீங்கள் செய்யவேண்டிய ஆயத்தத்தை தடுக்கிற வேலையில் ஈடுபடும்படி ஒருவரும் உங்களோடு பேசவேண்டாம்.

அழைக்கப்பட்ட மாபெரும் வேலையிலிருந்து தேவனுடைய மக்களின் மனங்களை திசைதிருப்பும் அநேக காரியங்கள் வரும். அழியாத வாழ்க்கையின் கிரீடத்தை பெற்றுக்கொள்ளும்படியாக உழைக்க ஆண்டவர் அவர்களுக்கு உதவிசெய்வாராக. "சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள். உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள். நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம். இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், கோபமூட்டுதலில் நடந்ததுபோல உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள் என்று சொல்லியிருக்கிறதே"—எபிரெயர் 3:12–15.

"ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற் கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப்போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக் கடவோம். ஏனெனில், சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுபோல நமக்கும் அறிவிக்கப்பட்டது; கேட்டவர்கள் விசுவாசமில்லாமல் கேட்டபடியினால், அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்குப் பிரயோஜனப்படவில்லை"—எபி.4:1,2.

இந்தக் கடைசி நாட்களில் செய்யப்படவேண்டிய மாபெரும் விசேஷ வேலை ஒன்று இருக்கிறது. அந்த வேலை சரியானவிதத்தில் செய்யப்படவேண்டும். சரியானவிதத்தில் நிர்வகிக்கப்பட்டால், தேவனுடைய வேலையை முன்னேற்றிச் செல்லும் தொழில் நிறுவனங்களை, மேற்கொண்டு நடத்திச் செல்வதைக்குறித்த ஞானம்கூட, அனுதினமும் பரிசுத்த ஆவியினால் ஒளிப்படுத்தப்படாதவர்களுக்கு இருக்காது என்கிறதை நாம் புரிந்துகொள்ளவேண்டுமென்று ஆண்டவர் விரும்புகிறார். இந்த ஆபத்தான நாட்களில், செய்யப்படவேண்டிய மாபெரும் வேலையினின்று மனதை திருப்பும் இயல்புடைய எதையும் நாம் கண்டிப்பாக தவிர்க்கவேண்டும். குறிப்பிட்ட சில விளைவுகளை சாதிப்பதற்கு பணம் சம்பாதிக்க, ஞானமாகவும், நியாயமாகவும், அறிவுக்கு ஏற்புடையதாகவும் தோன்றுகிற திட்டங்களை நாம் தீட்டலாம். ஆனால் இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படுமானால், ஆத்தும ஆதாயம் செய்வதற்காக தாங்கள் சிறிதளவே செய்திருக்கிறார்கள் அல்லது ஒன்றுமே செய்யவில்லை என்கிறதை அது காண்பிக்கலாம்.

உணவு வர்த்தகம் மிகப்பெரும்பாலான விதத்தில் உயர்த்தப்பட வேண்டும் என்று ஆண்டவர் கட்டளை கொடுத்திருக்கவில்லை. ஆத்துமாக்

களை மனம்மாற்றும் உணர்வுகளைப் பதிக்க, குழப்பங்களும் வணிகத் தொழிலும் கொண்ட உணவு அங்காடிகளைவிடவும் அதிகமான ஏதோ ஒன்று தேவைப்படும். தேவபக்திக்கான தரம் உயர்த்தப்படாதபோது, அனைத்து தொழில் பரிமாற்றங்களிலும் பரலோகத்தின் கொள்கைகள் வெளிப்படுத்தப்படாதபோது, உணவு விற்பனைக்கூடங்களோடு தொடர்புடைய அநேக ஆத்துமாக்கள், இந்த விற்பனைக்கூடங்களால் இரட்சிக்கப்படுவதைக் காட்டிலும் தொலைந்துபோகும்.

லாஸ் ஏஞ்சலசில் பெரிய உணவுத் தொழில்சாலை கட்டப்பட்டபோது, துவக்கத்திலேயே முடிவை **பார்க்கிறவரால்**: "இந்த விஸ்தாரமான கட்டடத்தில் தொழிலை நடத்திச்செல்லத் தேவையான வசதிகளை யார் அமைத்துக் கொடுப்பார்கள்? இப்படிப்பட்ட ஆலையை இயக்கத் தேவையான தாலந்து எங்கே இருக்கிறது? மிகச் சிறந்த விளைவுகளை உண்டாக்கும்படி கொண்டுசெல்லப்படவேண்டிய ஆவிக்குரிய வேலையை, முன்கொண்டுசெல்லத் தேவையான தாலந்து எங்கே இருக்கிறது? திட்டமிட்டபடி இந்த வேலை கொண்டுசெல்லப்படுமானால், தங்களுடைய ஆவிக்குரிய நிலையை பராமரிக்காத இளமையான மற்றும் வயதான ஊழியர்கள் அழைக்கப்படுவார்கள். நியாயத்தைக்குறித்து இப்போதிருக்கிற தெளிவில்லாத ஞானத்தினால், அநியாயத்தையும் சுயநலத்தையும் வெளிக்காட்டுகிற வழி திறந்திருக்கிறது. இது தேவனுடைய கோபத்தைப் பிறப்பிக்கும்" என்று சொல்லப்பட்டது.

எந்த இடத்திலும் மிகப்பெரிய உணவு ஆலைகளைக் கட்டுவது ஞானமல்ல. அப்படிச் செய்யப்படுமானால், இந்தத் திட்டங்களில் இணக்கம் ஏற்படாதபட்சத்தில், சாத்தானுடைய திட்டங்களை முன்கொண்டு செல்பவர்களால் அவைகள் அழிக்கப்படும் ஆபத்து ஏற்படும். மிகப்பெரிய உணவு ஆலைகளைக்குறித்த காரியத்தில் நான் வெளிச்சம் பெற்றிருக்கிறேன். அதன் விளைவு சாதகமானதாக இல்லை. அநேகர் திட்டமிட்டபடி உணவு வேலை கொண்டுசெல்லப்பட்டாலும், அதன் கடைசி விளைவு சொத்து அழிந்து, ஆத்துமாக்களும் அழிந்துபோவதாக இருக்கும்.—Ms 44, 1903. Written April 28, 1903.

## நிச்சயமான தொடர்புகளை ஏற்படுத்துதல்

தேவனுடைய காரியத்திற்காகவும், வேலைக்காகவும் நான் ஒரு பாரத்தைச் சுமந்துகொண்டிருக்கிறேன். கொள்கையின்மையை வெளிக்காட்டுவதாலும், நமக்கு மிக அருமையாக இருக்கிற செய்திகளில் அவநம்பிக்கையைக் காண்பிப்பதாலும், நான் பயமடைந்திருக்கிறேன்.

ஆரோக்கிய உணவு தொழிலையும் உணவக வேலையையும் உச்ச நிலைக்கு எடுத்துச் செல்லுவதிலுள்ள ஆபத்துகளைக்குறித்த சில காரியங்களை எழுதும்படி நான் இப்போது வற்புறுத்தப்பட்டிருக்கிறேன். சத்தியத்தை அறிந்தவர்களை உலகத்தாருடைய தொடர்புக்குள் கொண்டுவந்து, நிகழ்கால சத்தியத்தின் செய்தியோடு அவர்களை சந்திக்கும் சந்தர்ப்பங்களை உண்டுபண்ணும் வாசலாக உணவகங்கள் நிறுவப்படவேண்டும் என்று நான் எழுதியிருந்தேன். இந்த உணவகங்களுக்கு வருகிறவர்கள் தங்களுடைய உணவுப் பழக்கங்களில் சீர்திருந்துவார்களானால், சத்தியத்திற்குச் சாதகமான வாதங்களை கவனிக்க நன்கு ஆயத்தமாவார்கள்.

ஆனால் நித்திய முக்கியம் கொண்டவைகளில் ஒரு ஆழமான உயிருள்ள வாஞ்சை இந்த உணவக வேலையால் எழுப்பப்படாதபோது, இந்த வேலையால் என்ன ஆதாயம் பெறப்படுகிறது? கிறிஸ்து ஆத்துமாக்களுக்காக பசியோடிருக்கிறார். தாம் யாருக்காக தமது ஜீவனைக் கொடுத்தாரோ, அவர்கள் தங்களுக்கு எட்டும் தூரத்தில் வைக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளுவதைக் காண பசியோடிருக்கிறார். அவர்களுக்காக அவர் வீணாக மரித்தாரா? தேவனுக்கு உண்மையாயிருப்பதிலிருந்து மனிதர்களை வழிவிலகச்செய்ய சாத்தான் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் உபயோகிப்பான். வஞ்சிப்பதற்கு வகைதேடும் மனிதர்களாக சாத்தானும் அவனுடன் விழுந்த தூதர்களும் பூமியின்மேல் காணப்படுவார்கள். தேவனுடைய தூதர்களும் மனிதர்களைப்போலக் காணப்பட்டு, சத்துருவின் நோக்கத்தை தோற்கடிப்பதற்கு தங்களுடைய வல்லமையிலுள்ள அனைத்தையும் உபயோகிப்பார்கள். செய்யும்படியான பங்கு நமக்கும் ஒன்று இருக்கிறது. ஆண்டவருடைய யுத்தங்களில் தைரியமாக சண்டைபோடாவிட்டால், நாம் நிச்சயமாக வெற்றிகொள்ளப்படுவோம்.

தேவனை நேசித்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்கள், பரலோகத்தைநோக்கி முன்னேறுவதில் குறைவான தடங்கல்களைச் சந்திக்கும்படியாக, பட்டணங்களில் வசிக்காதிருக்க எச்சரிக்கப்படுகிறார்கள். நம் உணவகங்களால் ஆத்துமாக்கள் சத்தியத்திற்கு சம்பாதிக்கப்படாதபட்சத்தில், பட்டணங்களில் நடத்தப்படவேண்டிய இந்த வேலையில் இவ்வளவு பெரியதாக நுழைவதினால் என்ன ஆதாயம்? போடப்பட்ட முயற்சிகளை விளைவுகள் நியாயப்படுத்துமா? ஆத்துமாக்களை இரட்சிக்க எந்த முயற்சியும் எடுக்காமல், நிகழ்கால சத்திய ஒளியை காணும்படி அவர்களை நடத்த எந்த முயற்சியும் எடுக்காமல், உலகத்தாருக்கு உணவு செய்து கொடுப்பதற்கு தங்களுடைய நேரத்தையும் பலத்தையும் செலவழிப்பது நமது வாலிப ஆண்களுக்கும் வாலிபப் பெண்களுக்கும் ஆதாயமாக இருக்குமா?—Letter 83, 1903. Written May 13, 1903.

# ஆரோக்கிய உணவு வேலையை ஒரு ஆசீர்வாதமாக்குங்கள்

ஆரோக்கிய உணவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற அனைவருக்கும் என்னிடம் ஆலோசனை இருக்கிறது. பட்டணங்களில் உணவு விற்பனைக் கூடங்களும் சுகாதாரமான உணவகங்களும் நிறுவப்படவேண்டும் என்றும், அவைகள், இந்தக் காலத்திற்கான சுவிசேஷ செய்தியோடு மக்களை சந்திக்கும் வழியாக இருக்கும்படி நடத்தப்படவேண்டும் என்றும் நான் சொல்லியிருந்தேன். கடன்கள் சேர்ந்துகொண்டுபோகாதபடி நம்முடைய உணவகங்கள் எல்லாம் நடத்தப்படவேண்டும். கடன்கள் சேர்ந்தால், அதன் ஆதரவாளர்கள் அநேகராயிருந்தாலும், அத்தொழிலில் முழுமையான கவனமான விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும். கடனை அடைக்கும் மாற்றங்கள் செய்யப்படவேண்டும். தொடர் நிதி நஷ்டத்தில் ஒரு உணவகம் நடத்தப்படக்கூடாது.

சமீபத்தில் ஒரு இரவில், நாங்கள் ஒரு ஆலோசனைக்கூட்டத்தில் இருப்பதுபோலக் காணப்பட்டது. அதிகாரம்கொண்ட **ஒருவர்** எங்கள் நடுவே நின்று: "இந்த வேலையை வெறும் வியாபாரமாக மாற்றிவிட்டீர்களா? சத்துள்ள ஆகாரத்தை எவ்வாறு தயாரிப்பது என்று மக்களுக்கு போதிக்கவும், நிகழ்கால சத்தியத்தைக்குறித்த அறிவுக்கு அவர்களைக் கொண்டுவரவுமே உணவகங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டும் என்ற போதனையை நீங்கள் செயல்படுத்துகிறீர்களா? ஒவ்வொரு நாளும் நீங்கள் சந்தித்தவர்களிடம் கிறிஸ்தவ நம்பிக்கையைக்குறித்து பேசினீர்களா? கூட்டங்கள் நியமிக்கப்பட்டு, வேதாகம தலைப்புகளில் போதனைகள் கொடுக்கப்பட்டதா?" என்று உணவுத் தொழிலில் பொறுப்புவகிக்கிற நபர்களை கேள்விகேட்டார்.

நம்முடைய உணவகங்களில் வேலைசெய்கிறவர்கள், ஆத்துமாக்களை வேட்டையாடி பிடிக்கவேண்டும். வசதியான இடத்தில் கூட்டங்கள் நடத்தப்படவேண்டும். ஆகாரத்திற்காக உணவகத்திற்கு வருகிறவர்களுக்கு இந்த கூட்டங்களைக்குறித்த அறிவிப்பு கொடுக்கப்படவேண்டும். சிலர் வருவார்கள். இவ்வாறாக அவர்கள் வேதாகம ஆராய்ச்சிக்குள் நடத்தப்பட்டு, தாங்கள் கேட்ட சத்தியங்களைக்குறித்த கேள்விகளை கேட்பார்கள்.

நீங்கள் சந்திக்கிறவர்களை சென்றடைவதற்கான மிகச் சிறந்த வழியைக் காண்பிக்கும்படி ஆண்டவரை ஜெபத்திலே தேடுங்கள். "நீதிமான்களையல்ல, பாவிகளையே இரட்சிக்கிறதற்கு அழைக்கவந்தேன்" என்ற இரட்சகரின் வார்த்தைகளை நினைவுகூருங்கள். வெவ்வேறு மக்களை கையாளும்போது வெவ்வேறு முறைகள் பின்பற்றப்படவேண்டும். சிலருக்கு

கைப்பிரதிகள் கொடுக்கலாம். மற்றவர்களிடம்: “நீங்கள் ஆண்டவர் இயேசுவை நேசிக்கிறீர்களா?” என்ற கேள்வியை விடுக்கலாம். நடத்தப்படும் அந்த கூட்டங்களில் அவர்களை உற்சாகப்படுத்துகிறவிதத்தில் பேசுங்கள். நீங்கள் பேசும் காரியத்தை அவர்களால் புரிந்துகொள்ளாமல்போகமுடியாது என்பதுபோன்று, எளிய, நடைமுறையானவிதத்தில் பேசுங்கள். ஆவிக்குரிய காரியங்களைப் பேசுகிறவர்கள் உபயோகிக்கும் வார்த்தைகளை அறிந்திராத அநேகர் உண்டு. அவர்கள் தாங்கள் கேட்கிறவைகளை புரிந்துகொள்ளமாட்டார்கள். கேட்கிற அநேகருக்கு ஆவிக்குரிய காரியங்களில் மிகச்சிறிதளவே ஈடுபாடு இருப்பதால், ஆவிக்குரிய ஆலோசனைகளை வழங்க எடுக்கப்பட்ட முயற்சிகள் காற்றை அடிக்கிறதுபோல வீண் முயற்சியாக இருக்கும்.

உங்கள் உணவக வேலையில் நீங்கள் மார்க்க சம்பந்தமாக முன்னேறவில்லையெனில் என்ன ஆதாயம் அடைந்தீர்கள்? தங்கள் வாழ்நாள் முழுவதும் பாவத்தில் தொடர்ந்திருந்த அநேகருடைய தொடர்புக்குள் நீங்கள் அனுதினமும் கொண்டுவரப்படுகிறீர்கள். அவர்களுடைய கவனத்தை சிறைபிடிக்கிறதற்கு ஏதாகிலும் வகுக்கப்படவேண்டும். தங்களுடைய ஆபத்தைக்குறித்து அவர்கள் எச்சரிக்கப்படவேண்டும். இந்த வேலை நம்முடைய உணவகங்களில் செய்யப்படக்கூடாது என்றால், அவைகள் நிறுத்தப்படட்டும். உட்கொண்டு விளைவுகளை உண்டாக்காத வேலையில் பணத்தையும் தாலந்தையும் செலவுசெய்வதால் என்ன பலன்? ஜீவ அப்பத்தையும் இரட்சிப்பின் தண்ணீரையும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தருவதை நெகிழ்ந்து, லௌகீக உணவை அவர்களுக்காக ஆயத்தப்படுத்தும்படி தங்களுடைய நேரத்தை செலவளிக்கிற உழைப்பாளிகளுக்கு என்ன பிரயோஜனம்? வெறும் லௌகீக உணவை மாத்திரமே தருவது ஜீவனுக்கேதுவான வாசனையாக இருக்காது.

தேவனுடைய ஊழியக்காரர்கள் கணக்கு கொடுக்கிறவர்களைப்போல ஆத்துமாக்களுக்காக காத்திருக்கவேண்டும். உணவக வேலையில் கடந்த காலத்தில் செய்யப்பட்டிருந்ததைப்போல ஆத்தும ஆதாய வேலையை முன்கொண்டுசெல்ல அதிகம் செய்யப்படாதபோது, உணவகங்களில் வேலை செய்கிறவர்கள், அதிக ஆத்துமாக்களை கிறிஸ்துவிடம் கொண்டுவரும் வேறு வேலைகளில் தங்களுடைய தாலந்துகளை உபயோகிப்பது மேன்மையாயிருக்கும். கிறிஸ்துவினுடைய இராஜ்யத்தின்மேலிருக்கிற ஆர்வமே அனைத்தையும்விட மிக உயர்ந்தது. மக்களுக்கு வெறும் லௌகீக ஆகாரத்தை கொடுக்கவும் பணம் சம்பாதிக்கவுமே உணவு விற்பனைக்கூடங்களையும் உணவு ஆலைகளையும் நிறுவுவதில் நம்முடைய ஆற்றலை உபயோகிக்கக்கூடாது. ஆயிரக்கணக்கானோர் பாவத்தில்

அழிந்துகொண்டிருக்கின்றனர். தங்களுடைய ஆபத்துகளைக்குறித்த உணர்வுக்கு ஆத்துமாக்களை எழுப்ப, தேவனுடைய மக்களின் ஆற்றல்கள் உபயோகப்படுத்தப்படவேண்டும்.

நம்முடைய வாலிப ஆண்களும் வாலிபப் பெண்களும் ஆத்துமாக்களை கிறிஸ்துவிற்காக வெற்றிகொள்ளக்கூடிய செல்வாக்கை ஏற்படுத்துவதை விடுத்து உலகத்தால் புளிப்படைவார்களானால், உலகக் காரியங்களோடு தொடர்புகொள்ளக்கூடிய வேலையில் அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கமுடியாது. தேவனுடைய மக்கள் கைவைக்கும் ஒவ்வொரு வேலையிலும் ஆத்தும ஆதாயம் செய்வதே முதன்மையாக்கப்படவேண்டும். தாங்கள் யாருக்கு லௌகீக உணவை வழங்குகிறார்களோ, அவர்களை சத்தியத்தோடு சந்திக்கும்படி தங்களால் கூடிய அனைத்தையும் செய்யாதபோது, தங்களுடைய முயற்சிகளில் தேவனுடைய அங்கீகாரம் இருக்கும் என்று உணவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் நினைத்துக்கொள்ளவேண்டாம்.

## தீர்மானமான எச்சரிக்கை

நம்முடைய **போதகரால்** மிகத் தீர்மானமான எச்சரிக்கை ஒன்று கொடுக்கப்பட்டது. ஏசாயா 8–ம் அதிகாரத்தில் இருக்கிற பின்வரும் வார்த்தைகளை அவர் மீண்டும் மீண்டும் கூறினார்.

“இந்த ஜனங்கள் கட்டுப்பாடு என்று சொல்லுகிறதையெல்லாம் நீங்கள் கட்டுப்பாடு என்று சொல்லாமலும், அவர்கள் பயப்படுகிற பயத்தின்படி நீங்கள் பயப்படாமலும், கலங்காமலும், சேனைகளின் கர்த்தரையே பரிசுத்தம்பண்ணுங்கள்; அவரே உங்கள் பயமும், அவரே உங்கள் அச்சமுமாயிருப்பாராக. அவர் உங்களுக்குப் பரிசுத்த ஸ்தலமாயிருப்பார்; ஆகிலும் இஸ்ரவேலின் இரண்டு கோத்திரத்துக்கும் தடுக்கலின் கல்லும், இடறுதலின் கன்மலையும், எருசலேமின் குடிகளுக்குச் சுருக்கும் கண்ணியுமாயிருப்பார். அவர்களில் அநேகர் இடறிவிழுந்து நொறுங்கிச் சிக்குண்டு பிடிபடுவார்கள்.”–ஏசாயா 8:12–15.

“தேவனுடைய மக்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பதற்குப்பதிலாக அவர்களைக் காயப்படுத்துவதற்கேதுவாக நம்முடைய உணவுத் தொழில் நடத்தப்படலாம். இந்த வேலை வைராக்கியமாக பாதுகாக்கப்படவேண்டும். இல்லாதபோது, நாம் வெற்றிபெறும் பக்கத்தில் அல்லாது, தோல்வியடையும் பக்கத்தில் காணப்படுவோம். அதன் ஊழியர்கள் பாதுகாக்கப்படவேண்டும். அவர்கள் உலகத்தால் கறைபட்டுவிடாதபடிக்கு, நான் அவர்களுக்கும் உலகத்திற்கும்இடையேவைத்திருக்கிறதடுப்புகள்எடுத்துப்போடப்படக்கூடாது. மிகுந்த கவனம் கொடுக்கப்படாவிட்டால், சிலர் உலகத்தின் ஆவியால்

மயக்கப்பட்டு, தங்களுடைய வழிகளைக் கெடுக்கும்படியாக நடத்தப்பட்டு… சாத்தானுடைய கண்ணியில் விழுவார்கள்” என்று நம்முடைய **போதகர்** கூறினார்.

தங்களுடைய ஆபத்தை உணராமல் உணவுத் தொழிலில் ஈடுபடுகிற அனைவருக்கும் அங்கே ஒரு கண்ணி இருக்கிறது. இந்த தொழில் நடத்தப் பட்டுக்கொண்டிருக்கிறவிதத்தில் ஆண்டவர் மகிழ்ச்சியாக இல்லை. அதிகப் பழுவான வாணிகம் இதற்குள் கொண்டுவரப்படக்கூடாது. இந்த வேலையில் தொடர்புடையவர்கள் கிறிஸ்துவினிடம் வரும்படியான அழைப்பைக் கவனித்து, அவருடைய சாந்தத்தையும் தாழ்மையையும் அவரிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டும்….

இந்த உலகத்தில் செய்யப்படவேண்டிய மகா பெரிய வேலை ஒன்று இருக்கிறது. மற்ற வேலைகளில் தேவன் எதிர்பார்க்கிற திறமையையும் சாதுரியத்தையும் திறனையும் உட்கொள்ளுகிற, வியாபார தன்மையுடைய நிறுவனங்களை ஆண்டவருடைய ஊழியக்காரர்கள் தொடங்கக்கூடாது. தேவனுடைய ஜனங்கள் அவர் தங்கள்மேல் வைத்திருக்கிற பாரங்களை கீழே வைத்து, நீதியின் ஆடையை வாங்கிக்கொண்டவுடன், கிறிஸ்துவின் ஜெபத்திற்கு பதில் கொடுத்து, எல்லாத் தாழ்மையோடும் ஆண்டவருக்கு சேவைசெய்ய துவங்கினவுடன், ஏசாயா 12–ம் அதிகாரத்தின் வார்த்தைகள் அவர்களுக்கு நிறைவேறும்.—MS 45, 1903. Written May 17, 1903.

## மற்ற வேலைகளிலிருந்து ஊழியர்கள் எடுக்கப்படக்கூடாது

உலகத்திற்கு கிருபையின் கடைசி செய்தியை கொடுக்கும் வேலையில் தேவனுடைய ஜனங்களின் தாலந்துகள் உபயோகிக்கப்படவேண்டும். வாலிபருக்கு சுவிசேஷ வேலை செய்யக் கற்றுத்தருமாறு, நம்முடைய சுகாதார மையங்களோடும், வெளியீட்டு மையங்களோடும், மற்ற நிறுவனங்களோடும் தொடர்புடையவர்களை ஆண்டவர் அழைக்கிறார். மற்ற துறைகளில் வேலை நெகிழப்படுவதற்கேதுவாக, நம்முடைய நேரம் சுகாதார மையங்களையும் உணவு ஆலைகளையும் உணவு விற்பனைக்கூடங்களையும் உணவகங்களையும் நிறுவுவதில் அதிகமாக செலவிடப்படக்கூடாது. ஊழியத்திலும், வேதாகமம் தொடர்புடைய வேலைகளிலும், புத்தக ஊழியத்திலும் ஈடுபட்டிருக்கவேண்டிய வாலிப ஆண்களும் வாலிபப் பெண்களும் இயந்திரத்தன்மையுள்ள வேலைகளில் கட்டப்படக்கூடாது.—Letter 113, 1903. Written May, 1903.

*****

நம்முடைய வேலையில் உணவு உற்பத்திக்கும் வியாபாரத்திற்கும் குறைவான முக்கியத்துவமே கொடுக்கப்படவேண்டும். இந்த வேலைக்குத் தங்களை கொடுத்திருக்கிறவர்கள், இப்போது உயர்ந்த வேலையான — ஆத்துமாக்களை இரட்சிக்கும் வேலையில் தங்களை அர்ப்பணிக்கவேண்டும். உணவு உற்பத்திசெய்யும் முயற்சியில் நுழைந்திருக்கிறவர்கள், தாங்கள் ஜீவ அப்பத்தைக் கொடுத்து போஷிக்கவேண்டிய நபர்கள் இல்லையா? ஆவிக்குரிய உணவின் அவசியத்தில் இருக்கிறவர்கள் இல்லையா என்று தங்களைக் கேட்டுக்கொள்ளமாட்டார்களா?—Letter 84, 1910. Written July 26, 1910.

*****

ஆத்துமாக்களை வெற்றிகொள்ளும் வேலையில் திறமையுள்ள ஆண்கள் மற்றும் பெண்களுடைய நேரத்தை உணவுத் தொழில் எடுத்துக்கொள்ளாதிருப்பதாக. "மனந்திரும்புங்கள் பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்ற அவர்களுடைய தொனி கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் கேட்கப்படவேண்டியதாயிருக்க, அவர்கள் தங்களுடைய வல்லமைகளை லௌகீக உணவு தயாரிப்பிற்குக் கொடுக்கமுடியாது.—MS 59, 1912. Written August 13, 1912.

## செயல்விளக்கத்தால் கற்பித்தல்

ஆரோக்கிய சீர்திருத்தக் கொள்கைகளை மக்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு மிகப்பெரிய வேலை செய்யப்படவேண்டியதிருக்கிறது. இந்தக் கருத்தை அறிமுகப்படுத்துவதற்கு பொது கூட்டங்கள் நடத்தப்படவேண்டும். ஆர்வமுள்ளவர்களுக்கு நம்முடைய ஆரோக்கிய உணவுகளைக்குறித்தும் எவ்வாறு ஆரோக்கியமுள்ள சத்தான, பசியைத் தூண்டக்கூடிய ஆகாரத்தை மாமிசமும் தேநீரும் காபியும் இல்லாமல் தயாரிக்கமுடியும் என்கிறதையும் கற்றுக்கொடுக்க பள்ளிகள் நடத்தப்படவேண்டும்.

நம்முடைய சரித்திரத்தின் துவக்கத்தில் இவ்வாறாக நாங்கள் செய்தோம். தேவன் நம்முடைய முதல் பெற்றோருக்கு ஏதேனில் கொடுத்திருந்த விளைச்சல்களை, நம் வாழ்க்கையின் ஆதாரத்திற்காக பாதுகாப்பாக சார்ந்திருக்கலாம் என்கிறதை செயல்விளக்கங்களால் நாங்கள் மக்களுக்கு கற்பித்தோம். ஆரோக்கிய சீர்திருத்தக் கொள்கைகளை பேசக்கூடிய மனிதர்கள் இந்த வேலையில் ஈடுபடட்டும்.—Letter 343, 1904. Written December 27, 1904.

# ஆரோக்கிய உணவு வேலைகுறித்த ஆலோசனைகள்

அநேக வருடங்களுக்கு முன்பாக ஆண்டவர் ஆரோக்கிய சீர்திருத்தம்குறித்த வெளிச்சத்தைக் கொடுத்தார். சரீர உதவி தேவைப்பட்டோருக்கு ஆசீர்வாதமாயிருக்கும்படியும், சத்தியத்தை அறிவிக்க கதவுகளைத் திறக்கும்படியும் இந்த வெளிச்சம் திட்டம்பண்ணப்பட்டிருந்தது. ஆரோக்கிய சீர்திருத்தத்தின் மேலுள்ள வெளிச்சம் இன்னும் நன்றாக புரிந்துகொள்ளப்படவேண்டும். தேவனுடைய ஜனங்களுக்கு மேற்கொண்டு வெளிச்சம் கொடுக்கப்படும்போது, அவர்கள் அந்த சத்தியங்களை மற்றவர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

தேவனுடைய வேலையை அதிகமாக முன்கொண்டு செல்லுவதற் கேதுவாக ஆரோக்கிய உணவு வேலை இப்போது நடத்தப்படவில்லை என்று சொல்லும்படி அறிவுறுத்தப்பட்டேன். இந்த தொழிலின் மேலாண்மையை பயமுறுத்தும் அநேக ஆபத்துகளை ஆண்டவர் என்முன் காண்பித்தார். இப்போது இருப்பதைப்போல ஒரு வாணிபத் தொழிலாக ஆரோக்கிய உணவு உற்பத்தியும் விற்பனையும் மாறவேண்டும் என்று ஆண்டவர் ஒருபோதும் திட்டம்பண்ணவில்லை. வெகுசிலர் மாத்திரமே மிகப்பெரிய சுயஇலாபத்தை பெறும் யூகம் சார்ந்த தொழிலாக இது மாறக்கூடாது. ஆரோக்கியமுள்ள உணவுகளை திட்டஞ்செய்யும் ஞானத்தை தேவன் அநேக மனங்களுக்குக் கொடுத்திருக்கிறார்.

தேவனுடைய ஜனங்களுக்கு ஆகார சீர்திருத்தத்தைக்குறித்த அறிவு கொடுக்கப்படவேண்டுமென்று ஆண்டவர் விரும்புகிறார். இது நம்முடைய பள்ளிகளில் கொடுக்கப்படவேண்டிய கல்வியின் இன்றியமையாத பகுதி. புதிய இடங்களில் சத்தியம் கொடுக்கப்படும்போது, சுகாதாரமாக சமைப்பதைக்குறித்த பாடங்கள் கொடுக்கப்படவேண்டும். மாமிச உணவு இல்லாமல் எவ்விதம் வாழலாம் என்கிறதை மக்களுக்குப் போதியுங்கள். எளிமையாக வாழ்வதை அவர்களுக்குப் போதியுங்கள்.

இப்போது கிடைக்கிற அநேக உணவுகளைவிட விலை குறைவானதும் மிக எளிமையானதுமான உணவுகளை பழங்களிலிருந்தும் தானியங்களிலிருந்தும் தயாரிக்க மனிதர்களை நடத்துவதில் ஆண்டவர் கிரியை செய்துகொண்டிருக்கிறார், இன்னும் கிரியை செய்துகொண்டிருக்கிறார். விலை அதிகமான இந்த உணவு தயாரிப்புகளை அநேகரால் வாங்கமுடியாது. என்றாலும் சத்தில்லாத இந்த ஆகாரத்தை நம்பி அவர்கள் வாழவேண்டிய அவசியமில்லை. வனாந்தரத்தில் ஆயிரக்கணக்கானோரை வானத்தின் அப்பத்தினால் போஷித்த அதே தேவன், எளிய முறையில்

எவ்வாறு உணவை ஆயத்தப்படுத்துவது என்கிற அறிவை இன்றைக்கு தமது மக்களுக்குக் கொடுப்பார்.

நம்முடைய உணவகங்களின் வேலையைக்குறித்த ஒரு சாட்சி என்னிடம் இருக்கிறது. சுவிசேஷ ஊழியத்தில் உபயோகப்படக்கூடிய தாலந்தை இந்த நிறுவனங்கள் அதிகமாக உறிஞ்சிக்கொண்டன. கைகளில் வேதாகமத்தை எடுத்து தவறு என்கிற உறைபனி மூடுபனிகளுக்கிடையில் சத்தியத்தின் ஒளியை பிரகாசித்து புதிய இடங்களில் போதித்துக்கொண்டிருக்கவேண்டிய அநேகர் இந்த நிறுவனத்தில் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இப்போது நடத்தப்படுவதைப்போல, ஆத்தும ஆதாயம் செய்வதில் மிகவும் குறைந்த விளைவையே வெளிக்காட்டுகின்ற இந்த வேலையில் அதிகமான தாலந்தும் திறமையும் உறிஞ்சப்படுகிறது. தேவன் தங்கள்மேல் வைக்காத பாரத்தை உணவகங்கள் சுமந்துகொண்டிருக்கின்றன. உணவுகள் மிக விலையுயர்ந்ததாயிருக்க, ஏழைமக்களால் உபயோகிக்க இயலவில்லை. உணவுகளை ஆயத்தம் செய்வதில் அதிக எளிமை வேண்டும்.

மிக முக்கியமான வேலையாகிய ஆத்துமாக்களை ஆதாயம் செய்யும் வேலை வாடிக்கொண்டிருக்கும்போது, மிக அதிகமான தாலந்து வெறும் வியாபார நலன்களில் உறிஞ்சப்படுவதால், ஒரு மக்கள்கூட்டமாக நாம் தேவனால் கடிந்துகொள்ளப்பட்டவர்களாக இருக்கிறோம். ஆத்துமாக்கள் ஜீவ அப்பத்திற்காக பட்டினியாயிருக்க விட்டுவிடப்பட்டிருக்கும்போது, இத்தனை ஊக்கமான முயற்சி உணவுப் பொருட்களை உற்பத்திசெய்து வியாபாரம் செய்வதற்குக் கொடுக்கப்படக்கூடாது. இப்போது நிச்சயமாகவே ஆகியிருப்பதைப்போல உணவுகளின் உற்பத்தி தம்முடைய மக்களுக்கு கண்ணியாகவேண்டுமென்று தேவன் ஒருபோதும் திட்டஞ்செய்யவில்லை. ஆண்டவர் இந்த வேலையை தம்முடைய மக்களுக்கு ஆசீர்வாதமாக கொடுத்தார். ஆனால் சுயநலமும் பேராசையும் நேர்மையின்மையும் இதை மாபெரும் தீமைகளை உண்டுபண்ணும் ஒன்றாகச் செய்துவிட்டது. ஆசீர்வாதமாயிருக்கவேண்டுமென்று தேவன் நியமித்த இது, அவருடைய வேலையிலிருந்து மதிப்புமிக்க தாலந்துகளை உறிஞ்சி திசைதிருப்பிவிட்டது.

ஒரு சிலர் மாத்திரம் தங்களுக்கு மிக அதிகமான இலாபங்களை சேர்த்துக்கொண்டிருக்க, இணையான தகுதியடைய மற்றவர்கள் எவ்வித உரிமையும் இல்லாதவர்களைப்போல விட்டுவிடப்படும் சுயநலமான ஏகபோக தனியுரிமைகொண்ட வேலையாக ஆரோக்கிய உணவு வேலை நடத்தப்படக்கூடாது. மற்ற மனங்களிலிருந்து வரும் அறிவின் நன்மைகளை தனக்காக எடுத்துக்கொள்ளக்கூடிய பத்திரங்களில் கையெழுத்திட, எவரும் தன்னுடைய சகோதரனை கட்டாயப்படுத்துவதை ஆண்டவர் தடைசெய்கிறார்.

தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனமாக, நாம் ஒவ்வொரு மோசடியான பரிவர்த்தனையிலிருந்தும் விடுபட்டவர்களாக நிற்கவேண்டும். நம்முடைய மாதிரிகளில் சுயநலத்தின் ஒரு நூலிழைகூட கொண்டுவரப்படாதிருக்கட்டும். பொதுமக்கள்முன்பாக தரமலிவான, ஆரோக்கியமில்லாத எந்த உணவும் வைக்கப்படாதிருக்கட்டும். தாழ்ந்த தரமாயிருக்கும் எதுவும் தூய்மையும் முதல்வகுப்புமான பொருளாக காண்பிக்கப்படாதிருக்கட்டும்.

தேவன் தம்முடைய மக்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கும்படியாக கொடுத்திருக்கிற வெளிச்சத்தை தங்களுக்கு வருமானம் பெற்றுதரும் ஒரு ஆதாரமாக உபயோகிக்கச் செய்கிற அறிவை, நேர்மையில்லாத மனிதர்களுக்கு கொடுக்காமலிருக்க மிகுந்த கவனம் செலுத்தப்படவேண்டும். ஆரோக்கிய உணவுகள் என்று அழைக்கப்படும் உணவுகளின் உற்பத்தியில் கெடுதலான கலப்படங்களை கொள்கையில்லாத மனிதர்கள் அறிமுகப்படுத்துவார்கள்.

ஒவ்வொரு தொழில் பரிவர்த்தனையும், நியாயமாக, நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கவேண்டுமென்ற நினைவோடு செய்யப்படட்டும். “அந்தப்படி: முழுங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் தேவனை அறிக்கைபண்ணும் என்று என்ஜீவனைக்கொண்டு உரைக்கிறேன் என்பதாய்க் கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது. ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான். இப்படியிருக்க, நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக. ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலையும் இடறலையும் போடலாகாதென்றே தீர்மானித்துக்கொள்ளுங்கள்.... உங்கள் நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள். தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது”–ரோமர் 14:11–17.

எதிர்கால மகிமையின் நித்திய ஆசீர்வாதங்களை புரிந்து கொள்ளுவதில் நம்முடைய உணர்வுகளை மந்தப்படுத்தி, நம்முடைய மனதை ஆக்கிரமித்துக்கொள்ளுகிற ஒவ்வொன்றையும் நம்முடைய வாழ்க்கையிலிருந்து வெட்டி அப்புறப்படுத்தவேண்டியது அவசியம். பரலோகக் காரியங்களின் ஒளியை மற்றவர்களுக்கு பிரதிபலிக்கிறதற்கு ஏதுவாக நம்முடைய குணத்தை பலப்படுத்தி பூரணப்படுத்தக்கூடியவைகளை நம்முடைய அனுதின அனுபவத்தில் நாம் கொண்டுவரவேண்டும்.

எச்சரிக்கப்படவேண்டிய உலகம் ஒன்று இருக்கிறது. நாம் காலத்தின் முடிவை நெருங்கிக்கொண்டிருக்கிறோம். தேவனுடைய ஆவியானவர்

உலகத்திலிருந்து விலக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார். ஆண்டவர் நம்மை நித்திரையினின்று அழைக்கிறார். நாம் அநேக மதிப்புள்ள சந்தர்ப்பங்களை இழந்துவிட்டோம். இனி காலத்தை வீணாக்கவேண்டாம். சத்தியத்தின் ஒளி உலகத்திற்கு பிரகாசிக்கவேண்டும். இருள் மற்றும் நிச்சயமின்மையின் கிரியைகளை தூர எறியுங்கள்.—MS 96, 1905. Written September 7, 1905.

## ஒரு சீர்திருத்தம் அவசியம்

சென்ற வாரம் நம்முடைய ஆரோக்கிய உணவு ஊழியக்காரர்களுடைய ஒரு முக்கியமான கூட்டம் இங்கே சுகாதார மையத்தில் நடந்தது. அவர்களிடம் ஓய்வுநாளில் நான் பேசினேன். ஞாயிற்றுக்கிழமையில் ஏறக்குறைய ஒரு மணிநேரம் நம்முடைய உணவக வேலையைக்குறித்து அவர்களோடு நான் பேசினேன். ஆரோக்கிய உணவு வேலையில் முழுமையான சீர்திருத்தம் கட்டாயம் வேண்டும் என்று அவர்களுக்குச் சொன்னேன். அது ஒரு வியாபார நிறுவனத்தைப்போல எண்ணப்படக்கூடாது. நம்முடைய உணவகங்கள் கடந்த காலத்தில் நடத்தப்பட்டதைப்போல நடத்தப்படும்படி அநேக இடங்களில் நிறுவப்படவேண்டும்—என்று சிபாரிசு செய்ய எங்களை நடத்தவேண்டிய இந்த வேலையின் விளைவுகள், இப்போதைக்கு மிகக் குறைவாகவே காணப்படுகிறது. என்றாலும் சிலர் லாஸ் ஏஞ்சலஸிலும் சான் பிரான்சிஸ்கோவிலும் மாற்றப்பட்டிருக்கின்றனர். ஊழியக்காரர்களில் அநேகர் ஆத்தும ஆதாயம் செய்யும் அறிவியலை இழந்துவிட்டிருக்கின்றனர்.

சாட்சியாகமம் ஏழாம் புத்தகத்தில் ஆரோக்கிய உணவையும் சுவிசேஷ ஊழியத்தையும் குறித்து வெளியிடப்பட்டதை தயவுசெய்து கவனமாக படியுங்கள். சத்தியத்தை அளிக்கும்படியாக நாம் ஞானமுள்ள முயற்சிகளை கட்டாயம் எடுக்கவேண்டுமென்று நான் அதிகம் அதிகமாக உணர்த்தப்படுவதாக உணருகிறேன். கொஞ்ச நாட்களாக இந்த வெளிச்சம் அச்சிடப்பட்டுக்கொண்டிருப்பதால், இந்த வேலையைக்குறித்து நான் இப்போது அதிகம் எழுதவேண்டிய அவசியமில்லை. ஆனால் சாட்சிகள் வெளியிடப்பட்டபின்பு, கொடுக்கப்பட்டிருக்கிற எச்சரிப்புகளின் அவசியத்தை வெளிப்படுத்துகிற சூழ்நிலைகள் எழும்பியிருக்கின்றன. தேவன் நியமித்ததைப்போல நிற்கிறதற்குமுன்பாக ஆரோக்கிய சீர்திருத்தத்திற்கு ஒரு எழுப்புதல் தேவைப்படுகிறது. நாம் மேற்கொள்ளுகிற ஒவ்வொன்றிலும் உண்மையான தேவபக்தியை பழக்கப்படுத்தவேண்டியது அவசியம். நம்முடைய பட்டணங்களில் இருக்கும் அனைத்து உணவகங்களிலும் வழங்கப்படும் உணவு வகைகளில் அதிக உணவுகளை ஒன்றிணைப்பது வெகு தூரத்திற்குக் கொண்டுசெல்லப்படும் ஆபத்து இருக்கிறது. ஒரேவேளை ஆகாரத்தில் அதிக வகையான உணவுகள் வைக்கப்படும்போது வயிறு

துன்புறுகிறது. **எளிமையாயிருப்பது ஆரோக்கிய சீர்திருத்தத்தின் ஒரு பகுதி.** நம்முடைய வேலை, தான் கொண்டிருக்கிற பெயரை இழக்கும் ஆபத்து இருக்கிறது.

ஆரோக்கியத்தை மீண்டும் நிலைநிறுத்த நாம் வேலை செய்வோமானால், பசியை கட்டுப்படுத்துவதும், மெதுவாக சாப்பிடுவதும், ஒவ்வொருவேளை உணவையும் வரையறுக்கப்பட்ட வகையில் உண்பதும் அவசியம். இந்த அறிவுரை அடிக்கடி மீண்டும் மீண்டும் கூறப்படவேண்டும். ஒரேவேளை ஆகாரத்தில் அநேகவிதமான உணவுவகைகளை உண்பது ஆரோக்கிய சீர்திருத்த கொள்கையோடு இணக்கமாக இல்லை. அந்த வேலையின் சன்மார்க்கப் பகுதி, ஆத்துமாவிற்கான ஆகாரத்தை கொடுப்பது, அதுதான் மற்ற எதையும்விட அதிக முக்கியமானது என்பதை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது.

சாதகமான இடங்களில் நிற்பதற்கு அவர்களை தகுதிப்படுத்துகிற பயிற்சியை அறிவுள்ள ஆசிரியர்களிடமிருந்து பெறுவதற்கேதுவாக, பட்டணங்களைவிட்டு தள்ளியிருக்கிற பள்ளிகளில் பயிலுமாறு வாலிப ஆண்களும் வாலிப பெண்களும் ஊக்கப்படுத்தப்படவேண்டும். உலகத்தாருக்காக உணவை தயாரித்து வழங்கமாத்திரமே வேலையாட்களாக பணிபுரியும்போது, நம்முடைய வாலிப மக்கள் எவ்வாறு ஆவிக்குரிய விதத்தில் முன்னேறமுடியும். ஆரோக்கியம்கூட இல்லாத உணவுகளை தயாரிப்பதில் அவர்கள் பலவேளைகளில் தேவையில்லாத வேலைகளை செய்கிறார்கள். அப்படிப்பட்ட கல்வியோடு திருப்தியாக இளைப்பாறும்படி நம்முடைய வாலிபர்கள் ஊக்கப்படுத்தப்படலாமா?

இப்போது நடத்தப்படும்விதத்தில் உணவகங்களை நடத்த ஆண்டவருடைய தெரிந்துகொள்ளப்பட்ட பிள்ளைகள் தங்களுடைய பெலத்தைச் செலவழிக்கவேண்டும் என்று அவர் திட்டம்பண்ணவில்லை. அநேக ஆரோக்கியமில்லாத குழப்பமான உணவுச் சேர்க்கைகள் உணவு சீர்திருத்தத்தை உணவுச் சீர்குலைவாக மாற்ற ஏதுவாகிறது.—Letter 271, 1905. Written September 27, 1905.

## லோமா லிண்டா பேக்கரி

அன்புள்ள பர்டன் சகோதரரே

வர்த்தகம் செய்வதின்வழியாக விநியோகிப்பதற்கென்று மிக அதிக அளவிலான ஆரோக்கிய உணவுகளை லோமா லிண்டாவில் தயாரிக்க நாம் திட்டஞ்செய்வது நமக்கு தவறாக இருக்கும் என்று ஆண்டவர் எனக்கு அறிவுறுத்தினார். நிகழ்கால சத்தியத்தைப் பெற்றிராத அநேகருடைய

மனங்களில் நல்ல பதிவுகளை உண்டாக்க, தேவனால் விசேஷமாக நியமிக்கப்பட்ட இடம் லோமா லிண்டா. ஒரு ஆழமான ஆவிக்குரிய பதிப்பை உண்டாக்குகிறதற்கேதுவாக இந்த இடத்தில் நடைபெறும் ஒவ்வொரு வேலையும், செய்யும் ஒவ்வொரு அசைவும், நிகழ்கால சத்தியத்தினுடைய பரிசுத்த குணத்தோடு முழுவதும் இணக்கமாக இருக்கவேண்டும்.

லோமா லிண்டாவிலுள்ள ஸ்தாபனத்துடன் தொடர்புடைய அனைத்தும் கூடுமானவரை வணிகமயத்தோடு கலவாதிருக்கவேண்டும். உண்டாக்க வேண்டுமென்று நீங்கள் பிரயாசப்பட்டுக்கொண்டிருக்கிற சாதகமாக செல்வாக்குகளை எவ்விதத்திலாவது குறைத்துப்போடுகிற எதுவும் உள்ளே வரும்படி அனுமதிக்கப்படக்கூடாது. நித்திய உண்மைகளில் நாம் மெய்யான விசுவாசத்தை வெளிக்காட்டினால், இது மற்றவர்களின் மனங்களில் வெகுதூரம் செல்லுகின்ற பாதிப்பை ஏற்படுத்தும். ஆத்துமாக்களை இரட்சிக்கும் நம்முடைய முயற்சிகளை தடுக்க ஒன்றையும் நாம் அனுமதிக்கக்கூடாது. அவிசுவாசிகளை தங்களுடைய கடமைகளைக்குறித்த உணர்வுகளுக்கு எழுப்புகிற பதிப்புகளை நாம் வைத்துச்செல்லவேண்டும் என்று தேவன் கேட்கிறார். தெளிவான பகுத்தறிவு தேவைப்படுகிறவர்களுக்கு உதவும்படி நாம் குரலையும் எழுதுகோலையும் உபயோகிப்போமாக.

“நித்திய ஜீவனை சுதந்தரிக்கிறதற்கு நான் என்ன செய்யவேண்டும்? என்று அநேகர் இப்பொழுது விசாரிக்கிறார்கள். ஆரோக்கிய உணவுகளை வணிக இலாபத்திற்காக தயாரிக்கிற நம்முடைய சுகாதார மையங்களோடு தொடர்புபடுத்தி, திருப்தியாக இந்த கேள்விக்கு பதில்கொடுக்கமுடியாது. நாம் தேவனுடைய கிருபையினால் பாதுகாக்கப்பட்டு வழிநடத்தப்படுகிறோம் என்கிற, ஆண்டவருடைய மகிமையை நாம் தொடர்ச்சியாக நம்முன் வைத்திருக்கிறோம் என்கிற எண்ணப்பதிப்புகளை நம்முடைய வியாதியஸ்தர்களின் மனங்களில் நம்முடைய மாதிரியினால் வைக்கவேண்டும்.”

ஒரு கிறிஸ்தவனுக்கு செல்வாக்கை கொடுக்கிறது பதவியல்ல, செல்வம் அல்ல, படிப்பு அல்ல, வல்லமை அல்ல. மாறாக, கிறிஸ்துவினுடைய வேலைக்கு அர்ப்பணிக்கப்பட்ட இருதயமும், விருப்பமான மனதுமே. தேவனுடைய சேவையில் ஒவ்வொருவருக்கும் ஒரு இடம் உண்டு. தனக்கு நியமிக்கப்பட்ட இடத்தை நிரப்புவதில் ஒவ்வொருவரும் திருப்தியடையும்போது, அவர் மகிமைப்படுத்தப்படுகிறார். தம்முடைய ஊழியக்காரர்களுக்கு ஒவ்வொரு கடமைக்கும் போதுமான கிருபையை அவர் அளிக்கிறார். அவர்கள் சேவை செய்யும் இடம் எவ்வளவு தாழ்மையானதாக இருந்தாலும், தாங்கள் கிறிஸ்தவ ஆண்களும் கிறிஸ்தவ பெண்களும் என்று அவர்கள் அவருடைய கிருபையினாலே தங்களை வெளிப்படுத்தலாம்.

இராக்கால தரிசனங்களில், லோமா லிண்டாவில் ஒரு பேக்கரியை நிறுவவேண்டுமென்ற ஆலோசனையோடு தொடர்புபடுத்தி இந்தக் கொள்கைகள் எனக்கு கொடுக்கப்பட்டன. (குறிப்பு: இந்த கடிதம் எழுதப்பட்ட சமயத்தில், சுகாதார மையத்தின் முதன்மை கட்டிடத்தின் அருகிலே ஆரோக்கிய உணவு தொழிற்சாலையை ஸ்தாபிக்கும்படியான திட்டங்கள் செய்யப்பட்டுக்கொண்டிருந்தன.) அநேக உணவுகள் தயாரிக்கப்பட்ட ஒரு மிகப் பெரிய கட்டடம் எனக்குக் காண்பிக்கப்பட்டது.அந்த பேக்கரியின் அருகில் சில சிறிய கட்டடங்களும் இருந்தன. அங்கே நின்றிருந்தபோது, அங்கு நடந்துகொண்டிருந்த வேலையைக்குறித்த உரத்த சர்ச்சைகளின் சத்தத்தை நான் கேட்டேன். தொழிலாளர்களிடையே இணக்கமில்லாதிருந்தது. குழப்பம் வந்தது.

பின்னர் சகோதரர் பர்டன் நெருங்கியதைக் கண்டேன். தொழிலாளிகளோடு நியாயம் பேசி, ஒரு இணக்கத்திற்குள் கொண்டுவர அவர் முயற்சித்தபோது, அவர் முகத்தில் ஒரு கவலை மற்றும் துயரத்தின் தோற்றம் காணப்பட்டது. இந்தக் காட்சி மீண்டும் மீண்டும் வந்தது. சுகாதார மையத்தின் மேலாளர் என்கிற அவருடைய முறையான வேலையிலிருந்து, மாறுபாடுகளை சீரமைப்பதற்காக சகோதரர் பர்டன் பலவேளைகளில் வரவழைக்கப்பட்டார். அவர் மிக அதிகமான பாரத்தை சுமந்துகொண்டிருந்தார். கவலையானவராகவும், குழப்பமடைந்தவராகவும் காணப்பட்டார்.

பின்பு சுகாதார மையத்தின் அழகான மைதானத்தில் வியாதியஸ்தர்கள் நின்றுகொண்டிருப்பதை நான் கண்டேன். தொழிலாளர்களுக்கிடையே இருந்த சர்ச்சைகளை அவர்கள் கேட்டிருந்தார்கள். நோயாளிகள் என்னைப் பார்க்கவில்லை. ஆனால் என்னால் அவர்களை பார்க்கவும் கேட்கவும் முடிந்தது. அவர்களுடைய குறிப்புகள் என் காதுகளுக்குக் கொண்டுவரப்பட்டது. சுகவீனப்பட்டவர்களை கவனிக்கும் ஸ்தாபனத்திற்கு இவ்வளவு அருகாமையில் இந்த அழகான மைதானத்தில் ஒரு உணவுத் தொழிற்சாலை ஸ்தாபிக்கப்பட்டதைக்குறித்த வருத்தமான வார்த்தைகளை அவர்கள் வெளிப்படுத்தினார்கள். சிலர் வெறுப்படைந்தார்கள். மிகவும் சாதகமற்ற கருத்துப்பதிப்பு ஏற்படுத்தப்பட்டது. நான் எவ்வளவு வருத்தம் அடைந்தேன்! கணிசமான தொகை தேவைப்படக்கூடிய குளியல் அறைகள் கட்டுவதற்காக செலவுபண்ணப்பட்டிருக்கவேண்டிய பணத்தை இந்த எல்லா கட்டடங்களும் எடுத்துக்கொண்டன.

பின்னர் அந்தக் காட்சியில் **ஒருவர்** தோன்றினார். அவர்: “குறிப்பிட்ட திட்டங்களை செயல்படுத்துவதால் ஏற்படும் விளைவுகளை நீ காணும்படியாக இவையனைத்தும் ஒரு பொருட்பாடமாக உன்முன் கடந்துசெல்ல

அனுமதிக்கப்பட்டது. தங்களிடம் வருபவர்களுடைய கவனத்தை சுவிசேஷ சத்தியத்திற்கு அழைப்பதன்வழியாக சுகாதார மையம் அவர்களுக்கு உதவிசெய்யவேண்டும். செய்யப்படவேண்டிய அதிமுக்கிய வேலையின் இடத்தை வியாபாரம் எடுத்துக்கொள்ளக்கூடாது. இந்த அழகான இடம் தேவனுடைய ஏற்பாட்டின்படி நமக்கு வந்தது. இது, சுகவீனப்பட்டவர்களை நாம் அழைக்கவும், சரீரப்பிரகாரமாக அவர்கள் அதிகமாக ஆசீர்வதிக்கப்படவும், நிகழ்கால சத்தியத்தின் சான்றுகளையும், நம்முடைய விசுவாசத்தின் காரணங்களையும் அவர்கள் கேட்கவும்கூடிய இடமாக, இளைப்பாறக்கூடிய, விரும்பத்தக்க, ஆரோக்கியமுள்ள ஓய்வுஸ்தலமாக வைக்கப்படவேண்டும்" என்றார்.

பின்னர் அந்த முழு காட்சியும் மாறியது. நாம் திட்டஞ்செய்த இடத்தில் பேக்கரி கட்டடம் இல்லை. மாறாக, இரயில் பாதையை நோக்கின வழியில் சுகாதார மைய கட்டடத்திற்கு சற்று தொலைவில் இருந்தது. அது ஒரு சிறிய கட்டடமாக இருந்தது. அங்கே சிறிய வேலையே செய்யப்பட்டது. வணிக எண்ணம் மறந்துபோனது. அது இருந்த இடத்தில் வலிமையான ஆவிக்குரிய செல்வாக்கு நிலவியது. உதவி தேவைப்பட்ட நேரங்களில் தகுதியான உதவியாளர் சகோதரர் ஹேன்சன்–க்கு கொடுக்கப்பட்டார். இந்த சிறிய பேக்கரியின் மேலாண்மை, சகோதரர் பர்டனுக்கும் அவரது மனைவிக்கும் பாரமான பொறுப்பைக் கொண்டுவரவில்லை. தாங்கள் பார்த்தவைகளால் நோயாளிகளும் சாதகமாக உணர்த்தப்பட்டனர்....

லோமா லிண்டா ஒரு சுகாதார மையமாக மாத்திரமல்ல, ஒரு கல்விகற்கும் மையமாகவும் ஆகவேண்டும். இந்த இடத்தை பெற்றிருப்பதுடன், இந்த நிறுவனத்தின் வேலையை கற்பிக்கும் தன்மைகொண்டதாக மாற்றும் கனமான பொறுப்பும் சேர்ந்து வருகிறது. லோமா லிண்டாவில் நிறுவப்படப்போகிற பள்ளிக்கூடம், சத்தியத்தின் சுதந்தரத்தோடு நிற்கவேண்டும்.

சுற்றியிருக்கிற பட்டணங்களுக்கு குறிப்பிட்ட அளவு ஆரோக்கிய உணவுகளை வழங்கும் ஒரு வேலை லோமா லிண்டாவில் நாம் செய்யவேண்டியதிருக்கும். ஆனால் மிகப் பெரிய உணவுத் தொழிற்சாலையை நிறுவதினால் உங்களுடைய எதிர்பார்ப்புகளில் நீங்கள் ஏமாந்துபோவீர்கள் என்பது எனக்குக் காண்பிக்கப்பட்டது. அதனுடைய மேலாண்மையோடு தொடர்புடைய செல்வாக்குகள் மக்கள்மேல் சாதகமான உணர்வுகளை ஏற்படுத்தாது. நாம் ஆண்டவருடன் ஒத்துழைத்து, அவர் வகுத்துக்கொடுக்கிற திட்டங்களைப் பின்பற்றினால், மனித மனங்களில் முறையான உணர்ச்சிகளை ஏற்படுத்த அவரால் முடியும்.

தெற்கு கலிபோர்னியாவிற்கு உணவு வழங்குமளவு ஒரு பெரிய உணவுத் தொழிலில், வணிகமயமாக்குவதை தவிர்ப்பது கடினமாகிவிடும் என்று எனக்கு வெளிச்சம் கொடுக்கப்பட்டது. குழப்பமான காரியங்கள் மிக கவனமாக சந்திக்கப்படாவிட்டால் வரவைக் காட்டிலும் அதிகமான செலவு உண்டாகும். தொழிலை வெற்றியுள்ளதாக்குவதற்கு தேவைப்படும் நேரத்தை உங்களால் செலவுசெய்ய முடியாது.

உயரமான தளத்திற்கு ஏறும்படி ஆண்டவர் நம்மை அழைக்கிறார். நாம் அறிக்கையிடுகிற அடிப்படைப் போதனைகளுக்கு சாதகமாக, தீர்மானமான ஒரு செல்வாக்கை நம்முடைய உதாரணம் ஏற்படுத்தவேண்டும். வேதவாக்கிய போதனைகளை நெருக்கமாக பற்றிக்கொள்ளுவோம். அந்த வார்த்தையை நம்முடைய ஆலோசகராக்குவோம். நம்முடைய அன்றாட வாழ்க்கையில் அந்த வார்த்தையின் சத்தியம் கைக்கொள்ளப்படுமானால், அது நம்முடைய ஆத்துமாவை தூய்மையும், சுத்திகரிக்கப்பட்டதும், நேர்மையும், உயர்ந்ததுமாக வைத்துக்கொள்ளும். சத்தியத்தின் ஒளியில் நடக்கும்போது, தேவன்மேலுள்ள தொடர்ச்சியான அன்பினாலும், பயத்தினாலும் சுயம் மறைக்கப்படும். உலகத்தின்முன்பாக, சத்தியம் மேன்மையானதாக மாறவேண்டும். ஏனெனில் அது வார்த்தையிலும் ஆவியிலும் குணத்திலும் தேவனை வெளிக்காட்டுகிறது.

"தெளிவான, உணர்த்தும் வல்லமையோடு பிரகாசிக்கிற வெளிச்சத்தினால் உண்டாக்கப்பட்ட செல்வாக்கே, சத்தியத்தை விசுவாசிப்பதாக உரிமைபாராட்டும் ஒவ்வொரு ஆத்துமாவிலிருந்தும் தொடர்ந்து வெளியே செல்லும் செல்வாக்காக இருக்கவேண்டும். வார்த்தையிலும், விசுவாசத்திலும், செய்கையிலும் நீங்கள் சத்தியத்தை உயர்த்தவேண்டுமென்று ஆண்டவர் விரும்புகிறார். உங்களோடு தொடர்புள்ளவர்கள் மென்மையிலும், தயவிலும் சுத்தமான பேச்சிலும் குறைவானவர்களாக இருக்க அனுமதிக்கப்படவே கூடாது. இருதயம் எப்போதும் தேவனுக்கு கீழ்ப்படிந்ததாக இருக்கவேண்டும். உங்களுடைய பரலோக உதவியாளரைப் பற்றிக்கொள்ளுங்கள்..." என்ற வார்த்தைகள் என்னுடைய **போதகரால்** பேசப்பட்டன.

அறிவின் குறைவினால் அநேகர் இப்போது அழிந்து கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்து இயேசுவில் இருந்தவண்ணமாக சத்தியத்தை அறிவிப்பதில் நம்முடைய மனதையும் ஆத்துமாவையும் குரலையும் நாம் கொடுக்கமாட்டோமா? தேவனிடம் பலம் இருக்கிறது என்று அவிசுவாசிகளுக்குக் காண்பிக்கவேண்டுமென்று நான் ஒவ்வொரு தொழிலாளிக்கும் சொல்ல விரும்புகிறேன். "உன் தேவனை சந்திக்கும்படி ஆயத்தப்படு!" என்கிற எச்சரிப்பின் வார்த்தைகளால், தேவைப்படுகிறதைக்குறித்த உங்களுடைய

எண்ணங்களை பகிர்ந்துகொள்ளுங்கள். தண்ணீருள்ள இடங்களிலெல்லாம் சத்திய விதைகளை விதையுங்கள். காவற்காரரை எழுப்புங்கள். அவர்களோடு சேர்ந்து தேவ வார்த்தையை வல்லமையோடு எடுத்துச்செல்லுங்கள். “சத்தமிட்டுக் கூப்பிடு; அடக்கிக்கொள்ளாதே; எக்காளத்தைப்போல் உன் சத்தத்தை உயர்த்தி, என் ஜனத்துக்கு அவர்கள் மீறுதலையும், யாக்கோபின் வம்சத்தாருக்கு அவர்கள் பாவங்களையும் தெரிவி.” உங்களுடைய அனுபவத்தின் அதிகரிப்பு, தேவன்மேல் உங்களுக்கிருக்கும் தனிப்பட்ட விசுவாசத்திற்கும் நம்பிக்கைக்கும் ஏற்ற விகிதத்தில் இருக்கும்.

மக்களுக்கு ஆத்துமாக்களை இரட்சிக்கும் சத்தியங்களை கொடுக்கும் மாபெரும் மகத்தான வேலையில் ஈடுபடும்படி உழவுத்தொழிலிலிருந்தும், வாழ்க்கையின் சாதாரண வேலையிலிருந்தும் எடுக்கப்பட்ட மனித கருவிகளினால், அநேகர், அநேகர் மாற்றப்பட இருக்கிறார்கள்.

அனைத்து வகுப்பினரும் சந்திக்கப்படவிருக்கிறார்கள். ஆயிரக் கணக்கானவர்களை போஷிக்கிற சுகாதார உணவகங்களில் வேலை செய்யும்படி அழைக்கப்பட்டிருக்கிற ஜீவ அப்பம் கொடுக்கப்படாதவர்கள், ஆண்டவருடைய வழி எது? என்று வினவவேண்டும். சுகாதார உணவகங்களில் வேலைசெய்கிற சிலர், அங்கிருந்து வெளியேறி, திரளானவர்களுக்கு சுவிசேஷ செய்தியை கொடுக்கும் மகத்தான வேலையைச் செய்யும்படி தங்களை கொடுக்கவேண்டும். இந்தக் காலத்திற்குரிய சத்தியம் தங்களுடைய சொந்த இருதயங்களில் தேவனுடைய பரிசுத்த ஆவியானவரால் நடப்பட்டிருக்கிறதை அவர்கள் கட்டாயம் உறுதிபடுத்திக்கொள்ளவேண்டும். பின்னர் அனைத்துப் பாவங்களிலிருந்தும் சுத்தம்பண்ணப்பட்ட மனதோடு, அனைத்துவித கற்பனையும் ஆபத்துமான ஏமாற்றுகளிலிருந்து.... முழுமையாக தூற்றப்பட்ட சுத்தமான தீவனத்தினால் தேவனுடைய மந்தையை போஷிக்க அவர்களுக்கு முடியும்.

செய்யப்படவேண்டிய மிகப் பெரிய வேலை இருக்கிறது. அநேக நாடுகளில் சுகாதார மையங்கள் அமைக்கப்படவேண்டும். செயல்பட்டுக்கொண்டிருக்கிற சுகாதார மையங்களுக்கு வசதிகள் சேர்க்கப்படும்போது, சேர்க்கப்படுகிறவைகள் முழுமையாகவும் உறுதியாகவும் கட்டப்படக்கடவது. ஆனாலும் துவக்கத்திலேயே மிக அதிக பணம் செலவு செய்யப்படக்கூடாது....

அநேக இடங்களில் ஒரு வேலையைச் செய்யும்படியாக ஆண்டவர் நம்மை அழைக்கிறார். நம்முடைய வேலையை கடனில் மூழ்கடித்து விடாது நடத்தப்படுகிற சுகாதார மையங்கள் நமக்கு இருக்கும். ஞானமுள்ளவர் களுக்கு ஒரு வார்த்தை போதுமானதாயிருக்கும். மிக விலையுயர்ந்த

வசதிகளில் முதலீடு செய்யவேண்டும் என்று ஒருவரும் நினைக்கவேண்டாம். வெற்றிகரமாக வேலைசெய்கிற அநேக தாழ்மையான வழிகள் இருக்கிறது. சிகிச்சையளிப்பதற்குத் தேவையான எளிமையான கருவிகளை முதலில் ஏற்பாடு செய்யுங்கள். நீச்சல் குளங்களையும், மற்ற பிற விலையுயர்ந்த வசதிகளையும் ஏற்பாடு செய்யும் செலவுகளுக்கு நாம் இப்போது போகவேண்டியது அவசியமில்லை.—Letter 140, 1906. Written May 6, 1906.

## ஒரு பொய்த்தோற்றமான சலுகை

பசிபிக் கடற்கறைகளில் துகள் உணவுகளைத் தயாரித்து விற்பதைக்குறித்து, காலையில் விடிந்ததிலிருந்து நான் பதினோரு பக்கங்கள் எழுதியிருக்கிறேன். டாக்டர் கெல்லாகும் அவரது சகோதரரும் குறிப்பிட்ட பகுதியில் சோள துகள் உணவுகளை தயாரித்து விற்கும்படியான உரிமையை 45,000 டாலர்களுக்கு விற்க வந்திருக்கிறார்கள். எனக்குக் கொடுக்கப்பட்ட வெளிச்சம்: இந்த சலுகையை நாம் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பதே. எல்லையானாலும் சரி, ஆரோக்கிய உணவுகள் குறித்த அறிவானாலும் சரி, அது டாக்டர் கெல்லாகிற்குச் சொந்தமானது அல்ல. இது ஆண்டவருடைய சொத்து. அதைத் தன்னுடைய சொந்த சொத்தாகவும் கண்டுபிடிப்பாகவும் கையாளுவதற்கும், அதினால் தன்னுடைய சொந்த நன்மையை கணக்குப்போடுவதற்கும்ஏதுவாக அவர் அதை எவரிடமும் கொடுக்கவில்லை. சக மனிதரை நெருக்குவதற்கேதுவாக உபயோகப்படும்படி அது எந்த மனிதனுக்கும் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

“சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், நீங்கள் உண்மையாய் நியாயந்தீர்த்து, அவனவன் தன்தன் சகோதரனுக்குத் தயவும் இரக்கமும் செய்து, விதவையையும் திக்கற்ற பிள்ளையையும் பரதேசியையும் சிறுமையானவனையும் ஒடுக்காமலும், உங்களில் ஒருவனும் தன் சகோதரனுக்கு விரோதமாய்த் தன் இருதயத்தில் தீங்கு நினையாமலும் இருங்கள் என்றார்”—சகரியா 7:9–10.

மல்கியா 3–ம் 4–ம் அதிகாரங்கள் அநேக முக்கியமான பாடங்களை போதிக்கின்றன. அவைகள் மதிப்புள்ள சொற்றொடர்களால் நிறைந்திருக்கின்றன. இந்த அதிகாரங்களை நாம் கவனமாக கருதவேண்டும். ஆண்டவர் குணத்தை எடைபோடுகிறார். பேட்டில் கிரீக்கில் செய்யப்பட்ட வேலையின் ஒவ்வொரு அத்தியாயமும் முதலிலிருந்து கடைசிவரையிலும் பரலோக புத்தகங்களில் பதிக்கப்பட்டுவருகின்றன.

ஆரோக்கிய உணவு தயாரிப்பில் நம்முடைய மக்கள் அதிக பணத்தை முதலீடு செய்யக்கூடாது. ஒரு மனிதனுடைய நன்மைக்காக மாத்திரம்

ஆரோக்கிய உணவுகளைக்குறித்த வெளிச்சம் கொடுக்கப்படவில்லை என்பது மிகத் தெளிவாக தரப்பட்டுள்ளது. இந்தக் காரியத்தில் எனக்கு வெளிச்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த சலுகையை நாம் ஏற்றுக்கொள்ளக்கூடாது. சாதாரண மக்களுடைய உபயோகத்திற்கேற்ப தயாரிக்கப்படவேண்டும் என்று தேவன் விரும்புகிறவிதத்தில் தயாரிக்க அவர் கொடுத்திருக்கிற சொத்துக்களை நம்முடைய மக்கள் உபயோகிக்கலாம். ஆண்டவர் சூரிய ஒளியையும் மழையையும் கொடுத்திருக்கிறார். அவர் பழங்களை வளரச் செய்து, மனித குலத்திற்காக தயாரிக்கப்படக்கூடிய விளைவுகளை பூமி பிறப்பிக்கச் செய்திருக்கிறார். உணவாக உபயோகப்படக்கூடியவைகளை உண்டாக்கும்படி அவருடைய குடும்பத்தார் ஜாக்கிரதையாக நிலத்தை உழவேண்டும் என்கிறார். அவர்கள் விதையை விதைத்து, அது வளரும்போது அதைப் பராமரிக்கவேண்டும். இதுதான் மனிதனுடைய ஆகாரத்திற்காக அவர் செய்திருக்கிற ஏற்பாடு. பூமியின் விளைவிலிருந்து அநேகவிதமான உணவுகளை தயாரிக்கிறதற்கான ஞானத்தையும் சாதுரியத்தையும் அவர் மனிதனுக்குக் கொடுத்திருக்கிறார். தானியங்களும் காய்கறிகளும், பழங்களும் நடப்பட்டு, சாகுபடி செய்யப்படவேண்டும். நிலம் ஆயத்தப்படுத்தப்பட்டு வேலைசெய்யப்படும்போது, பூமி தன்னுடைய பொக்கிஷங்களை விளைவிக்கும்....

சாதாரண மக்களுக்காக எவ்வாறு உணவு தயாரிக்கவேண்டும் என்று ஆண்களும் பெண்களும் போதிக்கப்படவேண்டும். நிறுவப்படுகிற ஒவ்வொரு பள்ளியிலும் இந்த போதனை கொடுக்கப்படவேண்டும். எவ்வாறு சமைப்பது என்றும் எவ்வாறு படிப்பது என்றும் மாணவர்கள் பொறுமையாக கற்றுக்கொடுக்கப்படவேண்டும். அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான தொழில்களை போதிக்க மிகச்சிறந்த முறைகள் உபயோகிக்கப்படவேண்டும். சுகவீனப்பட்டோருக்குச் சிகிச்சை அளிக்கும் எளிய முறைகளைக்குறித்த போதனைகளும் உண்மையாகக் கொடுக்கப்படவேண்டும்.

ஆரோக்கிய சீர்திருத்தத்தில் ஆண்டவர் அவருடைய ஜனமாகிய நமக்கு மாபெரும் அறிவைக் கொடுத்திருக்கிறார். இந்த வேலை மேற்கொண்டு செல்லவேண்டும். ஆனால் இப்போது எடுத்திருப்பதைப்போல உணவுத் தொழில் மிகப் பெரிய இடத்தை எடுத்துக்கொள்ளத் தொடராதபடி தேவன் காப்பாராக. ஆவிக்குரிய வாஞ்சைகள் இரண்டாவது இடத்தை எடுத்துக்கொள்ளுவதற்கேதுவாக, மதிப்புள்ள உழைப்பாளிகளின் திறமைகளும் தாலந்துகளும் உணவுகளை உற்பத்தி செய்வதிலேயே முடங்கிவிடக்கூடாது. சரியான அடித்தளத்தின்மேல் வைக்கப்படவேண்டிய காரியம் இது. அப்படியில்லாதபோது, ஆத்தும ஆதாயம் செய்யும் நம்முடைய

வேலையில் இது மாபெரும் தடங்கலாக வந்து சேரும்.—Letter 354, 1906. Written September 19, 1906.

*****

மெய்யான சேவையின் சாராம்சத்தை விட்டுவிட்ட எந்த வேலையும் உலகத்தாரிடம் ஒப்படைக்கப்படுவதாக. தேவனோடு இணைந்து செய்யும் வேலைகளிலேயே தேவனுடைய மக்களின் சொத்துக்கள் செலவிடப்படுவதாக. கிறிஸ்துவின் சித்தமே நம்முடைய சித்தமாக இருக்கவேண்டும். அவரோடு இணைந்திருப்பது என்றால் செயலுக்கான சுதந்திரம் பெற்றிருப்பதாகும். அதாவது, எதை நிறைவேற்றும்படி அவர் தம்முடைய ஜீவனைக் கொடுத்தாரோ, அந்த வேலையில் ஈடுபடுவதாகும். நமக்கும் இந்த வேலைக்கும் குறுக்காக வரும் எதுவும் மெய்யான முன்னேற்றத்தை தடுப்பவையாக நிராகரிக்கப்படவேண்டும்.—MS 119, 1902. Written October 8, 1902.

## உணவு உற்பத்தியில்

## பெரிய முதலீடு செய்வதற்கெதிரான எச்சரிப்பு

இரவு நேரத்தில் சில காட்சிகளும் ஆரோக்கிய உணவுகுறித்த சில அறிவுரைகளும் எனக்குக் கொடுக்கப்பட்டது. பின்னலாயிருக்கிற கொத்தான வேர்கொண்ட சில செடிகளை கொஞ்சம் மனிதர்கள் பரிசோதித்துக்கொண்டிருந்தனர். இந்த செடிகளில் சிலவற்றின் வேர்கள் மிக நீளமாக இருந்தன. மற்றவைகள் குறுகிய வேர்களைக் கொண்டிருந்தன. நீளமான வேர் கொண்டவைகள் ஆரோக்கியமுள்ளவைகளாகவும் நம்பிக்கையூட்டுவனவாகவும் இருந்தன. இந்த செடிகளிலிருந்து அதிக பலன் வரும் என்கிறதில் மனிதர்கள் களிகூர்ந்திருந்தனர். மிகஅதிக பலன் தரும் என்று தான் கருதினதை எடுத்துக்கொள்ளும் ஆவலில் ஒவ்வொருவரும் ஆர்வமாயிருப்பதுபோல தோன்றியது. அவைகளைக்குறித்து சண்டையும் வாதங்களும் இருந்தன.

அவர்களுக்கு நடுவே அதிகாரமுடைய **ஒருவர்** தோன்றி: இந்த நீளமான வேர்கள் உங்களுக்குத் தேவையில்லை” என்றார்.

“ஏன் எங்களுக்குத் தேவையில்லை?” என்று சிலர் கேட்டனர்.

“ஏனென்றால் கனிகொடுக்கும் கிளைகளோடு இணைந்திருக்கிற செடிகளாலேயே ஆண்டவர் கனப்படுத்தப்படுகிறார். நீளமான இந்த வேர்கள் நீங்கள் விரும்புகிற அதிகமான பலனைக் கொடுக்கும் என்று மிக அதிகமாக

தவறாக யூகித்துவிட்டீர்கள். அவைகளை சம்பாதிக்கும்படி செய்கிற அதிக பணம், குழப்பத்தில் முடியும். மேலும் இப்போது நீங்கள் உணர்ந்திராத கஷ்டங்களில் உங்களைக் கொண்டுசெல்லும்" என்றார்.

"குறுகிய வேர்களுடைய இந்த செடிகளையே நீங்கள் தெரிந்தெடுக்கவேண்டும். அவைகளின் சாகுபடிக்கு அதிக செலவு ஆகாது. மேலும் குறுகிய காலத்திலேயே அவைகள் தேவனுடைய மகிமைக்காக கனி கொடுக்கும்" என்றார்.

நீளமான சிக்கல்கள்கொண்ட செடிகள், குறிப்பிட்ட உணவு நிறுவனங்களைக் குறித்ததாக எனக்குக் காட்டப்பட்டது. இவை, நல்ல பலன் தருபவைபோலத் தோன்றினாலும், மனிதன்மேலிருக்கும் தேவனுடைய மீட்கும் அன்பை அறிவிப்பதில் குறைவான பலனையே கொடுக்கும். அதிக முதலீட்டை இந்த நிறுவனங்கள் குறித்திருந்தாலும், ஆண்டவருடைய வேலையை முன்கொண்டு செல்வதில் அவருடைய முறையோடு இணக்கமாக இல்லாதிருக்கின்றன. அவை சிக்கல்களில் முடியும்.

குறுகிய வேர்களைக்கொண்ட செடிகள் மிக அதிக செலவுபிடிக்காத ஆனால், சுவிசேஷத்தை முன்கொண்டுசெல்வதில் விரைவான பலனைக் கொடுத்து, அநேக ஆத்துமாக்களின் இரட்சிப்பில் முடிவடையும் நிறுவனங்களைக் குறித்தன.

அவருடைய மக்களாக நமக்கு உலகின் சகல பகுதிகளிலும் இராஜ்யத்தின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் வேலையை தேவன் கொடுத்திருக்கிறார். விலை அதிகமான உணவுகளைத் தயாரிப்பதில் நம்முடைய பணமும் திறமைகளும் கட்டப்படக்கூடாது. நம்முடைய வேலையெல்லாம்: "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என்கிற சத்தியத்தை அறிவிப்பதே.

## கற்பிப்பதே நம்முடைய முதன்மையான வேலை

நம் சொத்துக்களை வெகுவாக உணவு நிறுவனங்களில் கட்டிப்போடக்கூடாது என்று அறிவிக்க நான் அழைக்கப்பட்டேன். நம்முடைய உணவு விற்பனைக்கூடங்களும், நம்முடைய உணவகங்களும் மிக அதிகமான பலனைக் கொடுக்கிற மரங்களல்ல. ஊழியர்களுக்கிடையிலே ஒரு மாற்றும் வல்லமை இப்போது தேவைப்படுகிறது. நம்முடைய உணவு வேலையில் ஆரோக்கிய சீர்திருத்தத்தின் எளிமையை நாம் ஆராயவேண்டும். அதிக முதலீட்டை உள்ளடக்கிய உணவுகளை உற்பத்திசெய்து விற்பதில்

நம்முடைய முழு நேரத்தையும் செலவிடுவதைவிடுத்து, தங்களுடைய வீடுகளிலேயே எளிய ஆரோக்கியமான உணவுகளைத் தயாரிப்பதை கற்றுக்கொடுக்கும் வேலையில் நாம் நம்முடைய சக்திகளை செலவுசெய்தால், மேன்மையான விளைவுகள் காணப்படும். உற்பத்திபண்ணப்பட்டிருக்கிற ஆரோக்கிய உணவுகளை அநேகர் வாங்கமுடியாது இருக்கிறார்கள். நிலத்தின் எளிய உணவுப் பொருட்களை ஆரோக்கியமான விதத்தில் எவ்வாறு பயன்படுத்துவது என்பதை இவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதின்வழியாக மெய்யான கிறிஸ்தவ நன்மையின் ஆவியை நாம் வெளிக்காட்டலாம்.

கடந்த இரவின்போது, நம்முடைய சகோதரருக்கான இந்த அறிவுரையை நான் பெற்றேன்: உங்கள் பணத்தை வைத்திருங்கள். விலை மிகக் குறைவான, சத்தானவிதத்தில் தயாரிக்கப்படுமானால், எல்லாத் தேவையையும் சந்திக்கக்கூடிய உணவுகளில் அவைகளை செலவிடுங்கள். நம்முடைய மக்களிடம்: வஞ்சிக்கப்படாதிருங்கள்; ஆசைப்பட்டு ஆபத்தில் சிக்கிக்கொள்ளாதிருங்கள். இவைகளுடைய அற்புதமான சாத்தியங்களை யூகித்துக்கொள்ளுபவர்களிடம் கூறாமலுமிருங்கள்.

எச்சரிக்கும் என் சத்தத்தை உயர்த்தும்படி ஆண்டவர் என்னை அழைக்கிறார். இவைகள் இல்லாமலேயே இருக்கலாம் என்று இருக்கிறவைகளில் ஆண்டவருடைய பணத்தை எவ்வாறு முதலீடு செய்கிறீர்கள் என்பதைக்குறித்து நீங்கள் ஜாக்கிரதையாயிருங்கள். பழங்கள் மற்றும் தானியங்களிலிருந்து விலைகுறைவான தயாரிப்புகளை செய்ய முயற்சி செய்யுங்கள். நம்முடைய தேவைகளைச் சந்திக்கும்படி இவைகளெல்லாம் தேவனால் நமக்கு சுதந்தரமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. விலை அதிகமுள்ள தயாரிப்புகளை உபயோகிப்பதினால் நமக்கு ஆரோக்கியம் காப்பீடு செய்யப்படவில்லை. பழங்கள், தானியங்கள் மற்றும் காய்கறிகளினால் தயாரிக்கப்படும் எளிய உணவுகளை உபயோகிக்கும்போதே நல்ல ஆரோக்கியத்தையும் பெற்றிருக்கலாம்.

மூன்றாம் தூதனுடைய தூதின் ஒவ்வொரு குணமும் உலகத்தின் எல்லா பகுதிகளிலும் அறிவிக்கப்படவேண்டும். அநேகர் உணர்ந்திருப்பதைவிடவும் இது மாபெரும் வேலையாக இருக்கிறது. நம்முடைய மிஷனரி நிறுவனங்கள் தான் இந்தக் காலத்தில் நம்முடைய ஒன்றிணைந்திருக்கிற கவனத்தைக் கோருகிற மிகப்பெரிய பொருள். “உலகமெங்கும்போய் சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.” இந்த வேலையில் நாம் எளிமையை கற்றுக்கொள்ளவேண்டும்.

இந்தச் செய்தி ஒரு பரிசோதிக்கும் செய்தி. உண்மையான இருதயத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்படும்போது, உலகத்தினுடைய அனைத்து

பாவங்களுக்கும் துயரங்களுக்கும் இது ஒரு மாற்று மருந்து என்று நிரூபிக்கும். எந்தவித காலநிலையும், வறுமையும், அறியாமை அல்லது தப்பெண்ணமும் இந்த ஆற்றலை தடுக்கவோ அல்லது மனித இனத்தின் தேவைகளுக்குப் பொருந்துகின்ற இதன் தன்மையை குறைக்கவோ முடியாது.

கிறிஸ்துவின் சீடர்களுடைய வேலை, மாபெரும் சுவிசேஷ செய்தியை அறிவிப்பதுவே! சிலர் இதை ஒருவிதத்தில் செய்வார்கள். மற்றவர்கள், ஆண்டவர் தங்களை அழைத்து தனிப்பட்டவிதத்தில் நடத்துகிறதற்கேற்ப இந்த வேலையின் மற்றொரு கிளையில் உழைப்பார்கள். அனைவருக்கும் ஒரேவிதமான வேலை இருக்கவில்லை. ஆனால் அனைவரும் தங்கள் முயற்சிகளில் ஒன்றுபடலாம்.

ஜீவனுள்ள தேவனின் வார்த்தை உலகம் முழுவதும் அறிவிக்கப்படவிருக்கிறது. சுவிசேஷம் தேவனுடைய ஆவியின் நடைமுறை வெளிப்பாடுகளோடு மாபெரும் வல்லமையுடன் முன்செல்லவிருக்கிறது. நம்முடைய ஊழியர்கள் தங்களை தம்முடைய வேலைக்கு அழைத்த தேவனுடைய நோக்கங்களைச் செயல்படுத்தும் உயிருள்ள முகவர்களாக மாறவேண்டும். மகிமையான சுவிசேஷத்தின் வார்த்தைகள் தெய்வீக புரிந்துகொள்ளுதலோடு பிரசங்கிக்கப்படவேண்டும். ஜீவனுள்ள குரல்களாலும், தயவுள்ள உருக்கமான செயல்களாலும் சுவிசேஷத்தின் கொள்கைகளை நாம் வாழ்ந்து காட்டவேண்டும். சத்தியத்தை போதிக்கும் எளிமையான செயல்விளக்கமான முறைகள்தான் குறுகிய வேர்களாக எடுத்துக்காட்டப்பட்டது.

அறியாமையிலுள்ளவர்களுக்கும், வியாதியஸ்தருக்கும், பசியிலிருப்போருக்கும் உதவியற்றறோருக்கும் உதவுகிற அன்பின் கிரியைகளால் சத்தியம் முன்கொண்டுசெல்லப்படலாம். ஆனாலும் நம்முடைய வேலை ஒதுக்கப்பட்டோருடன் மாத்திரம் கட்டப்பட்டுவிடக்கூடாது. வழிகளிலும் சந்துகளிலும்கூட முழுமையாக வேலை செய்யப்படவேண்டும்.—MS 75, 1906. Written September 1906.

## ஆரோக்கிய உணவு வேலையின் இலக்கு

ஆரோக்கிய உணவு வேலையும் சுகாதார உணவகமும் நிறுவப்படவேண்டிய அவசியம் இருந்தது. அவைகள் நல்லவிதமாக நிறுவப்பட்டன. ஆனால் அவைகள் வெறுமனே வணிக நிறுவனங்களாகி விடக்கூடாது. அவைகள் பொருட்பாடங்களாக இருக்கவேண்டும்.

ஐயாயிரம் பேரை போஷித்ததில் கிறிஸ்து தம்முடைய கரங்களிலிருந்து சீஷர்களின் கரங்களுக்கு உணவை அனுப்பினார். இதைக்குறித்து:

“பந்தியிருந்த புருஷர்கள் ஏறக்குறைய ஐயாயிரம்பேராயிருந்தார்கள். இயேசு அந்த அப்பங்களை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, சீஷர்களிடத்தில் கொடுத்தார்; சீஷர்கள் பந்தியிருந்தவர்களுக்குக் கொடுத்தார்கள்” (யோவான் 6:10,11) என்று படிக்கிறோம்.

தேவனுடைய வார்த்தையே இங்கு குறிக்கப்பட்டுள்ளது. சீடர்களின் கைகளால் ஐயாயிரம் பேருக்கு உணவு கொடுத்து போஷித்தது, சுவிசேஷ சத்தியத்தை கொடுப்பதற்கு வழியை ஆயத்தப்படுத்தியது. திரளானவர்களை போஷிப்பது, ஜீவ அப்பத்தினால் பசியுள்ள ஆத்துமாக்களை போஷிப்பதைக் குறிக்கிறது.

மக்களின் பசி அடங்கினபோது, “ஒன்றும் சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்துவையுங்கள்” (யோவான் 6:12) என்கிற வார்த்தை கொடுக்கப்பட்டது.

பின்னர், ஜீவ வார்த்தையை கொடுத்த கிறிஸ்துவின் சரித்திரம் தொடருகிறது. தாம் விரும்பும்போதெல்லாம் லௌகீக உணவை கொடுக்க கிறிஸ்துவால் முடிந்திருந்தபோதும், இதேபோன்ற அற்புதத்தை அவர் அடிக்கடிச் செய்யவில்லை. மக்கள் இந்த அற்புதத்தைக் கண்டபோது: “மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி” (யோவான் 6:14) என்றார்கள். லௌகீக உணவை உண்டதுபோலவே, ஜீவ அப்பத்தை, வார்த்தை என்னும் அப்பத்தை உண்ண ஆயத்தமாயிருப்பார்களா? தவறான போதனைகளால் கெட்டுப்போயிருந்த அவர்களுடைய மனது, நித்திய ஜீவ வார்த்தையை அவ்வளவு ஆயத்தமாக பெற்றுக்கொள்ளாது…

ஆரோக்கிய உணவுத் தொழிலில் ஈடுபடுகிறவர்களுக்குச் சொல்லவேண்டிய அக்கரையுள்ள வார்த்தைகள் என்னிடம் இருக்கிறது. நம்முடைய உணவு விற்பனைக்கூடங்களிலும், உணவகங்களிலும், நம்முடைய உணவு தயாரிப்புகள் கையாளப்படுகிற ஒவ்வொரு காரியத்திலும் முற்றிலும் வேறுபட்ட தன்மை கொண்டுவரப்பட வேண்டும். ஆண்டவருக்குத் தங்களை ஒப்படைக்காதவர்களை சுவிசேஷத்தால் ஒளிப்படுத்தும் ஒரு வழியாக இந்த வேலை கொண்டுசெல்லப்படவேண்டும். இந்த உணவுகளைக் கையாளுபவர்களுக்கு பசியாயிருந்த ஐயாயிரம் பேருக்கு உணவை உண்டாக்கின ஒருவருடைய ஆலோசனை அனுதினமும் தேவைப்படுகிறது. நிதி தொடர்பான எந்த நஷ்டமும் ஏற்படாதவிதத்தில் நம்முடைய உணவு விற்பனைக்கூடங்கள் மற்றும் உணவகங்களின் வேலை கொண்டுசெல்லப்படவேண்டும். இந்த மாதிரியான வேலை பிழைத்திருக்கவேண்டும் என்பதை நாம் மறக்கக்கூடாது. ஆனால் கெடுக்கும் அனைத்து செல்வாக்குகளும் இதிலிருந்து பிடுங்கப்படவேண்டும்.

வெற்றிபெறும் பக்கத்தில் நாம் நிற்கவேண்டும். இந்த வேலையில் தேவனுடைய அன்பு, நியாயம் மற்றும் கிருபையின் கொள்கைகளை நாம் தியாகம்பண்ணவேண்டியதிருந்தால், இதை முன்கொண்டுசெல்வதன் பயன் என்ன? தங்களுடைய ஆவிக்குரிய உணவாகிய தேவ வசனத்தைப் பற்றிக்கொள்ள எந்த ஆத்துமாவும் இதன் செல்வாக்கினால் அறிவூட்டப்பட்டு ஆயத்தப்படுத்தப்படாதபோது, இதை முன்கொண்டுசெல்வதினால் என்ன பயன்? தாங்கள் தொடர்புகொள்ளுகிறவர்களுடைய கவனத்தை பரலோகத்திலிருந்து பிறந்த சத்தியத்தோடுள்ள தொடர்புக்கு அழைக்கவேண்டுமென்று இந்த வேலையோடு இணைக்கப்பட்டுள்ளவர்களுக்கு வலியுறுத்தவேண்டும்.

சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் சத்தியத்தைக்குறித்த அறிவினால் ஆண்கள் மற்றும் பெண்களுடைய மனங்களை ஒளிப்படுத்துகின்ற வார்த்தைகளைப் பேசுவதற்கு நன்கு தகுதியுடைய மனிதர்கள் ஆரோக்கிய உணவு வேலையில் அமர்த்தப்படவேண்டும். எப்போது பேசவேண்டும், எப்போது மௌனமாயிருக்கவேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளுவதற்கு விசேஷமான ஞானம் தேவைப்படுகிறது. ஆவிக்குரிய புரிந்துகொள்ளுதலுக்காக ஒவ்வொரு தொழிலாளியும் அதிகமாக ஜெபிக்கட்டும்.

நிதி ஆதாயம் இரண்டாவதாக இருக்கவேண்டும். மனம் ஆவிக்குரிய தாக்கப்படட்டும், ஜெபிக்கிறதற்கு விழித்திருங்கள். சிலருக்கு இதை ஒப்புக்கொள்ளுவது கடினமாயிருக்கிறது. சுயநலம் அவர்களுடைய செய்கைகளை ஆட்சிசெய்கிறது. மிகவும் அதிகமான உணவுத்தொழில் நம்முடைய வெளிச்சத்தை பிரகாசிக்கச் செய்யும் ஒரு வாசலாக இருக்கிறது. தம்முடைய உதவியை விரும்பும் ஒவ்வொருவருக்கும் உதவ இயேசு காத்துக்கொண்டிருக்கிறார். என் சகோதரரே, தேவனுடைய வல்லமையுள்ள கரத்தின்கீழ் உங்களை தாழ்த்துங்கள். ஜெபிப்பதற்கு விழித்திருந்து, ஜெபத்திற்கான பதிலாக மதிப்பான சந்தர்ப்பங்கள் வரும்போது, அவைகளைப் பற்றிக்கொள்ளுவதற்கேதுவாக வேலை செய்யுங்கள்.

விசுவாசமுள்ள, ஊக்கப்படுத்தும் வார்த்தைகளைப் பேசக்கூடிய மெய்யான, விவேகமான முறை இருக்கிறது. தேவனால் மிக அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்ட பவுல், தன் மார்க்கத்தை தொழிற்சாலைக்குள் கொண்டுவந்தார். நம்முடைய ஊழியக்காரரும் பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப்பட்டு, சத்தியத்தை அறிவிக்கும் தங்கள் முயற்சியில் மிகச்சிறந்த விளைவுகளை இவ்வாறாக அறுவடை செய்யலாம். அப்படிப்பட்ட ஊழியர்கள் செய்யப்பட்டதன் விளைவுகளைக் காணாவிட்டால் திருப்தியடையமாட்டார்கள். "சத்திய விதைகளை விதைப்பதில், செய்யக்கூடிய அனைத்தையும் நான் செய்துவிட்டேனா?" என்று தேவனிடம் அடிக்கடி உண்மையாக கேட்பார்கள்.

வாசிக்கக்கூடிய தகுதியானவைகளை—சத்தியத்தின் சுருக்கங்களையும் குறிப்பான கட்டுரைகளையும்கொண்ட, எளிமையாக ஆயத்தம் செய்யப்பட்ட பிரசுரங்களையும் தாள்களையும் நம்முடைய உணவு விற்பனைக் கூடங்களும் உணவகங்களும் ஏற்பாடு செய்யட்டும். இவ்வாறாக, அதில் வேலை செய்கிறவர்கள், தாங்கள் பேசுகிறவர்களின் மனங்களின்முன் இந்தக் காலத்திற்குரிய சத்தியத்தைக் கொண்டுவரமுடியும். தேவனுடைய ஆவியினால் செயல்படுத்தப்படும்படி மனங்கள் பரிசுத்தமடையவேண்டும். சமயத்திற்கேற்ப பேசும் வார்த்தைகள் ஆத்துமா என்னும் நிலத்தில் போடப்பட்ட விதைகளாக இருக்கும்.

கிறிஸ்தவர்களென்று உரிமைபாராட்டுகிறவர்கள், தங்கள் எஜமானுக்காக தாங்கள் செய்யக்கூடியவைகளில் பாதிகூட செய்வதில்லை. தண்ணீருக்கு அருகிலெல்லாம் சத்திய விதை விதைக்கப்படவேண்டும். நம்முடைய உணவகங்களும் உணவு விற்பனைக்கூடங்களும் மனங்களுக்கு அறிவூட்டும் வழிகளாக இருக்கவேண்டும். தெரிந்தெடுக்கப்பட்ட மிகச் சிறந்தவைகளைக் கொண்ட துண்டு பிரசுரங்களை தொழிலாளர்கள் தங்கள் கைகளில் வைத்திருக்கட்டும். அவைகள் விற்பனையாகவில்லையென்றால், கொடுக்கப்படட்டும். இவ்வாறாக, விதைக்கப்பட்ட விதைகளிலிருந்து நல்ல விளைவுகள் காணப்படும்.

இயற்கையாக விளைகிறவைகளை ஆரோக்கிய உணவில் உபயோகிக்க முயற்சிகள் எடுக்கப்படவேண்டும். இந்த வழியில் லோமா லிண்டாவில் நல்ல வேலை செய்யப்படலாம். இப்போதைக்கு இந்த வேலையைக்குறித்த ஏற்பாடுகள் திட்டவட்டமாக தீர்மானிக்கப்படாவிட்டாலும், அங்கிருக்கிற சகோதரர்கள் விரைவாக இதைத் துவங்கவேண்டும். லோமா லிண்டாவிலிருக்கிற நம்முடைய சகோதரர்கள் அவிசுவாசிகளின் மனங்களுக்கு இந்தக் காலத்தின் சத்தியத்தைக் கொண்டுவரும் முறையாக ஆரோக்கிய உணவு வேலையை செய்வது எப்படி என்பதை ஆராயும்போது, ஆண்டவர் தமது ஆசீர்வாதங்களை சேர்த்து, இந்தத் தொழிலை நடத்தும் முறைகளை தெளிவாக்குவார்.

தெற்கு மாநிலங்களிலும் இதேபோன்ற வேலை முன்கொண்டு செல்லப்படவேண்டும். தெற்கில் சத்தியத்தை ஏற்றுக்கொண்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் சில வேளைகளில் வேலை தேடுவதில் உதவி தேவைப்படுகிறது. சுவிசேஷ வேலையில் ஈடுபடும் சந்தர்ப்பம் அநேகருக்குக் கிடைக்கும். அவர்கள் இந்த வேலையோடு சேர்த்து எளிமையான சுவையான உணவை எவ்வாறு ஆயத்தஞ்செய்வது என்று உலகத்தாருக்கு கற்பிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

நாஷ்வில் பட்டணத்திற்கு வெளியே இருக்கும் சாத்தியங்கள் மக்களுக்கு ஆரோக்கியமுள்ள உணவுகளை ஏற்பாடு செய்ய பயன்படுத்தப்படவேண்டும். இந்த வேலையை முன்கொண்டுசெல்ல விலையுயர்ந்த கட்டடங்கள் அவசியமில்லை. சத்தியம் தண்ணீருக்கு அருகிலுள்ள இடங்களிலெல்லாம் விதைக்கப்படவேண்டும் என்கிறதை ஆரோக்கிய உணவு ஊழியர்கள் உணரட்டும். ஆரோக்கிய உணவு வேலையில் இருக்கும் என் சகோதரரே, மனங்களில் பதிப்புகளை ஏற்படுத்தும் வார்த்தைகளைப் பேசுங்கள். ஆத்துமாக்களை மாற்றும் வழியாக இருக்கும் கூட்டங்களை நடத்துங்கள்.

ஆரோக்கிய உணவு வேலையை நிகழ்கால சத்தியத்தின் முன்னேற்றத்திற்காக முறையானவிதத்தில் கொண்டுசெல்ல ஆயத்தப் பட்டவுடனே துவங்குவது, அவர்களுக்கு நலமாக இருக்குமென்று முன்பு தென்பகுதியிலுள்ள நம்முடைய சகோதரருக்கு எழுதியிருந்தேன். நாஷ்வில்லுக்கு சமீபமாக ஒரு உணவு ஆலையை நடத்த ஞானமுள்ள திட்டம் போடப்படுமானால், அது அநேகர் வேலைபெற ஒரு நல்ல சந்தர்ப்பத்தை கொடுக்கும். ஆனாலும் விலையுயர்ந்த உணவுகளை உற்பத்திசெய்து கையாள தென்பகுதியிலுள்ள நம்முடைய சகோதரரும், அல்லது மற்ற துறைகளில் இருப்பவர்களும் அதிக பணத்தைப் போடாமலிருக்கட்டும். ஆண்டவர் நமக்குக் கொடுத்திருக்கும் விளைச்சல்களை பயன்படுத்தலாம். ஆண்டவர் போதிக்கிறவர்களின் திறமையான கரங்களாலும் மனங்களாலும் இவைகள் தயாரிக்கப்படவேண்டும். சுயநலமின்றி வேலைசெய்யக்கூடிய மனங்கள் நமக்குத் தேவை.—MS 81, 1906. Written September 27, 1906.

## ஆரோக்கிய வேலையின் இறுதி நோக்கம்

கிறிஸ்துவின் சுவிசேஷம் மக்களுடைய கவனத்துக்குக் கொண்டுவரப்படும்விதத்தில் நடத்தப்பட்டால், ஆரோக்கிய உணவு வேலை பலன்தருவதற்கேதுவாக செய்யப்படலாம். ஆனால் லௌகீக தேவைக்கு வழங்கும் உணவுகளை மாத்திரம் தயாரிக்க செய்யப்படும் முயற்சிகளுக்கு எதிரான எச்சரிப்பான என் குரலை நான் உயர்த்துகிறேன். ஜீவ அப்பத்தை மக்களுக்குக் கொடுக்க எந்த விசேஷ முயற்சியும் எடுக்காதபோது, உணவுகள் உற்பத்திக்காக அவ்வளவு நேரத்தையும், ஆண் பெண்களுடைய அவ்வளவு திறமைகளையும் உபயோகிப்பது, தீவிரமான தவறு ஆகும். நித்திய வாழ்க்கைக்கான வழியை வெளிக்காட்டுவதை நோக்கமாக கொண்டில்லாத வேலையை மாபெரும் ஆபத்துகள் சந்திக்கும்.—MS 10, 1906. (Counsels on Diet and Foods, p. 277).

# பகுதி 3

## இதர காரியங்கள்

### பஞ்சம் அதிகரிக்கும்போது உணவுகள் எளிமையாக்கப்படும்

உணவைக்குறித்த கேள்வி இன்னும் பூரணத்தை எட்டவில்லை. இந்தக் காரியத்தில் கற்றுக்கொள்ளவேண்டியவை இன்னும் அதிகமாக இருக்கிறது. உணவுகள் தயாரிப்பில் தேவையான, ஆனால் இன்னும் தயாரிக்கப்படாத, குறிப்பிட்ட பொருட்களை ஒன்றிணைப்பதுகுறித்த ஆண்டவருடைய கருத்துப் பதிப்புக்களை பெற்றுக்கொள்ளும் நிலையில் உலகெங்கிலுமுள்ள தம்முடைய மக்களின் மனங்கள் இருக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

பஞ்சமும், குறைவும், துயரமும் உலகத்தில் மேலும்மேலும் அதிகரிக்கும்போது, ஆரோக்கிய உணவு தயாரிப்பு, மிகவும் எளிமையான தாக்கப்படும். தம்முடைய ஜனங்களை நேசித்து, அவர்களின் நன்மையை எப்போதும் தம் கண்முன் வைத்திருக்கிற மாபெரும் ஆசிரியரிடமிருந்து இந்த வேலையில் ஈடுபட்டிருப்பவர்கள் நிலையாக கற்றுக்கொள்ளவேண்டும்.— MS 14, 1901. (Counsels on Diet and Foods, p. 271).

### வெவ்வேறு நாடுகளில் அங்கங்கு விளைகிறவைகளிலிருந்து உணவுகள்

வெவ்வேறு நாடுகளிலிருக்கிற அநேகருக்கு ஆரோக்கிய உணவுகள் குறித்த அறிவை ஆண்டவர் தருவார். அவரால் வனாந்தரத்தில் ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தமுடியும். ஆரோக்கிய சீர்திருத்தக் கொள்கைகளை பழக்கப்படுத்த முயற்சிசெய்யும் நம்முடைய சபைகளால் ஆரோக்கிய உணவுகள் ஆயத்தப்படுத்தப்படவேண்டும். ஆனால் இதை அவர்கள் நிச்சயமாகச் செய்யும்போது, தங்களுடைய உரிமைகளில் அத்துமீறி நுழைவதாகச் சிலர் சொல்லுவார்கள். ஆனால் இந்த உணவுகளை ஆயத்தப்படுத்த அவர்களுக்கு ஞானம் கொடுத்தவர் யார்? —பரலோகத்தின் தேவன். அதே தேவன், வெவ்வேறு நாடுகளிலுள்ள தம்முடைய மக்களுக்கு அந்த நாடுகளிலுள்ள விளைச்சல்களை ஆரோக்கிய உணவுகள் தயாரிப்பில் உபயோகிக்க ஞானம் கொடுப்பார். நம்முடைய மக்கள் தாங்கள் வசிக்கும் நாட்டிலிருக்கிற பழங்களையும் தானியங்களையும் வேர்களையும்

உபயோகித்து, எளிமையான, விலைகுறைந்த வழிகளில் பரிசோதனைகள் செய்யவேண்டும். வெவ்வேறு நாடுகளில் ஏழைமக்களின் நன்மைக்காகவும், நம்முடைய சொந்த மக்களுடைய குடும்பங்களின் நன்மைக்காகவும் விலைகுறைவான ஆரோக்கிய உணவுகள் உற்பத்தி செய்யப்படவேண்டும்.

வெளிநாடுகளிலிருக்கும் தம்முடைய மக்கள் தங்களுடைய ஆரோக்கிய உணவிற்காக, அமெரிக்காவீருந்து இறக்குமதி செய்யப்படும் ஆரோக்கிய உணவுகளை நம்பி இருக்கக்கூடாது என்பது தேவன் எனக்குக் கொடுத்த செய்தி. வழிச்செலவும், வரியும் இந்த உணவுகளின் விலையை உயர்த்துவதினால், செல்வந்தர்களைப்போன்றே தேவனுடைய பார்வையில் மதிப்புமிக்க ஏழைகள், இதனால் பயனடையமுடியாதுபோய்விடும்.

ஆரோக்கிய உணவுகள் தேவனுடைய தயாரிப்புகள். மிஷனரி தளங்களிலிருக்கிற தம்முடைய பிள்ளைகளுக்கு நிலத்தின் விளைச்சல்களை ஒன்றிணைக்க போதிப்பார். எளிமையான விலைகுறைந்த ஆரோக்கியமுள்ள உணவுகள் ஏற்படுத்தப்படும். அவர்கள் தேவனிடமிருந்து ஞானத்தை தேடினால், எவ்வாறு திட்டமிடுவது என்றும் இந்த தயாரிப்புகளை எவ்வாறு உபயோகிப்பது என்றும் அவர் கற்றுத்தருவார். அவர்களை தடைசெய்யவேண்டாம் என்று சொல்ல நான் அறிவுறுத்தப்பட்டேன்.—MS 40, 1902. (Counsels on Diet and Foods, pp. 271–2).

சுகாதாரமான உணவகங்கள் ஒவ்வொன்றும் ஒரு பள்ளியாக இருக்கவேண்டும். நம்முடைய பட்டணங்களில் விருப்பமுள்ள தொழிலாளிகள் மிஷனரி முயற்சிகளின் வெவ்வேறு துறைகளைப் பற்றிக்கொள்வார்கள். சுகாதாரமான உணவகங்கள் நிறுவப்படும். ஆயினும் எப்படிப்பட்ட கவனத்தோடு இந்த வேலை செய்யப்படவேண்டும்! சுவையான, ஆரோக்கியமுள்ள உணவுகளை எவ்வாறு தயாரிப்பது என்பதை கற்றுக்கொள்ளுவதற்கேதுவாக, இந்த உணவகங்களில் வேலை செய்கிறவர்கள் தொடர்ச்சியாக ஆராய்ச்சி செய்யவேண்டும். சுகாதார உணவகங்கள் ஒவ்வொன்றும், அதோடு இணைந்துள்ள தொழிலாளர்களுக்கு ஒரு கல்விக்கூடமாக இருக்கவேண்டும். சிறிய இடங்களைவிடவும், பட்டணங்களில் சற்று பெரிய அளவிலேயே இந்த வேலை நடத்தப்படலாம். ஆனால் சபையும், சபைப் பள்ளியும் இருக்கும் ஒவ்வொரு இடத்திலும், ஆரோக்கிய சீர்திருத்தக் கொள்கைகளுக்கிசைவாக வாழ விரும்புகிறவர்களின் உபயோகத்திற்காக, எளிமையான ஆரோக்கிய உணவுகளை தயாரிப்பதுகுறித்த அறிவுரை கொடுக்கப்படவேண்டும். இதேபோன்ற வேலை, நம்முடைய அனைத்து மிஷனரி தளங்களிலும் செய்யப்படலாம்.—MS 79, 1900. (Counsels on Diet and Foods, pp. 274–5).

## நம்முடைய உணவகங்கள் கொள்கைக்காக நிற்கவேண்டும்

தோற்றத்திற்கு பாதிப்பு இல்லாததாக இருந்தாலும், நம்முடைய உணவகங்களில் என்றைக்கும் பராமரிக்கப்படவேண்டிய கொள்கைகளைத் தியாகம் செய்ய நடத்தும் காரியங்களை அறிமுகப்படுத்துவதற்கெதிராக நாம் நிலையாக காவல்காக்கவேண்டும். எடுத்தவுடனேயே ஆரோக்கியமுள்ள எளிமையான பசியைத்தூண்டக்கூடிய உணவை எவ்வாறு தயாரிப்பது என்பதை, தங்கள் வாழ்நாள் முழுவதும் பசியார்வத்தில் திளைத்தவர்கள் புரிந்துகொள்வார்கள் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. ஒவ்வொரு சுகாதார மையமும் ஆரோக்கிய உணவகங்களும் போதிக்கவேண்டிய அறிவியல் இது…

நாம் சரியான கொள்கைகளிலிருந்து விலக மறுப்பதால், நமது உணவகங்களின் ஆதரவாளர்கள் குறைந்தால், குறையட்டும். நல்ல அறிக்கையைப்போலவே தீய அறிக்கையின் வழியாகவும் நாம் ஆண்டவருடைய வழிகளை காத்துக்கொள்ளவேண்டும்.

## ஆரோக்கிய உணவு வேலையின் இறுதி நோக்கம்

சரியானதை பற்றிக்கொள்ளவும், கொள்கையை தியாகம்பண்ணாத பட்சத்தில் நம்முடைய சுகாதார மையங்களிலும் உணவகங்களிலும் கொண்டுவர இயலாதவைகளை ஒதுக்கிவிடவும் உதவும்படியாக இவைகளை என் கடிதங்களின்வழியாக உங்களுக்குக் கொடுக்கிறேன்.—Letter 201, 1902. (Counsels on Diet and Foods, p. 275).

*****